www.tamilarangam.net

# தேசபக்தன்

தமிழீழ மக்களின் புரட்சிகர சனநாயக அரசியல் இதழ் - 11, மார்கழி - 1995

★ சிறீலங்கா அரசின் தேசிய இன அழிப்பு யுத்தத்தை எதிர்த்துப் போராடுவோம்!

★ தமிழ் தேசிய இன அழிப்புக்கு உதவும் இந்தியரசின், உலக நாடுகளின் இராணுவ உதவிகளை அம்பலப்படுத்துவோம்! நிறுத்த நிர்ப்பந்திப்போம்!

★ இந்திய அரசின், அய்க்கிய நாடுகள் சபையின், 'நேட்டோ'வின் ''அமைதி - சமாதான'' படைகளின் தலையீட்டை எதிர்ப்போம்!

— சந்திரிகா அரசின் இன ஒடுக்கு முறை யுத்தத்தை நிறுத்த நிர்ப்பந்திக்குமாறு கோருவோம்!

— தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க கோருவோம்!

★ சிறீலங்கா அரசுடனான பேச்சு வார்த்தைக்கு 'திம்புக் கோரிக்கை'களை முன்னிறுத்துவோம்!

★ தமிழீழ தேசபக்த, புரட்சிகர சக்திகளே! போராளிகளே! அமைப்புக்களே!
ஒன்றுபடுவோம்! ஓரணியாவோம்! போராடுவோம்!

**PATRIOTIC VANGUARD'S ORGANIZATION OF THAMILEELAM (PVOT)**

www.tamilarangam.net

# தேசபக்தன்

*தமிழீழ மக்களின் புரட்சிகர சனநாயக அரசியல் இதழ் 11. அன்பளிப்பு: ரூபா 10*

**'நமது சொந்த விருப்பத்தைப் பொறுத்த வரை நாம் ஒருநாள் கூட போரிட விரும்பவில்லை. ஆனால் சூழ்நிலைகள் நம்மை போரிடும்படி நிர்ப்பந்தித்தால் நம்மால் இறுதி வரை போரிட முடியும்.'**

— *மா.சே. துங்* —


மடல் தொடர்புகளுக்கு

K. RAYAH
61, CHRISTINA
(RESTENT)
SCAR BOROUCGH
MIR 4 H 7
ONTARIO
**CANADA**


உள்ளே


★ வடக்கே 'இன ஒடுக்குமுறை' யுத்தம் தெற்கே 'வெண்தாமரை' இயக்கம்

★ 'அம்மா அழாதே'!

★ தேசபக்தன் பார்வையில்

★ அய்.நா. சபை தலையிடக் கோரும் போராட்டங்கள் பற்றி...

★ சமாதானம் - ஆம் ஜனநாயகத்துடன்....

★ பெருஞ்சித்திரனார்க்கு அஞ்சலி

★ தேசிய ஒடுக்குமுறை யுத்தமும் தமிழீழப் பெண்களின் போராட்டமும்

★ 'திம்புக் கோரிக்கைகளை உயர்த்திப் பிடிப்போம்'!

★ தோழர் விசுவாவை நினைவு கூர்வோம்!

★ ஒரு அடிமையின் கல்லறையில்....!


**அன்பான வாசகர்களே!**

*சிறீலங்கா அரசினதும் - தமிழீழ அராஜக இயக்கத் தலைமைகளதும் கெடுபிடிகளை மீறி, தேச* எல்லைகளைத் தாண்டி, பொருளாதார, அச்சுப்பதிப்பு நெருக்கடிகளை சந்தித்த வண்ணம் ''தேசபக்தன்'' உங்கள் கைகளில் நிற்கிறான். தமிழீழ மக்களின் போராட்ட வீரனாக, உலகின் ஒடுக்கப்பட்ட தேசங்களின், மக்களின் தோழனாக ''தேசபக்தன்'' வளர வேண்டும். தேசபக்தனை மற்ற தோழர்களின் கரங்களுக்கு மாற்றி உதவுங்கள். உங்கள் ஆலோசனைகளை, ஆதரவுகளை எங்களுக்கும் ஒரு வரி எழுதுங்கள்.

*தமிழீழ தேச பக்த முன்னணியினர் கழகம் (த.தே.மு.க.)*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வடக்கே "இன ஒடுக்குமுறை யுத்தம்" தெற்கே "வெண்தாமரை இயக்கம்"

இலங்கையில் தமிழ் தேசிய இன மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம், தமிழீழத் தேசிய விடுதலைக்கான ஆயுதப் போராட்டமாக பரிணமித்ததிலிருந்து சிறீலங்கா இனவாத அரசும் இராணுவமும் நடத்திவரும் தமிழின ஒடுக்குமுறை யுத்தத்தில் J.R. தொடங்கி சந்திரிகா அரசுவரை, அத்துலத்முதலி முதல் அனுருத்தரத்வத்த வரை எல்லாரும் நடத்திய அரசியல் — இராணுவ திட்ட நடவடிக்கைகள், 'ஒப்பரேசன் லிபரேசன்' முதல் இன்றைய 'ஒப்பரேசன் சூரிய ஒளி' வரை அனைத்தும் "தமிழ் மக்களைக் காப்பாற்றுவது" என்ற பெயரில் தமிழ் மக்களை - போராளிகளை அழிக்கின்ற பிளவை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தான்.

1986 ஒப்பரேசன் லிபரேசன் முதல் "தமிழ் பயங்கரவாதிகளிடம் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க", "தமிழ் பயங்கரவாதிகளை வளர்த்து விடும் இந்தியாவிடம் இருந்து இலங்கை மக்களை பாதுகாக்க" என்ற பெயரில் சிறீலங்கா அரசால் பல இராணுவ திட்ட நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. 1987 யூலை இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின் இந்திய அரசும் இந்திய ஆக்கிரமிப்பு படையும் 1991 யூனுக்கு பின் பிறேமதாசா அரசும் "புலிகளிடம் இருந்து தமிழ் மக்களை பாதுகாக்க" என்று கூறி பல இராணுவ திட்ட நடவடிக்கைகளை நடத்தியுள்ளனர். 1994-ல் சந்திரிகா ஆட்சிக்கு வந்த பின் "புலிகளை அழித்து தமிழ் மக்களுக்கு சமாதானம் வழங்கும்" மூன்று இராணுவ "ஒப்பரேசன்கள் லீப்போர்போட்" விருந்து "ஒப்பரேசன் றீவோசா" வரை எல்லாம் தமிழீழ மக்களைப் பெருமளவில் கொன்று குவித்து வீடுகளை, விளைபூமியை, தொழிற்சாலைகளை சுடுகாடாக்கியுள்ளது. இலட்சக்கணக்கான மக்களை அகதிகளாக்கியும் அனாதைகளாக்கியும் உள்ளது.

1983 யூலை இனப்படு கொலையை, வெலிக்கடைசிசிறைப் படுகொலைகளை நினைத்து பாருங்கள். 1986 யூலைக்கு பின் 'ஒப்பரேசன் லிபறேசன்' நடவடிக்கையில் J.R. தலைமையில் வடமாராச்சி தமிழினப் படுகொலைகள், 1987 யூலை ஒப்பந்தத்தின் பின் ராஜீவ் காந்தி தலைமையில் இந்திய ஆக்கிரமிப்பு படைகளின் கொலை வெறியாட்டம் வல்வை படுகொலைகள், 1991 யூனுக்கு பின் பிறேமதாசாவின் அரசு கிழக்கில் நடத்திய படுகொலைகள், 1995 யூனுக்கு பின் சந்திரிகா தலைமையில் நடக்கும் இன்றைய யாழ்பாணம் மீதான இராணுவ நடவடிக்கைகள். தமிழ் மக்கள் எதிர் கொண்டு வரும் துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள், அழிவுகள் வேதனை மிகுந்த கடந்த கால நிகழ்ச்சிகள் மீண்டும் மீண்டும் மீண்டும் மனக்கண்ணில் வந்து நெருடுகின்றது.

சந்திரிகா அரசின் இராணுவ திட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்ட கிராமங்கள், சிறு நகரங்களிலிருந்து, $3\frac{1}{2}$ இலட்சம் தமிழ் மக்கள் (யாழ்ப்பாணத்தின் 60% மக்கள்) தங்கள் உற்றார், உறவினர்களை பலி கொடுத்துவிட்டு, வீடு வாசல்களை இழந்து ஆண்களும் - பெண்களும் பச்சிளங் குழந்தைகளும் - வயோதிபர்களும் அகதிகளாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

ஒரே நேரத்தில் எல்லா பற்களும் அடித்து நொறுக்கப்பட்டு, புடுங்கப்பட்ட மனிதன் என்ன வேதனையில் உழல்வான். தங்கள் வாழ்வின் எல்லா வேர்களும் புடுங்கப்பட்ட வெட்டிவிடப்பட்ட நிலையில் இடைவிடாது கொட்டும் மழையில் நாவற்குழி பாலத்தின் வழியே தங்களால் சுமக்க கூடியவற்றை மட்டும் சுமந்து கொண்டு வெளியேறுகிறார்கள். செல் அடிக்கும் குண்டு தாக்குதலுக்கும் பயந்து ஓடும் மக்கள் கூட்டத்தின் நெரிசலில் மிதிபட்டு விழுந்தவர்களும் இறந்தவர்களும் போக மற்றவர்கள் நாட்கணக்கில் உணவு இன்றி மழைநீரைக் குடையில் எடுத்து குடித்த வண்ணம் தள்ளாடி தள்ளாடி நடக்கிறார்கள். மழை வெள்ளத்தில் குண்டும் குழிக்குள்ளும் வீழ்ந்து எழும்பி சதுப்பு மண்ணில் ஒவ்வொரு காலடியும் எடுத்து வைக்க முடியாமல் மூச்சு வாங்கியபடி மண்ணையும், மைந்தர்களையும் கணவனையும் மனைவியையும் இழந்து விட்ட ஏக்கத்தில் அடிமேல் அடி வைத்து $3\frac{1}{2}$ இலட்சம் தமிழ் மக்கள் சாவகச்சேரி பகுதியில் நுழைந்திருக்கிறார்கள். தெரு ஓரங்களில் மரங்களின் கீழ், பள்ளிக் கூடங்கள், கோயில்கள், வைத்திய சாலைகளில் அழுது தொலைப்பதற்கு கண்ணீர் கூட இல்லாது ஏங்கிய பார்வையுடன் விறைத்து போய் இருக்கிறார்கள். குளிரால், வயிற்று போக்கால், காய்ச்சலால், வாந்தி பேதியால் தொற்று நோய்களால் படுத்த படுக்கையாக பலர் கிடக்கிறார்கள். அடுத்த பக்கம் யாழ் கடலேரி வழியாக (கிளாலி ஊடாக) தப்பிச் சென்ற 70,000-க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் கிளிநொச்சியில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். 50,000 பேர் வவுனியா வரை சென்றுள்ளார்கள். சில தாய்மார்கள் தங்கள் அரவணைப்பில் கடும் மழையில் நனைந்தபடி தூக்கி வந்த குழந்தைகளை படகுகளை விட்டு இறங்கியதும் பிள்ளைகளின் முகங்களை திருப்பி பார்க்கையில் குழந்தைகள் இறந்து போயிருப்பதை பார்த்ததும் மண்டையில் அடித்தபடி அலறுகிறார்கள். "இந்த பிள்ளைகளை காப்பாற்ற வேண்டும், இதற்காக கணவனை பலி கொடுத்த பின்னும் இவ்வளவு தூரம் நடந்து வந்தோமே, காப்பாற்ற முடியாது என்றால் தாங்கள் ஊரிலேயே இருந்து செத்திருப்போம்" என புலம்புகிறார்கள். அகதிகளைப் பார்வையிடச் செல்லும் அரசு அதிகாரிகளிடம் வயோதிபர்கள் தங்களுக்கு தேத்தண்ணீரில் நஞ்சு கலந்து தந்து கொன்றுவிடும்படி சின்ன பிள்ளைகள் போல் கெஞ்சுகிறார்கள், எங்கும் உணவுக்கும், மருந்துக்கும் பஞ்சம். இதனால் பல தமிழர்கள் சாவை நோக்கி நெருங்கி போய்க் கொண்டிருக்கிறார்கள்.

இந்த உண்மை நிலவரங்களை சிறீலங்கா அரசுக்கும், உலக மக்களுக்கும் செய்தி நிறுவனங்களுக்கும் வெளியிட்டு கண்ணீர் விட்டு, சாவகச்சேரிப் பகுதியை பாதுகாக்கப்பட்ட பகுதியாக" அரசு அறிவிக்க கோரிய யாழ் அரசாங்க அதிபர் பொன்னம்பலம் சமாதான சந்திரிகா அரசால் பதவி பறிக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி அரசு அதிபர், கிளிநொச்சி பகுதியில் முன்னதாகவே அரசு படைகளின் தாக்குதலால் இடம் பெயர்ந்த 46,000 மக்களையும், புதிய 70,000 யாழ் அகதிகளையும் எப்படி பராமரிப்பது? என திக்குமுக்காடுகிறார். அரசிடம் உணவும் மருந்தும் வேண்டி மன்றாடுகிறார்.

சந்திரிகா அரசின் மூன்று இராணுவ ஒப்பறேசன்களிலும் கோயில், பள்ளி, வைத்தியசாலை என பாதுகாப்பான இடங்களில் கூட நடந்த செல் அடிகளாலும் விமான குண்டு வீச்சுக்களாலும் 1000-க்கும் மேலான மக்கள் யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆயிரக்கணக்கான சிறுவர்களும், பெரியவர்களும் கை-கால்களை இழந்து காயம்பட்டுள்ளனர். இராணுவம் முன்னேறி கைப்பற்றிய பகுதிகளில் வீடுகள், பள்ளிகள், தேவாலயங்கள் குண்டு வீச்சுக்களால் நொறுங்கி போயுள்ளது. பல வீடுகள் புல்டோசர் மூலம் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. வீட்டு தோட்டங்கள் - வாழைத் தோட்டங்கள் வெட்டிவீழ்த்தப்பட்டுள்ளது. அரசு படைகளை எதிர்த்துப் போராடி 750-க்கும் மேலான புலிப்போராளிகள் வீரமரணம் அடைந்துள்ளனர். ஆயிரமளவில் காயம்பட்டுள்ளனர். யுத்தத்தில் நடக்கும் இழப்புக்களை வெளிப்படுத்துவதில் நடக்கும் மனோவியல் தாக்குதலில் அரசு அறிவிப்பு படி

www.tamilarangam.net



'சூரிய ஒளி' நடவடிக்கையில் மட்டும் 9 இராணுவ அதிகாரிகளும், 400 இராணுவத்தினரும் இறந்துள்ளனர். 81 அதிகாரிகளும் 1670 இராணுவத்தினரும் காயம்பட்டுள்ளனர்.

சந்திரிகா அரசாங்கம் உள்நாட்டின், உலகநாடுகளின் செய்தி அமைப்புக்களும், செய்தியாளர்களும் கண்டிக்கின்ற அளவுக்கு சந்திரிகாவின் சூரிய ஒளியால் பாதிக்கப்படும் பகுதிகளுக்கும் செய்தியாளர்கள் சென்றால் கண் கெட்டுவிடும் என்பதால் தடைவிதித்துள்ளனர். யுத்தகளத்தின் செய்திகள் முழுமையாக திட்டமிட்டு மூடி மறைக்கப்படுகிறது. மீறி வரும் சிறு துளிச் செய்திகளும் கடும் தணிக்கைக்கு பாதுகாப்பு துறை உட்படுத்துகிறது. போர்க்கள பகுதிக்கு மட்டுமல்ல அகதிகள் வெளியேறி தங்கியுள்ள பகுதிக்கு செல்லவும் தடையுள்ளது. சந்திரிகாவின் திறந்த சமாதான மனதை சுதந்திரமான பத்திரிகையாளர் சங்கங்கள் கண்டித்து அம்பலப்படுத்துகின்றன. உலகின் போர்க்கள செய்தி விமர்சகர் ஒருவர் கூறுகிறார். ''யாழ் போர்கள செய்தி சேகரிக்க வந்த நான் 400 மைல்களுக்கு அப்பால் இருந்து போர்க்களச் செய்தி பற்றி கொழும்பில் விமர்சிக்க முடியுமா?'' என் வாழ்நாளில் இது முதல் அனுபவம் என்கிறார். U.N., U.N.H.C.R. அகதிகளுக்கு உதவும் கோரிக்கை கூட அரசால் நிராகரிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு அரசுசாரா நிறுவனங்கள் நேரடியாக அகதிகளுக்கு உதவ தடைவிதிக்கப்பட்டுள்ளது. ''இந்த நிறுவனங்கள் ஏன் புலிகளுக்கு உத்வமாட்டார்கள்'' ''அகதிகள் பிரச்சனை யுத்தத்தடன் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளது அதை அரசு பார்த்து கொள்ளும்'' அகதிகளின் உண்மையான எண்ணிக்கையை கூட 1 இலட்சம் என பொய் சொல்லும் அகதிகள் புனர்வாழ்வு அமைச்சர் அஸ்ராப்பின் வார்த்தைகள் இவை. ''நான் ஒரு காலத்தில் பத்திரிகை செய்தியாளராக இருந்தவன்'' என்று எக்காளமிடுகிறார்.

சந்திரிகா ''புலிகள் ஆயுதங்களை கீழே போடும்வரை யுத்த நிறுத்தம் பற்றிய பேச்சுக்கு இடமில்லை'' என U.N. இன் 50 வது அமெரிக்க நினைவு தின கூட்டத்தில் அறிவித்துள்ளார். 2000 கோடி ரூபா. வீணடிக்கப்படுவதாக அன்று அழுத சந்திரிகாவும் அது நாட்டை முன்னேற்ற பயன்பட்டிருந்தால் எப்படி நாடு இருக்கும் என கனவு காண மக்களை கேட்ட சிறிமாவும், இன்று 'வெண் தாமரை' இயக்கத்துக்கு எத்தனை கோடி ரூபாய் கொட்டுகின்றார்கள். இனவெறி யுத்தத்துக்கு சிங்கள மக்களிடம் எத்தனை கோடி ரூபாய் திரட்டுகிறார்கள். 500 பில்லியன் ரூபாவும் மேலும் 1 இலட்சம் இராணுவத்தையும் சிங்கள தாய்மார் தந்தால் தமிழ் புலி பயங்கரவாதத்தை அடக்கிவிட முடியும் என்கிறார்கள். தனியார் துறையும் பொதுத் துறையும் பிரபாகரனை பிடிக்க 250 மில்லியன் ரூபாய்களை தந்ததாக வெளிப்படையாக அறிவித்துள்ளது. சனாதிபதி மகளும் பிரதமர் அம்மாவும் இறுதியாக இவ்வாண்டு வரவு செலவு திட்டத்தில் 1995-ம் ஆண்டுக்கு 640 மில்லியன் டொலரும், 1991-ஆம் ஆண்டுக்கு 760 மில்லியன் டொலரும் இராணுவத்துக்கு ஒதுக்கியுள்ளனர்.

சிறீலங்கா அரசு யாழ்நகரை ''சூரிய ஒளி இராணுவ நடவடிக்கை'' மூலம் கைப்பற்றியதும் - இராணுவத்தை வாபஸ் பெற்றுவிடும் இராணுவ துணைப் படைகளை கலைத்தும் விடும். தமிழ் மக்களுக்கு சமாதானத்தை கொடுக்கும், சிங்கள மக்களை சுபிட்சமான வாழ்க்கைக்கு அழைத்து செல்லும், இலங்கையை உலக நாடுகள் தரத்து உயர்த்தும் இவற்றுக்காக இராணுவத்துக்கு 760 மில்லியம் டொலர் தேவை. எந்த புத்திசாலிகள் இதை நம்பமாட்டார்கள். இதை நம்ப மறுக்கும், போராடும் முட்டாள்களான தமிழ் பயங்கரவாதிகளுக்கும் மக்களுக்கும், சிங்கள தீவிரவாதிகளுக்கும் - மக்களுக்கும் எதிராக மட்டும் தான் தொடர்ந்தும் சிறீலங்கா இராணுவத்தை சந்திரிகா பயன்படுத்துவார். தனது மூதாதையர்கள்போல் தமிழ் இன ஒடுக்குமுறை யுத்தத்துக்கு சந்திரிகா சமாதான முகமூடியுடன் தலைமை தாங்குவார் என்பதில் யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை.

## சிறீலங்கா அரசின் தமிழின ஒடுக்குமுறை யுத்தமும் சந்திரிகாவின் சமாதான முகமூடியும்

J.R. செயவர்த்தனா தலைமையில் தொடக்கி வைக்கப்பட்ட இன ஒடுக்குமுறை யுத்தம் தமிழ் மக்களை - போராளிகளை அடிபணியச் செய்யும் வரை ஓயப்போவதில்லை என்ற சபதத்துடன் நிற்கின்றது. தொடர்ந்தவரும் சிறீலங்கா அரசின் இனவாத, மதவாத தலைமைகளால் இவ்ஒடுக்குமுறை யுத்தம் வழி நடத்தப்படுகின்றது. புதிய புதிய அரசியல் - இராணுவ தந்திரங்களுடன் ''ஒப்பறேசன் சூரிய ஒளி'' வரை பல பெயர்களில் தமிழ் மக்களை அழிக்கவும் போராட்டத்தை நசுக்கவும் முயன்று வருகின்றது.

இலங்கையின் வரலாற்றில் ஆட்சிக்கு மாறி மாறி வந்த U.N.P., S.L.F.P. கட்சிகள் இவர்களது கூட்டணியாளர்கள் தமிழ் மக்களின் தேசிய இன உரிமைகளை பறிப்பதில் போராட்டங்களை நசுக்குவதில் ஒரு கட்சி கூட்டணிக்கு மற்ற கட்சி கூட்டணி சற்றும் குறைவாக செயல்படவில்லை என்பது வரலாறு இவர்கள் அனைவரும் சிங்கள இனவாத, பௌத்த மதவாத சக்திகளுக்கும் உள்நாட்டு ஆளும் வர்க்கங்கள் - உலக வல்லரசியங்களுக்கும் அவர்களது நலன்கள் - கொள்கைகள் - கொள்ளைகளுக்கு விசுவாசமாக இருப்பவர்கள். நாட்டின் முழு மக்களையும் சுரண்டி ஒடுக்குவதில் ஒரே சித்தத்தை கொண்டவர்கள். தேர்தல்களில் இவர்களது முகப்பூச்சுகள் மேடைப்பேச்சுக்கள் மட்டும் கொஞ்சம் வித்தியாசமானவை. தமிழ் மக்கள் மேல் இன ஒடுக்குமுறை யுத்தத்தை நடத்துவதில் கூட இவர்கள் எல்லோரும் ஒரே ரகத்தை சேர்ந்தவர்களா? U.N.P. யும் கூட்டணிகளும் தானே யுத்தத்துக்கு தலைமை தாங்கி வந்திருக்கிறார்கள். S.L.F.P. யும் சந்திரிகா போன்ற தலைமையும் வித்தியாசமாக இருக்காதா? இந்த கேள்வி புலிகள் உட்பட பலருக்கும் இருந்தது. உண்மையில் ஆளும் வர்க்கங்களும் உலகவல்லரசியங்களும் S.L.F.P. க்கும் சந்திரிகாவுக்கும் ஆக தயாரித்த சமாதான முகமூடி இலங்கையில் வரலாற்றில் மிக மிக வித்தியாசமாக செய்யப்பட்டது. சந்திரிகாவின் தனித்தன்மைகள் அதற்கு மிகவும் பொருந்தியிருந்தது. பழைய அதே இனவாத கட்சிக்கு, ஆளும் வர்க்க வல்லரசிய நலன்களுக்கு புதிய முகமும் முகமூடியும் மெருகேற்றியிருந்தது. அதே ஆளும் வர்க்கம் - வல்லரசியங்கள் அவற்றின் இனவாத மதவாத குரல்களில், யுத்தம் பற்றிய தொனியில் மட்டும் புதிய தந்திரங்கள். இவற்றை புரிந்து கொள்வதில் பல குழப்பங்கள். இன்றும் தமிழ் மக்களின் தலைமைகளிடம் சந்திரிகாவின் 'அரசியல் தீர்வு திட்டம்', 'இராணவ தீர்வு திட்டம்' பற்றி தெளிவான உறுதியான பார்வை இல்லாதிருக்கின்ற அளவுக்கு குழப்பம் ஏற்படுத்தும் தந்திரங்கள்.

தமிழ் மக்கள், போராளிகள் மீது இன ஒடுக்குமுறை யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதில் கூட S.L.F.P யும் மக்கள் கூட்டணி அரசும் U.N.P. க்கு சற்றும் சளைத்ததில்லை என்பதை கடந்த 6 மாத காலத்தில் நிரூபித்து வருகிறது. அய்ப்பசி 17-ல் தொடங்கி இரண்டு மாதகாலம் தொடரும் அரசின் இன ஒடுக்குமுறை யுத்தம் ''ஒப்பறேசன் சூரிய ஒளி'' தமிழீழ மக்களுக்கும் நமது போராட்டத்தின் நியாயத்தை ஏற்க்கும் உலக மக்களுக்கும் சந்திரிகா அரசின் சமாதான முகமூடி திரை விலகி சிறீலங்கா அரசின் உண்மையான யுத்த வெறி முகத்தை அம்மணமாக காட்டுகிறது.

யுத்த நிறுத்தம் சித்திரை 19-ல் உடைந்து புலிகள் அரசு படைகளுக்கு எதிராக பல தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்தியது. சந்திரிகா அரசு இராணுவ ரீதியாக சந்தித்த பெரிய தோல்விகளை நிவர்த்திக்க பழிவாங்க ஒரு மூர்க்கத்தனமான இன ஒடுக்குமுறை யுத்தத்தை நடத்த தயாரானது. தமிழ் மக்களுக்கு எவ்வளவ துயரத்தை ஏற்படுத்தினாலும் - புலிகளுக்கு இராணுவ ரீதியில் பலமான அழிவை ஏற்படுத்த முடிவு செய்தது. இராணுவ பிரதியமைச்சர் அனுருத்தரத்வத்த புலிகள் மீதான இராணுவ தாக்குதல் திட்டம் பற்றி உயர் இராணுவ தலைமை அதிகாரிகளுடன் (19.06.95-ல்) நடத்திய கூட்ட நடவடிக்கைகள் இதை வெளிப்படுத்துகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இனப்பிரச்சனைக்கு தீர்வு காண தடையாகவுள்ள்தாக U.N.P. கால இராணுவத் தலைமையை குற்ற சாட்டி தன்னை மிகப் பெரிய சமாதான தேவதையாக காட்டிய சந்திரிகா தான் பதவிக்கு வந்த பின் நியமித்த புதிய விசுவாச இராணுவத் தலைமைகள் தனது அரசின் விரைவான யுத்த வெற்றி- புலிகளை நசுக்குவது பற்றிய ஆசைக்கு இராணுவ திட்டத்தை தயாரிக்கவில்லை என்பதால், எந்த இராணுவத் தலைமையை அரசியல் தீர்வுக்கும் - சமாதானத்துக்கு தடையாகவுள்ளதாக குற்றம் சாட்டினாரோ அதே இன ஒடுக்குமுறை யுத்தவெறி அனுபவம் மிக்க பழைய இராணுவ தலைமையில் 12 அதிகாரிகளுக்கு மீண்டும் பதவி உயர்வு கொடுத்து கொடூர யுத்த நடவடிக்கை மூலம் தனது ஆசையை - குரூரமான வெறியை தீர்க்க முன்னந்துள்ளார். இனப் பிரச்சனைக்கு இராணுவ தீர்வை முன் தள்ளினார். இதற்கு பெயர் ''தமிழ் மக்களை காப்பாற்ற - புலிகளை அழிப்பதாக'' பெயர் சூட்டியுள்ளது சிறீலங்கா அரசு.

முதலில் ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கை பெயரில் காரைநகர் கடற்படை இராணுவ முகாமிலிருந்து யூலை 9-ல் 10,000 துருப்புக்களுடன் யாழ் நகரை நோக்கி முன்னேற தொடங்கியது. கனரக பீரங்கிகள், கவச வாகனங்கள், விமானப் படை உதவியுடன் இராணுவம் வட்டுக்கோட்டை, ஆனைக்கோட்டை வழியாக பக்கவாட்டு தாக்குதலிலும் சித்தங்கேணி மாதகல் சண்டிலிப்பாய் அளவெட்டி வழியாக நேர்வழி தாக்குதலிலும் முன்னேறியது. இதை எதிர்த்து புலிகள் கடுமையாக மோதிய போதும் 70 சதுர கிலோ மீட்டர் பகுதிகளை அரசு படைகள் கட்டுக்குள் கொண்டு வந்தனர். முன்னேறிய பகுதிகளை நிலைப்படுத்திக் கொள்ள இராணுவம் முயன்று கொண்டிருந்தது. புலிகளை முறியடித்து முன்னேறும் வரை மக்கள் தங்கியிருந்த வீடு, பள்ளி கோயில் என பாராது பீரங்கி தாக்குதல், விமான குண்டு வீச்சு மூலம் தரைப்படையின் கண்மண் தெரியாத துப்பாகி பிரயோகம் நூற்றுக்கணக்கான மக்களை கொன்று குவித்தது. காயப்படுத்தியது. இந்த தாக்குதலில் நவாலி தேவாலயம் மீதான தாக்குதலில் குழந்தைகள் பெண்கள் என 135 பேர் கொல்லப்பட்டது முக்கிய சம்பவம். முன்னேறும் போது புலிகளை மக்களை வேறுபடுத்தாத இராணுவம், கட்டுப்பாட்டுள் வந்த பகுதியில் புலிகளை - மக்களை வேறுபடுத்த மக்களை அரசபடைகளை - அரசை நோக்கி திசைதிருப்ப உணவு வசதிகளும் மின்சாரம் இல்லாததால் ஜெனரேட்டர்களையும் கொண்டு வந்தது. மக்களுக்கு வெளிச்சம் கொடுக்க என அரசு பிரச்சாரம் செய்தது. உண்மையில் அது இராணுவத்தின் தேவைகளுக்கு பயன்பட்டது.

இவ்வாறு இராணுவம் நிலைப்படுத்தி தன்னை பலப்படுத்தி கொண்டிருந்த பகுதிகளில் பதிலடி தாக்குதலாக புலிகள் ''புலிப் பாய்ச்சல்'' தாக்குதலை அளவெட்டி, சண்டிலிப்பாய், காங்கேசன் துறை பகுதிகளில் நடத்தினர். 500-க்கும் மேலான இராணுவத்தை அழித்து சில பகுதிகளை மீண்டும் புலிகள் கட்டுக்குள் கொண்டு வந்தனர். நிலை குலைந்த இராணுவம் முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை''யை அராவியுடன் நிறுத்தியது. சிறீலங்கா அரசு நடத்தும் ஒடுக்குமுறை யுத்தத்துக்கு இராணுவத்துக்கு முக்கிய பக்க பலமாக இருப்பது விமானப் படையின் உதவி குண்டு வீச்சு 'புக்காரா' விமானங்களும் 'சூப்பர் சோனிக்' ஏரியல் 'பொம்பர்'களும், இராணவ உலங்கு வானூர்திகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. பலாலி விமானதளத்தில் இவை இறங்கி ஏறும் போது பக்கமாக இருந்து புலிகள் நடத்திய 'ஸ்விங்கர்' ஏவுகணை தாக்குதலால் இரண்டு புக்கார விமானங்கள் 150-க்கும் மேலான இராணுவத்தினரும் அழிக்கப்பட்டனர். 'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கையில் ஒரு உலங்கு வானூர்தியும் வீழ்த்தப்பட்டது. கொழும்புக்கு அருகே கடலில் வீழ்ந்து ஒரு புக்காரா விமானமும் 60 இராணுவத்தினரும் இறந்தனர். இதனால் அரசு படைகள் பலவீனப்பட்டன. அடுத்த இராணுவ நடவடிக்கைக்கு முன்பாக பலாலி முகாமை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து புலிகளை குறிப்பிட்டளவு தூரம் வெறியேற்ற முடிவு செய்தது. புலிகள் ஏவுகணைகளைப் பாவித்தாலும் விமானங்களை தாக்காத அளவு தூரம் புலிகளை அப்புறபடுத்தும் முகமாக பலாலி முகாமை சுற்றியுள்ள பகுதிகள் மேல் 'இடி முழக்கம்' இராணுவ நடவடிக்கை தொடங்கி நடத்தியது.

அடுத்து அய்ப்பசி 17-ல் பலாலி இராணுவ முகாமிலிருந்து மொத்தம் 20000 இராணுவத்தில் மூன்று பிரிகேட் இராணுவம் (ஒரு பிரிகேட் - 4500 இராணுவத்தினர்) 'சூரிய ஒளி இராணுவ நடவடிக்கையை''த் தொடங்கியது. யாழ் நகரை நோக்கி அச்சுவேலி, புத்தூர், கோப்பாய் வழியாக நேர்வாட்டு தாக்குதலும் பலாலி, வசாவிழான், உரும்பிராய் நீர்வேலி வழியாக பக்கவாட்டு தாக்குதலையும் நடத்தி முன்னேற முயன்றது. பலாலி முகாமில் இருந்து செல் அடித்தாக்குதலையும், சூப்பர் சோனிக் பொம்பர்கள் குண்டு வீச்சுக்களையும் நடத்திய படி இராணுவம் முன்னேறியது. 1987-ல் இந்திய ஆக்கிரமிப்புப் படை அக்டோபரில் யாழ் நகரைக் கைப்பற்ற முன்னேறிய வழிகளில் சிறீலங்கா இராணுவம் முன்னேற திட்டமிட்டு செயற்படுகிறது. 1991 யூனில் இருந்து இன்றுவரை புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளாக இருந்த இவ்விடங்களில் புலிகளின் பயிற்சி முகாம்கள், தலைமை பயிற்சி முகாம்கள், ஆயுத தயாரிப்பு சாலைகள், ஆஸ்பத்திரிகள், அரசியல் தலைமை பணிமனை, பொருளாதார திட்டமிடல் தலைமையகம், இவை நீர்வேலி கோண்டாவில், கொக்குவில் பகுதிகளிலிருந்தவை. இவற்றில் பெரும்பாலானவை அரசு படைகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது.

யாழ் நகரை கைப்பற்ற சில கிலோமீட்டர் தூரமும் சில தினங்களும் இருப்பதாக கடந்த 15 தினங்களாக கூறிவரும் இராணுவம் நவம்பர் 16-ல் தற்காலிகமாக முன்னேறுவதை நிறுத்தியுள்ளதாகவும், முன்னேறிய பகுதிகளை பலப்படுத்திக் கொள்ளுவதாகவும் விரைவில் கடைசி தாக்குதல் தொடங்கும் என்றும் இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது. வடகிழக்கு பருவமழைக்கு முன் இராணுவ தாக்குதலை முடித்துவிட நினைத்த இராணுவம், அவ்வளவு இலகுவாக புலிகளை எதிர்கொண்டு முன்னேற முடியவில்லை. இன்று பெரியளவில் பெய்யும் பருவ மழையை எதிர்கொண்டபடி, நகர்ப்புற கொரில்லா தாக்குதல் நடவடிக்கைகளை முறியடித்து முன்னேறுவதில் பயிற்சியும் - யுத்த அனுபவமும் குறைந்த தனது இராணுவத்தை கொண்டு பெரிய சிறிய ஒழுங்கைகள், குறுக்கு நெடுக்காக சிறிய சந்துகள் நிறைந்த யாழ்ப்பாணத்தின் நிலப் போக்குவரத்து வழிகளில் விழித்து நிற்கின்றது. புலிகளால் பிரதான சாலைகளில் நிலக்கண்ணி வெடிகள் பொறி வெடிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதால் சக்தி வயல்களில் புதைந்து புதைந்து அடி அடியாக முன்னேறி யாழ் நகரை கைப்பற்றும் முயற்சியில் இர்ராணுவம் உள்ளது.

புலிகளோ, தமது எல்லா வித யுக்திகளையும் கையாண்டு அடி அடியாக மூர்க்கமாக முன்னேறும் இராணுவத்தை தடுத்து நிறுத்த முடியாவிட்டாலும் கண்ணி வெடிகளை புதைத்து இயக்கி கொரில்லா தாக்குதல்கள் மூலம் கடுமையான இழப்பை அரசு படைகளுக்கு ஏற்படுத்தி வருகின்றன. இயந்திர துப்பாக்கிகளையும், மோட்டார் தாக்குதல்களையும் நடத்தி சில இடங்களில் இராணுவத்தை நிலை குலையச் செய்கின்றனர். இராணுவத்தை திசை திருப்ப முக்கியமாக கிழக்கு மாகாணத்தில் விசேட அதிரடிப் பொலிசு, இராணுவ ரோந்துகள் மீது திடீர் தாக்குதல் நடத்துகின்றனர். அரசை நிர்பந்தப்படுத்த ''எல்லாளன் படைப் பெயரில்'' விடுத்த அச்சுறுத்தல்கள் தெற்கில் இன்று தற்கொலைப் படைகள் மூலம் அரசின் முக்கிய பொருளாதார நிலைகள், (கொலன்னாவ, உரு கொடவத்த சம்பவங்கள்). இராணுவ தலைமையகங்கள் மீது வெடிவைத்து அழிக்க முயல்கின்றனர். கடற்படை கப்பல்கள், உணவு கப்பல்களை மூழ்கடிக்கக் கடல் புலிகள் காத்து கிடக்கின்ற

www.tamilarangam.net



னர். மனித வெடிகுண்டுகள், கரும்புலிகள் அரசியல் - இராணுவ தலைவர்களை தகர்க்க தயாரிக்கப்படுகின்றனர். புலிகளின் தலைமை வடகின் தெற்கு பகுதியான கிளிநொச்சி முல்லைத் தீவு மாவட்டங்களுக்கு பின்வாங்கியுள்ளனர். பிரபாகரனின் பிறந்த தினமும் மாவீரர்களின் தினமும் நெருங்குகிறது புலிகள் என்ன செய்வார்கள் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது. அரசு படைகள் யாழ் நகரை கைப்பற்றலாம். ஆனால் தக்க வைக்க முடியாது மீண்டும் மீண்டும் புலிகள் தாக்குவார்கள் என்கிறது வெளிப்படையாக புலிகளின் தலைமை. ''யாழ்ப்பாணத்தை முற்றாக பிடிப்பதும், புலிகளை முற்றாக அழிப்பதும் நமது நோக்கமல்ல''. புலிகளை பலயீனப்படுத்தி பேச்சுவார்த்தைக்கு கொண்டு வருவதே சமாதான பாதைக்கு வரவைப்பதே தங்கள் நோக்கம் என்கிறது இரகசியமாக இராணுவத்தலைமையும் சந்திரிகா அரசும்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பேராளிகள் - மக்கள் மேல் சிறீலங்கா அரசு, இந்தியரசு நேரடியாக பல இராணுவ ஒப்பறேசன்களை நடத்தியுள்ளது. இன்றைய 'சூரிய ஒளி', 'இடி முழக்கம்', 'லீப்போர்போட்'' இவற்றை நேரடியாக சந்திரிகா அரசு படைகள் நடத்தினாலும் இந்தியரசு மறைமுகமாக பல இராணுவ உதவிகளை செய்து கொண்டிருக்கிறது. குண்டு வீச்சு விமானங்களை இந்திய விமானப்படைட் விமானிகளே செலுத்துகிறார்கள். இலங்கை கடற்படைக்கு உதவியாக 7 அதிவேக ரோந்து படகுகளை பயன்படுத்துகிறது இந்திய கடற்படை. போராட்டம் யுத்தமாக மாறியதிலிருந்து நடந்த இராணுவ ஒப்பறேசன்களில் சில இராணுவ நடவடிக்கைகள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல அக புற மாற்றங்களை திசைதிருப்பங்களை நண்பர்கள், எதிரிகளை தீர்மானிப்பதில் ஏற்படுத்தியிருக்கின்றது. இராணுவ ரீதியிலும் இவற்றின் விளைவுகள் வெளிப்படையாக மாற்றத்தை உண்டு பண்ணும்.

சந்திரிகா தலைமையிலான மக்கள் கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்ததே ''இனப்பிரச்சனையை தீர்ப்பேன் சமாதானத்தை ஏற்படுத்துவேன்'' ''யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது, தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை கொடுப்பது'' போன்ற முழக்கங்கள் இன்று ஏட்டு சுரைக்காயாகவுள்ளது. சமாதான முகமூடி கிழிந்து தொங்குகிறது. மிக கொடூரமான இன ஒடுக்குமுறை யுத்தம் நடத்தப் பட்டு வருகின்றது. புலிகளை விட்டு விட்டு தமிழ் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காண முடியாது என சந்திரிகாவும் தமிழ் மக்களின் பிரச்சனைகளை புரிந்து தீர்வு வைப்பதில் சந்திரிகா வித்தியாசமான தலைவர் என புலிகளும் நாலு சுற்று பேச்சுவார்த்தைகளை, 50-க்கும் மேற்பட்ட கடித பரிமாற்றங்களை நடத்தினர். இப்போ ''புலிகள் வேறு - மக்கள் வேறு'' பிரச்சாரத்துடன் தமிழ் மக்கள் - புலிகள் மேல் யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டு இராணுவ தீர்வை நிகழ்ச்சி நிரலாக்கி இருக்கிறார் சந்திரிகா.

சிங்கள மக்கள் மத்தியில் தனது இன ஒடுக்குமுறை யுத்தத்தை நியாயப்படுத்தி அதற்கு ஆதரவு திரட்ட சிறீலங்காவில் 'வெண்தாமரை இயக்கத்தை' அரசு ஆரவாரத்துடன் நடத்துகிறது. லக்சுமன் செயக்கொடி கூறுகிறார். ''இது இராணுவ யுத்த நலன்களுக்கு ஏற்படுத்தப்பட்ட அமைப்பாகும்'' இவ்வெள்ளைத் தாமரை இயக்கம் தாமரையின் இரண்டு பக்கமும் துப்பாக்கிகள் ''இன்று போர் - நாளை சமாதானம்'' ''சமாதானம் - பிரச்சாரம்'' இந்த வாசகங்கள் சிங்கள மக்களை மேலும் மேலும் இனவாத மதவாத மயப்படுத்தவும், தமிழ் மக்கள் புலிகள் மேல் நடத்தும் இன ஒடுக்குமுறை யுத்தத்துக்கு தெற்கில் எதிர்ப்பு கிளம்பாமல் தடுக்கவும் பயன்படுத்தப்படுகிறது. தமிழீழ மக்களின் எதிர்ப்பை யுத்தத்தின் மூலம் நசுக்குவது சிறீலங்கா மக்களின் எதிர்ப்பை வெண்தாமரை மூலம் சமாதானப்படுத்தி திசை திருப்புவது.

இலங்கை ஆளும் வர்க்கங்களின் - உலக வல்லரசுகளின் சுரண்டலுக்கும் வியாபாரத்துக்கும் ஒடுக்குமுறைக்கும் உகந்த ஒரு திட்டத்தை சந்திரிகா அரசு அமுல் படுத்திக் கொண்டிருக்கிறது.

— தமிழரசன்

# அம்மா அழாதே

அம்மா அழாதே
நமது துயரைச் சுமக்க மலைகள் இல்லை
உனது கண்ணீர் கரையவும்
ஆறுகள் இல்லை.

தோளிலே தாங்கிய குழந்தையை
உன்னிடம் தந்ததும்
வெடித்தது துவக்கு

புழுதியில் விழுந்த உன் தாயின் மீது
குருதி படிந்தது
சிதறிய குண்டின் அனல் வெப்பத்தில்
உன் வண்ணக் கனவுகள் உலர்ந்தன.

நின் காற்சிலம்பிடை இருந்து தெறித்தது
முத்துக்கள் அல்ல
மணிகளும் அல்ல
குருதி என்பதை உணர்கின்ற பாண்டியன்
இங்கு இல்லை

துயிலா இரவுகளில்
'அப்பா' என்று அலறித் துடிக்கிற
சின்ன மழலைக்கு
என்னதான் சொல்வாய்?

உலவித் திரிந்து நிலவைக் காட்டி
மார்பில் தாங்கி
'அப்பா கடவுளிடம் போனார்'
என்று சொல்லாதே

துயரம் தொடர்ந்த வகையைச் சொல்
குருதிபடிந்த கதையைச் சொல்
கொடுமைகள் அழியப்
போரிடச் சொல்

— சேரன்

# தேசபக்தன் பார்வையில்

## யாழ்ப்பாணத்துக்கான போர்




யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கு 'சூரிய வெளிச்சத்தை கிடைக்கச் செய்ய, சிறீலங்கா சிங்கள இனவாத இராணுவம் ''சூரிய ஒளி'' இராணுவ திட்ட யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. உலகம் நம்புகிறதா? கடந்த ஆண்டு இதே மாதத்தில் சந்திரிகா தலைமையிலான ''பொதுசனமக்கள் கூட்டணி'' பாராளுமன்ற தேர்தலில் வென்றிருந்தது. சனாதிபதி தேர்தலின் வெற்றிக்காக காத்திருந்தது. ''யுத்தத்தை முடித்து வைப்பேன் - சமாதானத்தைத் கொண்டு வருவேன்'' 'முழக்கத்துடன், சிறீலங்கா தமிழீழ மக்களின் நெஞ்சு நிறைந்த ஏக்க எதிர்பார்ப்பை தேர்தலில் சந்திரிகா பயன்படுத்தி ஆட்சிக்கு வந்தது. அதே சந்திரிகா தலைமையிலான சிறீலங்கா அரசு ''இன்று யுத்தம் நாளை சமாதானம்'' என்ற வெண் தாமாரை பிரச்சாரத்துடன், தமிழீழ மக்கள் - புலிகள் மேல் 6 மாதங்களாக தேசிய இன ஒடுக்கு முறை யுத்தத்தை நடத்துகிறது.

யாழ் மக்கள் சூரிய ஒளியை பார்க்க வைக்க தடையாக நிற்கும் தமிழ் பயங்கரவாதிகளுக்கு எதிராக என்ற பெயரில் மக்களை - புலிகளை அழிக்க ''சூரிய ஒளி இராணுவ திட்டம்'' இரண்டரை மாதங்களாக தமிழின அழிப்பு யுத்தமாக நடத்தப்பட்டு வருகிறது. சிறீலங்கா இராணுவத்தின் 51, 52-வது ''டிவிசன்'' இராணுவம் தொடக்கி நடத்தி வந்த யுத்தத்தில் கார்த்திகை 19-லிருந்து 53-வது'' டிவிசன் கொமாண்டோ'' அதிரடி விரைவுப் படையும் யாழ் நகரை கைப்பற்றும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளது. பருவமழைக்கு முன்னும், மாவீரர்கள் தினத்துக்கு முன்னும் யாழ் நகரில் ''சிங்க கொடி'' யேற்ற நினைத்து மூர்க்கமாக முன்னேறிய இராணுவம் இரண்டிலும் தோற்று விட்டது. யாழில் எஞ்சியுள்ள மக்களையும் - புலிகளையும் சுற்றி வளைத்து அழிக்கும் விதமாக நாவற்குழி பாலத்தை கைப்பற்றியுள்ளதுடன், யாழ் கடலேரி (கிளாலி) போக்குவரத்தும் போர்க்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இயந்திர துப்பாக்கிகளின் வேட்டுக்களும், எறிகுண்டுவீச்சுக்களின் குண்டு வெடிப்பும் அதிர்வுகளும், சிறிய பெரிய பீரங்கிகளின் வெடி முழக்கங்களும் ''சார்ச் சார்ச்...'' என்ற சிங்கள இராணுவ கத்தல்களும், தமிழ் மக்களின் அலறல்கள் அழுகை சத்தங்கள் காதுகளை பிளந்து கொண்டிருக்கிறது. ''முன்னேறுவது - பலப்படுத்துவது - மீண்டும் முன்னேறு - பலப்படுத்து''. அடி மேல் அடி வைத்து நடக்கும் அரசு படைகளின் கொடூர யுத்தம். 1987-ல் 'ஒப்பறேன் பூ மாலையுடன்' நுழைந்து இதே காலத்தில் இந்திய ஆக்கிரமிப்பு படை யாழ்ப்பாணத்தை கைப்பற்ற நடத்திய இராணுவ திட்டம் 'பவான்' அந்த இரண்டு மாத ஆக்கிரமிப்பு யுத்தத்தின் கோர மூகத்தை இன்று சிறீலங்கா படைகளுக்கு பின்னிருந்து உதவும் இந்தியரசின் கொடூர நோக்கத்தை தமிழீழ மக்கள் நினைவு படுத்தி பார்க்கின்றனர். யாழ்ப்பாணத்தை கைப்பற்றும் சந்திரிகா அரசின் யுத்த திட்டம். யாழ் மக்களுக்கும் மண்ணுக்கும் நினைத்து பார்க்க முடியாத அழிவை ஏற்படுத்தி கொண்டிருக்கிறது. மக்களை அழித்து விட்டு - அகதிகளாக துரத்தி விட்டு இராணுவ ரீதியாக மண்ணின் மீதான கட்டுப்பாட்டை நிறுவி வருகிறது. சூரிய ஒளியை பாய்ச்சி வருகிறது. யாழ் கச்சேரியை கைப்பற்றியதுடன் யாழ் மீதான யுத்த வெறியை, வெற்றியை அரசும் - படைகளும் பெருமளவு உறுதிப்படுத்தி விட்டது.

யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவதை கொண்டாட சிறீலங்காவில் அரசும், அரசியல் கட்சிகளும், இன, மத வெறி அமைப்புக்களும் சிங்கள மக்களை ''புதிய சிங்கள தேசிய வெறி'' அலைக்குள் புரட்டி புரட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். புது வருடத்துக்கு முன்பாக பட்டாசுகளும், வாணங்களும் வெடிக்க தயாராகவிருக்கின்றன. சிங்கள ஆளும் வர்க்கங்கள், ஏகாதிபத்தியங்களின் நலனுக்காக மட்டும் நடத்தப்படுகின்ற தமிழ் தேசிய இன ஒடுக்கு முறையுத்தத்துக்கு, பரந்து பட்ட சிங்கள மக்களின் ஆதரவை வென்றெடுக்க - சிங்கள தேசபக்த புரட்சிகர சக்திகளை பலவீனப்படுத்த, யுத்தத்தை நியாயப்படுத்த ''வெண்தாமாரைத் திட்டம்'' அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இதை தூண்டி வளர்த்த சந்திரிகா அரசு. தமிழ் அகதிகளுக்கு உதவ முன் வரும் உள்நாட்டு, பன்னாட்டு அரசு சரா நிறுவனங்களை தடுத்துள்ளதுடன், கடுமையாக கண்காணிக்கிறது. 'பெந்தோட்டை'வில் நடக்கவிருந்த இந்நிறுவ

www.tamilarangam.net



னங்களின் ஆண்டு கூட்டத்தை 3000 மேற்பட்ட சிங்கள இன, மத வெறி சக்திகள் தடுத்துள்ளது. இதற்கு அரசியல்வாதிகளும் - அதிகாரவர்க்கமும் உடந்தையாக நிற்கிறது.

யாழ்மீதான இராணுவ வெற்றியை சிங்கள மக்கள் அமைதியாக கொண்டாட அரசு கோருகின்ற நடிப்பு வேறு. குறுகிய கால பயிற்சியுடன் 10.000 புதிய இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பு தொடங்கியுள்ளது. அரசு கைப்பற்றிய யாழ் பகுதியில் அரசு நிர்வாகத்தை தன்வயப்படுத்தவும், யுத்தத்தில் இழந்த மனித சக்தியை ஈடு செய்யவும் கிழக்கில் மீண்டும் புலிகளை அழிக்க படைப்பகுப்பு செய்யவும் சந்திரிகா அரசு தயாரிப்பில் இறங்கி விட்டது. விமானப் படையின் இழப்பை சரிக்கட்டவும், தொடர்ந்து நடத்தப் போகும் இன அழிப்புக்கு இராணுவத்துக்கு பக்கபலமாக துணைபுரியவும் ரசியாவிடம் இருந்து MI-4 யுத்த விமானங்களும், இதற்கான ரசிய விமான ஓட்டிகளும் முதற் கட்டமாக 6 மாதத்துக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இஸ்ரேலிடம் இருந்து கவச தகடுகள் பொருந்திய 6 உலங்கு வானூர்திகள் வாங்க ஏற்பாடாகியுள்ளது.. சிறீலங்கா அரசின் இன ஒடுக்கு முறையை, சிங்கள - தமிழ் ஆளும் வர்க்கங்களின், ஏகாதிபத்தியங்களின் சுரண்டலை, அடக்குமுறையை எதிர்க்கும் தமிழீழ - சிறீலங்கா மக்களுக்கு சந்திரிகா அரசு என்றுமே சமாதானத்தை அல்ல ஒடுக்கு முறை யுத்தத்தையே வழங்கமுடியும். ''போர் ஓய்ந்தாலும் - சமாதானம் உடன் வந்து விடாது'' சந்திரிகாவின் கூற்று இது.

சந்திரிகாவின் வருகை சமாதான பிரச்சாரம். யுத்த நிறுத்தம், பேச்சு வார்த்தை அரசியல் தீர்வு, சித்திரை 19 யுத்த நிறுத்த மீறல், தமிழ்த் துரோக தலைமைகளின் நிலை, ராஜீவ் கொலை பற்றிய 27 kg ஆவண பரிமாற்றங்கள்.. சர்வதேச நிறுவனங்களில் சந்திரிகாவின் இராஜ தந்திரங்கள் இவை தமிழீழ மக்களிடம் ஏற்படுத்தியிருந்த நம்பிக்கை, அய்யம், அச்சங்களை அரசின் மூன்று இராணுவ நடவடிக்கைகளும், யுத்தமும் சந்திரிகா அரசை மீண்டும் தமிழீழ மக்களின் கண்களுக்கு சந்தேகத்திற்கிடமற்ற சிங்கள பௌத்த மதவித தேசிய இன ஒடுக்கு முறை அரசாக காட்டி உறுதிபடுத்தியுள்ளது. யாழ் மீதான யுத்தம் அரசுக்கு எதிராக யாழ் மக்களை தொடர்ந்து நிற்க வைத்துள்ளது. நேரடியாக பாதிப்பை உணரும் அய்ரோப்பிய கனடிய தமிழர்களும் அரசை நம்ப மாட்டார்கள். கிழக்கில் படைகளின் அட்டூழியம் அதிகரிக்க தொடங்கியுள்ளது இது. கிழக்கு தமிழ் மக்கள் அரசை மீண்டும் எதிர்க்க தூண்டும். சிறீலங்காவில் தமிழர்கள் மீது நடத்தப்படும் கைது, கண்காணிப்பு, தேடுதல், பரிசோதனைகள் ஆற்றில் மிதக்கும் சடலங்கள். அரசு மீதும் படைகள் மீது வெறுப்பை கிளப்பி விடும். அரசு கட்டுக்குள் கொண்டு வந்த யாழ் பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை சிங்கள படைகளை சிங்கள அரசு அதிகாரிகளை கொண்டு அல்லது தமிழ்த் துரோக தலைமைகளை கொண்டு கட்டுக்குள் கொண்டு வர முயலும். இதுவும் யாழில் எஞ்சியுள்ள மக்களுடன் அரசு அய்க்கியப்பட முடியாத நிலைமையை ஏற்படுத்தும். மொத்தத்தில் சிறீலங்கா அரசுக்கும் - படைகளுக்கும் எதிரான தமிழீழ மக்களின் உணர்வு, எதிர்ப்பும் தொடர்வதற்கான அடிப்படை அப்படியே இருக்கிறது. போராட்டமும் போராளிகளும் மேலும் மேலும் மக்களுடன் அய்க்கியப்பட்ட வேண்டியிருக்கிறது. போராளிகள் சிந்திக்க வேண்டிய வேளை இது.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் 1985-க்குப் பின் யாழ்ப்பாணத்தில் அரசின் இராணுவத்தை பிரதான முகாம்களில் முடக்கி வைத்திருந்தனர் போராளி இயக்கங்கள். சிறு இராணுவ முகாம்களை தாக்கினர். முகாம்களை விட்டு வெளியே வர முயலும் இராணுவத்தை தடுத்து நிறுத்தினர். 1987-இல் இந்திய இராணுவம் வந்து 90 வெளியேறிய பின், பலாலி, காரை நகர், காங்கேசன் துறை, ஆனையிறவு, பூனநகரி போன்ற பெரிய அரசு படை முகாம்களில் முழுவதுமாக இராணுவம் முடக்கப்பட்டது. சிறிய - பெரிய சில மோதல்களை தவிர கடந்த 5 ஆண்டுகளாக புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்தது யாழ்ப்பாணம். தமிழீழத்துக்கு ஒரு முன்னுதாரணமா ''புலிகளின் யாழ்ப்பாண இராச்சியம் இருந்தது. வரிவசூல், பொருண்மிய பொருளாதார திட்டம், தமிழீழ வங்கி ஒன்று, தமிழீழ வர்த்தக கழகம் (இதன் வருட வருமானம் 160 மில்லியன் ரூபா) நீதிமன்றங்கள், சட்டகல்லூரி, புதிய சட்டங்கள் (பாலியல் வன்முறை, பலாத்காரத்துக்கு, சாராய விற்பனைக்கு கடும் தண்டனை வழங்கப்பபட்டது.) பொலீசு போக்குவரத்து பொலீசு, சிறை, குடியகல்வு, குடிவரவு என புலிகளின் தமிழீழ அரசாங்கம் நடந்தது. அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளம் மட்டும் சிறீலங்கா அரசு கொடுத்து வந்தது.

மக்கள்-போராளிகள் செந்நீரும் கண்ணீரும் சிந்தி வளர்த்து வரும் போராட்டத்தில் ''தமிழீழ அரசாங்கம், புலிகளின் சோசலிச தமிழீழம் எப்படி இருக்கும்? என்பதை நேரடியாக யாழ்ப்பாண மக்கள் பார்த்து அனுபவித்து வந்தனர். தமது சமூக பொருளியல் அரசியல் பண்பாட்டு வாழ்வு எதிர்காலம் எப்படியானது என்பதை தமிழீழ மக்கள் கண்ணார கண்டனர். யாழின் பரந்துபட்ட தொழிலாள, விவசாய, மீனவ மக்கள் புலிகளின் அரசில் மீண்டும் தமது சமூக சமத்துவ வாழ்வை பற்றி புரிந்து கொண்டனர். மொத்தத்தில் சிறீலங்கா அரசுக்கும் புலிகளின் அரசுக்கும் இடையிலான வேறுபாட்டை வெள்ளிடை மலையாக கண்டனர். தமிழீழ மக்களுக்கும் குறிப்பாக யாழ் மக்களுக்கும், தேசிய விடுதலைக்காக போராடும் புலிப் போராளிகள் - தேசபக்த சனநாயக சக்திகள் அனைவருக்கும் யாழ் மீதான இழப்பு - குறித்த படிப்பனைகள் மிகுந்த கவனத்துக்குரியவை. சிறீலங்கா அரசின் இன ஒடுக்கு முறை யுத்தத்துக்கு எதிரான பேராட்டத்தில் புலிகளின் பங்கும், வெற்றிகளும் தோல்விகளும் முக்கிய வரலாற்று பதிவுகள், போராட்டத்தை மேலும் முன்னோக்கி முன்னேடுத்து செல்ல விழையும் அனைவருக்கும், தமிழீழ போராட்டத்தின் அரசியல் - இராணுவ வழி, போராட்ட அனுகுமுறைகள் பற்றி அவர்களை கடுமையாக சிந்திக்க தூண்டுகிறது.

1987-ல் போராட்டத்தில் மக்களின் புலிகளின் வளர்ச்சியில் இந்தியப் படைகளால் யாழை பிடிக்க 2 மாதங்கள் எடுத்

www.tamilarangam.net



துக் கொண்டது. ஆனால் இன்று புலிகளின் 5 ஆண்டு கட்டுப் பாட்டிலிருந்த தமிழீழ அரசு நடந்து வந்த யாழை சிறீலங்கா இராணுவமும் அதே கால அளவில் கட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறது. தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்சி யில் இந்த இழப்புக்கான அரசியல் - இராணுவ அடிப்படைக்கா ரணங்கள், உள்ளடக்க சிக்கல்கள் என்ன என்பதை கண்டு பிடித்து சரியான மாற்றத்தை செய்ய வேண்டியுள்ளது. சிறீ லங்கா அரசு, ஏகாதிபத்தியங்கள் இவற்றின் பலம் பொருந்திய இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியில் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகள் போராளிகளின் கட்டுக்குள் வருவதும், போவதும் இறுதி வெற்றி வரை நடக்கும் என்பதா? தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான கரந்தடிப் போராட்டத்தில் தமிழீ ழம் போன்ற பூகோள, பொருளியல் அரசியல் பின்புலத்தில் இது தவிர்க்க முடியாத இழப்பா? விசேட விதியா? தமிழீழ மக்களின் தேசிய விடுதலை யுத்தம் யுத்த தந்திர ரீதியாக எந்த கட்டத்தில் இருக்கின்றது? தமிழீழ மக்களின் விடுத லைக்கான கடைசி யுத்தம். இறுதி யுத்தம் என கூறும் கூறிய புலிகளின் தற்காப்பு, தாக்குதல் சண்டைகள் பற்றிய மதிப் பீடு என்ன? யாழ்ப்பாணம் விடுதலைப் பிரதேசம் என வரையறுத்ததன் அரசியல் - இராணுவ அடிப்படை என்ன? ஆயுதம் தாங்கிய மக்கள் படை இல்லாத இராணுவம் முடக் கப்பட்ட விடுதலைப் பிரதேசம் என்பதன் அர்த்தம், விடு விக்கப்பட்ட பகுதி என்பதன் அர்த்தங்கள் என்ன?

வியட்னாமிய, சீன மக்களின் விடுதலைப் போராட்டங் கள் 25 ஆண்டுகளுக்கு மேலாக உள்நாட்டு பிற்போக்கு அரசு களை அமெரிக்க யப்பானிய ஏகாதிபத்தியங்களை எதிர்த்து போர் புரிந்தனர். எதிரிகளின் 5 இலட்சம் மனித படைபலமும், வான், தரை, கடல் என நவீன, மிக நவீன ஆயுதவசதி, பயிற்சி வசதி பெற்ற படைகளை எப்படி தோற்கடித்தனர். வியட்னாம் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்து அமெரிக்க மக்கள் மிகப் பெரிய போராட்ட்ஙகளை நடத்தினர். யுத்தத்தை நிறுத்த கோரினர். படைகளை பின் வாங்க சொல்லி போராடினர். பொருளாதார தடைகளையும், தொழிற்சாலைகளை, விவசாய நிலங்களை எதிரிகள் அழித்தனர். பல மனித படு கொலை களை நடத்தினர். இவற்றை எல்லாம் மீறி எவ்வாறு வியட்னா மிய சீன மக்கள் எழுந்து நின்றார்கள்? போரை - போரல் எதிர் கொண்டார்கள்? தேசிய சுதந்திரம் மக்கள் விடுதலை பெற்றார் கள். சீன, வியட்னாமிய விடுதலை யுத்தங்களின் அடிப்படை என்ன? அவற்றுக்கு தலைமை தாங்கிய சமூக சக்திகள் யார்? பிரதான எதிரிக்கு எதிராக உள்நாட்டில் போராடும் ஒவ்வொரு சக்திகளையும் அவற்றின் சிறிய பலங்களையும் காட்ட எவ் வாறு அய்க்கியப்படுத்தினார்கள்? நாட்டின், மக்களின் எதிரி களை எப்படி தோற்கடித்தார்கள்? சீனாவும், வியட்னாமும் கூட மீண்டும் முதலாளித்துவத்தில் இன்று திரும்பி விட்டது. அமெரிக்க யப்பானிய ஏகாதிபத்தியங்களின் காலடிகளை பின் தொடர்கின்றன. எனவே வியட்னாமிய, சீன விடுத்லை யுத்தங் கள் - வழிமுறைகள் இனி சாத்தியமே இல்லையா? இவற்றுக் கான பதில் நமது போராட்டத்திலும் எதிரொலிக்கும்

தமிழீழ மக்களும் - போராளிகளும் உலக ஆதரவாளர்க ளும் கடந்த 12 ஆண்டு கால யுத்தத்தை பார்த்து வெறுப்பும் விரக்தியும் வெளிப்படுத்துகிறார்கள். தேசிய சுதந்திரம், மக்கள் விடுதலை மீது கேள்வி மேல் கேள்வியும் சந்தேகம் அவ நம்பிக்கையும் கொள்ள காரணம் என்ன? இக் கேள்விகள் எழுவதற்கான தமிழீழ போராட்டத்தின் சொந்த அனுபவங் கள், அதற்கான சமூக பொருளாதார அரசியல் அடிப்படை, இயக்கங்களின் கொள்கை கோட்பாடு, நடைமுறைகள். இவற் றிலுள்ள அடிப்படையான அரசியல் இராணுவ வழி தவறுகள்? போராட்ட தந்திரோபாயங்கள்? இவற்றை போராட்ட தலை மைகள் ஆராய்ந்து மாற்றங்களை ஏற்படுத்தாத வரை நமது தேசிய விடுதலைப் போராட்டமும் போரும். ஓரடி முன்னேறு வது கூட இனி கடினம். மீண்டும் யாழ்ப்பாணமோ அல்லது கிளிநொச்சியோ, வேறு பகுதியோ புலிகளின் கட்டுப்பாட்டில் வந்தாலும், சிறீலங்கா அரசும் ஏகாதிபத்தியங்களும் மீண்டும் அக்கட்டுப்பாட்டு பகுதிகளை கைப்பற்ற ஒரு கொடூர யுத் தத்தை ஏவினால் மீண்டும் எதிரியிடம் இழப்பதும் தவிர்க்க முடியாததே.

போராட்டத்தின் எழுச்சியையும் - வீழ்ச்சியையும் தீர்மா னிப்பதில் தீர்மானகரமான சக்தியாகவுள்ள புலிகளின் சில தவ றான நிலைப்பாடுகளை இப்போ கவனிப்பது நல்லது. ஆரம் பம் முதல் புலிகள் பரந்து பட்ட மக்களை போராட்டத்தில் இணைப்பது நம்புவது சாந்திருப்பது இதற்கு பதிலாக தேர்ந்தெ டுக்கப்பட்ட இளைஞர்களை, யுவதிகளை இணைப்பதிலும், ஆயுதங்களை மட்டும் பிரதானமாக நம்புவதிலும் அக்கறை காட்டி வருவது; தனது போராளிகள் எதிரியை சாகடிக்க வேண் டும் அல்லது தற்கொலையை நாட வேண்டம் என்ற பாணியில் முழு இயக்கத்ன்தயும் வளர்த்து வந்தது (எத்தனை போராளி கள் விசம் தின்று செத்தனர். சிறையை உடைத்து போனவர்கள் கூட தமிழ் நாட்டில் இறந்ததுண்டு) தமது இயக்கம் மட்டுமே ஒரே இயக்கம் என்ற சர்வாதிகார போக்கில் மற்ற போராளி அமைப்புக்களை தடை செய்வது அழிப்பது இது மறைமுகமாக எதிரியின் கரங்களை பலப்படுத்தியது. போராட தயாராக வுள்ள பலரை அமைதியாக பார்வையாளராக இருக்க வைத் துள்ளது. அல்லது நாட்டை விட்டு ஓட. வைத்துள்ளனர். இயக் கத்துள்ளே கீழணி போராளிகளிலிருந்து மாத்தையா போன்ற தலைவர்கள் வரை நியாயமான காரணமின்றி தலைமைப் போட்டி, அதிகாரத்துவ முறையில் அழித்திருப்பது, போர் முறை அனுபவம் மிக்க பலரை தாங்களாகவே அழித்தது. உள் இயக்கத்தை பலவீனப்படுத்தியது.

யாழ்ப்பானம் தங்கள் கட்டுப்பாட்டிலிருந்த போதே இஸ் லாமிய தமிழ் மக்களை ஆயிரக்கணக்கில் வாழ்விடங்களை விட்டு துரத்தியது (புலிகளே இன்று தவறை ஒப்புக் கொள்கின் றனர் ஆனால் உடன் பரிகாரம் கொடுக்க தயாரில்லை) யாழில் சமூக பொருளாதார வாழ் நிலையில் பின் தங்கிய பெரும் பான்மை உழைக்கும் மக்களின் பொருளாதார பிரச்சனைகளை தீர்ப்பதில், சமூக சம அந்தஸ்தை ஏற்படுத்துவதில் இழைத்த

www.tamilarangam.net



தவறுகளால், பெரும்பணக்காரர்கள். ஆதிக்க சக்திகளின் பக்கம் நேரடியாகவும் மறைமுகமாகவும் நின்றதால், வரிவிதிப்பு, குடியகல்வு, போர்த் தயாரிப்பு வேலைகளில் கூட பெரும் பாணக்காரர்களின் நலன்களுக்கு இசைவாக நடந்து கொண்டமை. இவை அடிதட்டு தொழிலாள, விவசாய, மீனவ, அரசு உத்தியோகஸ்தலர்கள் சிறு வியாபாரிகளின் மத்தியில் புலிகளை அன்னியப்பட வைத்தது. புலிப்படையில் வயதானவர்கள், இளைஞர்கள் கூட சில வருடங்களாக சேர பின்னிற்பதும், ஒதுங்கி கொள்வதற்குமான காரணங்களை கண்டு மாற்றியமைக்காத் தலைமை சிறுவர்களை சார்ந்து படைப்பிரிவுகளை உருவாக்கியுள்ளது. இது போரில் உள-உடல் ரீதியான பலயீனத்தை வெளிப்படுத்துகின்றது. சாகச சிறுவர்களின் போர் நடவடிக்கைகளை போராட வேண்டிய பெரியவர்கள் பார்த்து ரசிக்க வைத்துள்ளது - வேதனைப்பட வைத்துள்ளது (வெலிஓயா தாக்குதல் தோல்வியில் பல சிறு ஆண்- பெண் போராளிகள் இறந்தனர்)

5 ஆண்டுகள் யாழ் அரசை நடத்தியபோதும் அரசு படைகளை எதிர்த்து போராடவோ - எதிரிகள் தாக்கினால் தற்காத்து கொள்ளவோ மக்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கவில்லை, ஆயுதம் தாங்கிய மக்கள் படைகளை அமைக்கவில்லை. பாதுகாப்பு அரண்களுக்கு மண் மூட்டை அடிக்கவும், பதுங்கு குழி வெட்டவும், கல்லறைகள் கட்டவுமே மக்கள் பயன்படுத்தப்பட்டனர். ஆனால் அரசு 18 வயதுக்கு மேற்பட்ட சிங்களவர்களுக்கு பயிற்ச்சி கட்டாயமாக கொடுக்க தயாராகியது. இன்று அரசு படைகளை எதிர்த்து மக்கள் தற்காப்புக்காக வேனும் ஆயுதம் தாங்கிபோராடவில்லை, அரசை எதிர்த்து மக்களையும் போராட புலிகள் வழிகாட்டி தலைமை தாங்கியிருந்தால் இராணுவத்தின் முன்னேறுதலை ஓரளவு தடுத்திருக்கலாம். பல புலிகளின் இழப்பை குறைத்து வேறுபகுதிகளுக்கு பின்வாங்க வைத்து அரசு படைகளுக்கு எதிராக பலமாக செயல்பட்டிருக்கலாம். எதிரியை படைப்பகுப்புக்கு நிர்பந்திருக்கலாம். என்ன நடந்தது? மக்களை வீட்டை விட்டு வெளியேறும்படி - வேறுபகுதிகளுக்கு போகும்படி ஒலிபெருக்கியில் உத்தரவிட்டார்கள் புலிகள். இது கடந்த காலங்களில் புலிகள் மக்களை போராட்டத்தில் இணைக்காது போல் இன்று போரிலும் மக்களை இணைப்பதை விட்டுவிட்டு, போராட்டத்தின், போரின் பார்வையாளர்களாக பெரும்பான்மை மக்களை மாற்றியிருக்கிறது. அடுத்து சர்வதேசரீதியாக நமது போராட்டத்தின் நியாயத்தை அரசியல் கோரிக்கைகளை பிரச்சாரப்படுத்தி உலக மக்களின் ஆதரவை கோருவது, அய்க்கியப்படுவதற்கு பதில் தாக்குதல்களின் வெற்றி தோல்விகளை மட்டும் பிரச்சாரப்படுத்தியது. இது இன்றைய தமிழ் சினிமாவை பார்ப்பதுபோல் பார்த்துவிட்டு போகச் செய்தது. தமிழீழ போராட்டத்தை போராளிகளை அங்கீகரிக்க வேண்டும் என்பதை விட புலிகளை அங்கீகரிக்க வேண்டுவது... போராட்டத்தின் விளைவு புலிகளா? ''புலியின் விளையாட்டு போராட்டம்'' என எதிரிகள் மக்களை திசைதிருப்ப பிரச்சாரம் செய்ய வாய்பளித்துள்ளது. போராட்டத்தின் நீண்டகால தேவைகள் - பலன்களை பார்த்து செயல்படுவதை விட்டு, அன்னிய நாடுகளில் குறுகிய நோக்கில் எதிரிகளை அழிப்பதால் (ராஜீவ், பத்மநாபா) அந்நாட்டு மக்கள் இயக்கங்கள், ஆதரவாளர்களை அந்த நாட்டு அரசுகள் அடக்கியொடுக்க வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது. (தமிழ்நாட்டில் இதன் தாக்கம் எல்லார்க்கும் தெரிகிறது).

புலிகளின் முதலாளிய, சுத்த இராணுவ சித்தாந்தம், அவர்களது அரசியல் பாதை - இராணுவ வழி, போராட்ட அணுகுமுறைகளில் அடிப்படை மாற்றங்களை கொண்டு வரவிடாது. ஆனால் போராட்டத்துக்கு பாதகமான சில முக்கிய அணுகுமுறைகளையாவது புலித்தலைமை மாற்றமுயலாம், முடியும். மாவீரர்கள் நினைவு தின ஒலிபரப்பில் இறந்த தியாகிகளுக்கு, இலட்சியத்துக்கு உறுதியாக இருக்கப் போவதாக, தொடர்ந்து போராடப் போவதாக உறுதி பூண்ட பிரபாகரனும் மற்றும் புலித்தலைவர்களும், யாழ்பாண இழப்புக்கான, தங்களின் பின்வாங்கலுக்கு காரணங்களை சிந்தித்து மாற்றுவதில் அக்கறை எடுத்தால், தமது தவறுகளை மக்கள் முன் துணிவாக முன்வைத்து நடைமுறையில் திருத்திக் கொண்டால் தமிழீழ மக்களும் தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகளும் அதை வரவேற்பார்கள். தமிழீழ போராட்டம் படிப்பனைகள் மூலமாக வேனும் தவறுகளை திருத்த தயாரான தலைமைகள் வழியாக மேலும் முன்னேறமுடியும்.

தமிழீழ தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகள் தங்களை, இன்றைய நெருக்கடியான கட்டத்தில் முன்னிலைக்கு கொண்டு வரவேண்டிய கடமையிருக்கின்றது. போர் முனையில் பங்களிக்கின்றளவுக்கு அமைப்பு அடிப்படையும் இயக்க வளர்ச்சியும் இல்லாதிருப்பது உண்மை. போராட்டத்தில் அடிப்படை அரசியல் வழியை நிலைநிறுத்துவதே கேள்வியாக மாறிக் கொண்டிருக்கிறது. சிறீலங்கா அரசின் இன அழிப்பு யுத்தத்தை எதிர்ப்பதும், ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்த்த போரில் புலிகளை ஆதரிப்பதும், புலிகள் தமது தவறுகளை திருத்த நிர்பந்திப்பதும், அவற்றை செய்வதனூடாக மக்களுடன் அய்க்கியப்படவும் வேண்டும். தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு திட்டமாக குறைந்த பட்சம் 'திம்புக் கோரிக்கைகளை' அங்கீகரிக்கும் அனைத்து தமிழீழ தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகளும் கூட்டிணைந்து இவை பற்றி சிந்திக்க செயலாற்ற முன்வருமாறு தேசபக்தன் மூலம் அறை கூவல் விடுகிறோம்.

சந்திரிகா அரசின் தேசிய இன ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்க்கவும், அரசின் மோசடி அரசியல் தீர்வு திட்டத்தை அம்பலப்படுத்தவும், தமிழ் துரோகிகளை அன்னியப்படுத்த, தேசிய விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து புரட்சிகர வழியில் முன்னேடுத்து செல்லவும் பரந்தளவில் மக்கள் மத்தியில் செயலரங்கை விரிவும் விரைவும் படுத்தவேண்டிய வேளையிது!

— ஆசிரியர் குழு.

www.tamilarangam.net



# யுத்தத்தை நிறுத்தவும், தமிழீழ மக்களை ஆதரித்தும் ஐ.நா சபை தலையிடவும் கோரும் போராட்டங்கள்...

இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் தமிழீழ அழிப்பு யுத்தத்தை எதிர்த்தும் - யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு ஆதரவாகவும் கிளி நொச்சியிலும் வவுனியாவிலும் அரசு எதிர்ப்பு ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடந்துள்ளது. ஆனால் தமிழீழத்தின் கிழக்கு மாகாணத்தில் இத்தகைய போராட்டங்கள் கூட நடக்கவில்லை. இன்று அரசின் யுத்தத்தை எதிர்த்து தமிழ் மக்களுக்கு ஆதரவாக தமிழ் நாட்டிலும், தமிழீழத்தவர்கள் வாழும் புலம்பெயர்ந்த நாடுகளிலும், மலேசியாவிலும் கூட மக்கள் போராட்டங்கள் இலங்கை தூதுவரகத்தை முற்றுகையிடும், மனுக்கொடுக்கும் போராட்டங்கள் நடக்கின்றது. யாழ்ப்பாணத்தின் மீதான தாக்குதலை நிறுத்த கோருகின்ற எளவுக்கு கூட வடக்கு மகாணத்தின் தென்மேற்குப் பகுதியிலும், கிழக்கிலும் சிறீலங்காவில் தமிழர்கள் செறிவாக வாழ்கின்ற பகுதிகளிலும் மலையகத் தமிழ் மக்களிடம் கூட அத்தகைய ஆதரவு போராட்டங்கள் நடக்காது இருப்பது மிகவும் கவலைப்படவும், கவனத்தில் கொள்ளப்படவும் வேண்டிய பிரச்சனை. அந்த பகுதிகளிலுள்ள தமிழ் துரோக தலைமைகள் எந்தளவுக்கு தமிழீழ மக்களின் நலனில் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது ஒருபுறம் இருக்கட்டும் இந்த பகுதிகளில் புலிகளின் இதுவரை கால மக்கள் அமைப்பு வேலைகள் எந்தளவுக்கு நிராகரிக்கப்பட்டிருக்கின்றது என்பதும் தெளிவாகிறது. இப்பகுதிகளில் சனநாயக முற்போக்கு அமைப்புக்கள் கூட தலையெடுக்க முடியாமல் இருப்பதும் பார்க்க முடிகிறது. சிறீலங்கா அரசுக்கு உள்நாட்டில் இத்தகைய எதிர்ப்புகள் இல்லாதிருப்பது மிக சாதகமாகவுள்ளது தமிழீழ மக்களின் நலனில்,போராட்டத்தில் அக்கறையுள்ளவர்கள் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும். இலங்கையின் வரலாற்றில் சிங்கள மக்களின் போராட்டங்கள் ஒடுக்கப்படுகையில் தமிழ் மக்கள் அமைதியாக இருப்பதும் தமிழ் மக்களின் போராட்டங்கள் ஒடுக்கப்படும் போது சிங்கள மக்கள் அமைதியாக இருப்பதும் இலங்கை அரசுக்கு சாதகமாக இருந்து வந்துள்ள வரலாறு. இப்போது வடக்கு தமிழர்கள் கொல்லப்படும்போது கிழக்கு தமிழர்களை அமைதியாக இருக்க வைப்பதும், பின்னால் கிழக்கு தமிழர்கள் அழிக்கப்படும் போது வடக்கு தமிழர்கள் அமைதி காக்க வைப்பதும் வடக்கு கிழக்கு பிரதேச உணர்வுகளை, தமிழர்களை பிரித்து, வடக்கு கிழக்கை துண்டாடி தமிழீழ பராம்பரிய பிரதேசத்தை இல்லாதொழிக்கும் சிங்கள இனவாதிகளின் ஆளும் சிறீலங்கா அரசின் நீண்டகால திட்டத்துக்கு தமிழ்த் தலைமைகளே வழி ஏற்படுத்தி கொடுப்பார்கள் என்பதை இன்றைய நிகழ்ச்சிகள் எதிர்வு கூறுவதாகவுள்ளது. புலிகள் மக்கள் போராட்டங்களை கேலிப்படுத்தும் மதிக்க தவறும் தங்கள் தவறை திருத்த வேண்டும். விழிப்புணர்வு பெற்றுள்ள தமிழீழ தேசபக்த சனநாயக சக்திகள் தங்களால் இயன்றளவுக்கு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த மக்கள் போராட்டங்களை ஊக்குவிக்க எல்லா வழிகளிலும் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

தமிழ் துரோகத் தலைமைகள் சந்திரிகா அரசு மக்களைக் கொல்லக்கூடாது, அகதி மக்களுக்கு உணவும் மருந்தும் அனுப்ப கோருவதற்கு மேல் சுட்டு விரலை அசைக்கக் கூட தயாராக இல்லை. EPDP யாழ்ப்பாணத்தின் 9 MP அதிகாரத்தை அரசில் கொண்டுள்ள அயோக்கிய தலைமை. யாழ்ப்பாணத்தின் மீதான தாக்குதலை நிறுத்த கூட கோரவில்லை. இராணுவம் புலிகளை அழிக்கிறது. மக்கள் பாதிக்கப்படுவது இயல்பு என்ற தோரணையில் அப்பட்டமான துரோகத்தை தமிழ் மக்களுக்கு இழைக்கிறது. EPDP யை விட மற்ற 10 தமிழ் கட்சிகள் கூட்டாக அரசு யுத்தத்தை நிறுத்தகோரி அறிக்கை விட்டனர். அவ்வளவுதான் இந்த துரோக தலைமைகள் யாழ்மீது இராணுவம் நடத்தும் கோரமான யுத்தத்தை நிறுத்த கோரி தமிழ் மக்களுக்கு ஆதரவாக தமது MP பதவியை இராஜினாமா செய்யவோ, அரசுக்கு ஆதரவை விலக்குவது பற்றியோ சிந்திக்கக் கூட தயாராக இல்லை. இந்த பாராளுமன்ற பன்றித் தொழுவ நாய்கள் புலிகள் வேறு - மக்கள் வேறு என்ற மயிர்பிளக்கு வாதத்தை காட்டி நிற்கிறார்கள். புலிகளை விட இத் துரோக தலைமைகள் மக்களுடன் எந்த விதத்தில் இணைந்து இருக்கின்றன? சரி புலிகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லை என்றால் சந்திரிகா அரசு புலிகளை அழித்தபின் தமிழ் மக்களை யார் பிரதிநிதித்துவப்படுத்துவார்கள். உங்களைப் போன்ற துரோக தலைவர்களா? கட்சிகளா? இல்லை, அதைக் கூட சந்திரிகாவிடம் கொடுத்துவிட்டு, தமிழ் MP கள் என்ற பெயரில் அரசுக்கு கொழும்பில் குண்டி கழுவி விட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த அய்தாம்படை துரோக தமிழ் தலைமைகள் தமிழீழ மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக என்றைக்கும் மக்கள் அங்கிகரிக்க மாட்டார்கள். புலிகளின் தனிஇயக்க சர்வாதிகாரமும், மக்களையும் மாற்று அமைப்புகளின் கீழ் அணி போராளிகளையும் மதிக்க தவறுகின்ற பாரதுரமான தவறுகள் தான் இந்த துரோக் தலைமைகளுடன் சில நூற்றுக்கணக்கான அப்பாவி போராளிகள், சில பகுதி மக்கள் தவிர்க்க முடியாமல் இந்த கருங்காலிகளுடன் சேர்ந்து நிற்கச் செய்கிறது.

புலிகளுக்கும் மக்களுக்கும் உள்ள முரண்பாடு பற்றி அக்கறைப்படுகின்ற பேசுகின்ற - உண்மையில் பரந்துபட்ட மக்களுடன் அய்க்கியப்படுகின்ற அவர்களின் நலன்களுக்காக முன்னின்று போராடுகின்ற ஒரு தேசபக்த புரட்சிகர சனநாயக இயக்

www.tamilarangam.net



கம் வளர்கின்ற வரை - போராட்டத்தில் தீர்மானகரமான சக்தியாக மாறும்வரை புலிகளுக்கும் - மக்களுக்கும் உள்ள முரண்பாட்டை தீர்க்க இந்த தமிழ் துரோக தலைமைகளாலோ, சந்திரிகா அரசாலோ முடியாது. எனவே புலிகளுக்கும் மக்களுக்கும் உள்ள முரண்பாட்டை காட்டி "சமாதானம் ஆம், சனநாயகம்" பேசி தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக துரோக தமிழ் தலைமைகளை, சந்திரிகாவை முன்னுக்கு கொண்டு வர நடக்கும் அரசியல் - இராணுவ நடவடிக்கைகள் அனைத்துக்கும் எதிராக தமிழீழ மக்களும் தமிழீழ தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகளும் செயல்படவேண்டும். புலிகள் தமக்குரிய வழியில் இவற்றை எதிர்த்து நிற்பார்கள் என்பதும் உறுதி.

சிறிலங்காவிலும் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள கட்சிகளும், இயக்கங்களும் முற்போக்கு சனநாயக சக்திகளும் கூட சிறிலங்கா அரசின் யுத்தத்தை எதிர்த்து தமிழ் மக்களுக்கு ஆதரவாக மக்கள் போராட்டங்கள் எதையும் நடத்தவில்லை. அறைக் கூட்டங்களும், அறிக்கைகளும் ஓரளவு நடந்திருக்கின்றது. J.V.P., N.S.S.P. போன்ற கட்சிகள் கூட இது "இன்வாதிகளின் போர், மக்கள் இதற்கு ஆதரவு அளிக்கக் கூடாது" என்கின்றனர். வாசுதேவ நாணயக்காரா, போன்றவர்கள் கூட தேசிய சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதாக எவ்வளவுதான் பேசினாலும் இன்றைய யுத்தத்தை எதிர்த்து தங்கள் MP பதவிகளை இராஜினாமா செய்யக் கூட தயாரில்லை. அந்தளவுக்கு சிங்கள மக்களின் முற்போக்காளர்களாக தங்களைக் காட்டிக் கொள்ளும் அளவுக்கு சிறிலங்கா அரசின் ஆளும் வர்க்கங்களின் இனவாதத்துக்கு எதிராக செயற்பட மறுத்து, சிங்கள மக்களை சிறீலங்கா ஆளும் வர்க்க இனவாத அரசுக்கும், வல்லரசுகளுக்கும் வால்பிடிக்க செய்கின்ற துரோகத்தை இழைக்கின்றனர். சிறிலங்காவிலுள்ள இடதுசாரி பாராளுமன்ற கட்சிகளிடம் இந்த துரோகம் குடிகொண்டிருக்கிறது. புலிகள் வேறு - மக்கள் வேறு சித்தாந்தம் அங்குள்ள முற்போக்கு சனநாயக சக்திகளையும் ஆட்டிப் படைக்கிறது. இது முடிவாக சிறீலங்கா அரசை, சந்திரிகாவின் இன ஒடுக்குமுறை யுத்தத்தை திரைமறைவில் ஆதரிக்கிறது. புலிகள் சிங்கள மக்களின் ஆதரவு விவகாரத்தில் அக்கறை காட்ட மாட்டார்கள். ஆனால் இன்றுள்ள உலக நிலைமையை புரிந்துள்ள தமிழீழ மக்களின் நலனில் அக்கறை கொண்டவர்களும், தமிழீழ தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகளும் புரிந்து செயல்பட வேண்டியுள்ளது. தமிழீழ மக்கள் மீது சந்திரிகா அரசு தொடுத்துள்ள யுத்தத்தை நிறுத்த வைக்கின்ற நேரடியான நிர்ப்பந்தம் கொடுக்கும் ஆற்றல் சிங்கள மக்களிடம்தான் மிகப் பெரியளவில் இருக்கிறது. அதற்கு அடுத்தபடிதான் தமிழ்நாட்டு, உலக நாட்டு நிர்ப்பந்தங்கள் தாக்கம் செலுத்தும் என்பதை புரிந்து கொண்டு சந்திரிகா அரசை எதிர்க்கும், யுத்தத்தை எதிர்க்கும், தமிழீழ மக்களின் போராட்டத்தை ஆதரிக்கும் சிங்கள மக்களின் சிறிய போராட்டங்களை கூட ஆதரிக்க வேண்டும். ஊக்குவிக்க வேண்டும். இன்று தெற்கில் சிறீ எழும் புதிய சிங்கள பௌத்த தேசிய வாத வெறி அலையை முறியடிக்கின்ற சிங்கள மக்களின் போராட்டங்களுக்கு ஊக்கத்தை கொடுக்க வேண்டும். தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்ட வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் நீண்டகால நோக்கில் இதன் முக்கியத்தவத்தை உணர்ந்து செயல்பட தவறக் கூடாது.

தமிழீழ அகதிகள் புலம் பெயர்ந்து வாழும் அய்ரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும், லண்டன், நியுயோர்க்க, நகரங்களிலும் இன்றைய சந்திரிகா அரசின் யுத்தத்துக்கு எதிராக, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக சிறிலங்கா அரசு யுத்தத்தை நிறுத்த உலக நாடுகள் நிர்ப்பந்தம் கொடுக்க கோரியும் புலிகளை அரசு அங்கிகரித்து பேச கோரியும் தமிழீழ போராட்டத்தை ஆதரித்தும் மக்கள் போராட்டங்கள் அங்குள்ள மக்கள் அமைப்புக்களால், புலிகளின் ஆதரவு அமைப்புக்களால் நடத்தப்படுகின்றன. அய்க்கிய நாடுகள் சபை தலைமை அலுவலக முன்னும் ஐ.நா. தலையிட கோரி நடத்தப்பட்டது. குறிப்பாக அய்ரோப்பிய நாடுகளில் தொடர்ச்சியான போராட்டங்கள் நடக்கின்றது. 18.11.95 இலண்டனில் 15,000 மக்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலமும், அதே நாளின் பிரான்சில் தமிழர் ஒருங்கிணைப்பு குழு நடத்திய ஊர்வலத்தில் 7000 மக்களும் கலந்து கொண்டனர். சுவிஸ், டென்மார்க், ஜேர்மன், இத்தாலி, கனடா போன்ற நாடுகளிலும் இப்படியான போராட்டங்கள் நடக்கின்றது. இலண்டன் தேவாலயங்களில் விழிப்புணர்வு பிரார்த்தனை கூட நடந்துள்ளது. இன்று அய்ரோப்பிய நாடுகளில் உள்ளவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்கள் என்பதால் சிறீலங்கா அரசின் இன்றைய யுத்தம் இந்த மக்களை ஏதாவது ஒருவகையில் நேரடியாகவும் பாதிக்கிறது. இவர்களின் போராட்டங்கள் தமிழீழ போராட்டத்தின் சமகால நிலவரங்களை, போக்குகளை உலகளவில் பிரதிபலிக்கின்றது. சிறீலங்கா அரசின் இன அழிப்பு யுத்தத்தை எதிர்த்தும் - தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரித்தும் தமிழீழ மக்களின் நேரடி பங்களிப்புடன் மக்களின் போராட்டங்கள் நடப்பது, புலம் பெயர்ந்த நாடுகளில்தான். இப்போராட்டங்களை மேலும் ஊக்கப்படுத்தி சரியான வழியில் முன்னெடுக்க வேண்டிய கடமையுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள ஈழ எதிலியர் மறுவாழ்வு கழகம் (ஒபர் சந்திரகாசன் தலைமை) இவர்கள் சந்திரிகா அரசை அதன் அரசியல் ஏமாற்றங்களை இராணுவ ஒடுக்குமுறை யுத்தத்தை எதிர்க்கின்றார்கள். கண்டிக்கிறார்கள். 'ஈழ சுதந்திரன்' மூலம் அகதிகள் மத்தியிலும், தமிழ்நாட்டிலும் தமிழீழம் தான் ஒரே தீர்வு என எழுதுகின்றனர். அகதிகள் மத்தியில் காந்தியின் அகிம்சை கருத்துக்களையும் பரப்புகின்றனர். அன்னியப் பணத்தில் அகதிகளுக்கு சமூக சேவை செய்வதுதான் பிரதான வேலை. இதேபோல் ENDLF என்ற இயக்கமும் தமிழ்நாட்டில்

www.tamilarangam.net



இயங்குகிறது. இவர்கள் IPKF உடன் மிகவும் அன்னியோன்னியமாக கூடிச் செயல்பட்ட ஆயுதக்குழு. IPKF பின் வாங்கிய வேளை இவர்கள் நாட்டை விட்டு ஓடி இந்தியாவுக்கு சென்றவர்கள். மத்தியரசின், RAW உளவு அமைப்பின் உதவியுடன் IPKF க்கு ஆதரவாக செயல்பட்ட துரோக போராளி குழுக்களின் பொடியன்கள், குடும்பங்களை ஒரிசா மாநிலத்தில் இன்றுவரை தங்கவைத்து இந்தியரசு பராமரிக்கின்றது. இந்த ENDLF இயக்கம் கர்நாடக மாநிலத்தில் ஒரு அகதி மாணவர்களுக்கான பள்ளியை 'இந்திராகாந்தி' பெயரில் நடத்துகிறது. ஏன் தமிழ் நாட்டிலுள்ள அகதி பிள்ளைகளில் சிலரை கர்நாடகத்துக்கு கூட்டிச் சென்று கல்வி கொடுக்க வேண்டும். தமிழ்நாட்டில் கல்விக்காக ஏங்கும் ஆயிரக்கணக்கான தமிழீழ அகதிச் சிறுவர்கள், இளம் மாணவ மாணவிகளுக்கு கல்வி கொடுக்குமாறு தமிழ்நாட்டு அரசை வற்புறுத்தி தமிழ்நாட்டு மக்களிடம் இந்தப் பிரச்சனையை எடுத்துச் செல்லலாம் தானே. ஒபர் அமைப்பு போல் கல்வி கோடி அரசை வற்புறுத்தி அகதிகளிடம் தமிழக மக்களிடம் இப்பிரச்சனையை எடுத்துச் செல்லலாம் தானே. இதை செய்வதற்கு பதில் "தமிழீழம் தான் ஒரே தீர்வு", சந்திரிகா அரசாங்கத்தை எதிர்த்து, புலிகளை எதிர்த்து ஆயுதப்போராட்டம் நடத்த போகிறோம் தங்களுக்கு ஆதரவு தருமாறு தமிழ்நாட்டின் பல அகதி முகாம்களில் மே மாதம் பிரச்சாரம் நடத்தி, துண்டு பிரசுரம் விநியோகித்த இந்த ENDLF இயக்கம், தமிழ்நாட்டில் இருக்கும் அகதிகளின் கல்விப்பிரச்சினையை தீர்ப்பது பற்றிய கண்ணோட்டத்தில், செயற்பாட்டில் கூட எவ்வாறு தனது இயக்க நலன்களுக்காக மக்கள் நலன்களை கைவிட்டு நிற்பது அகதிகளுக்கும் தமிழ்நாட்டு அக்தி முகாம்களில் தங்கள் அன்றாட உணவு, வேலை, கல்வி, சுகாதார பிரச்சனைகளுக்கு சிந்திக்கின்ற, கூடிப்பேசுகின்ற மக்களை, மாணவர்கள், இளைஞர், யுவதிகள் புலி என்றும் பூனை என்றும் முகத்திரை குத்தி சிறப்பு முகாமுக்கு புரிகிறது. மாற்றுகின்ற தமிழ்நாட்டு உளவுத் துறை, காவல் துறையும், அதிகாரி கூட்டமும், தமிழீழம் ஆயுதப் போராட்டம் பற்றி பேசுகின்ற இந்த ஓபர், ENDLF போன்ற தமிழ் தலைமைகளை அங்கிகரிப்பதன் ஆதரவு கொடுப்பதன் மர்மம்தான் என்ன?

இந்த "அகிம்சாவழி தமிழீழம்" "ஆயுதப் போராட்ட வழி தமிழீழம்" பேசும் இத்தலைமைகள் எல்லாம் "இந்தியரசு தலையிட்டு தமிழீழம் பெறவேண்டும்" என்பதில் ஒரு கைக் கூலி கொள்கையின் இரண்டு பக்கங்கள். இந்தியரசின் இரண்டு உத்திகளுக்கும் ஊக்கிகள். இன்று சந்திரிகா அரசு நடத்தும் இன அழிப்பு யுத்தத்தை அகிம்சாவழியிலும் ஆயுதப் போராட்ட வழியிலும் எதிர்க்க முற்படும் இத்தலைமைகள். சந்திரிகா அரசின் இந்த தமிழின அழிப்பு யுத்தத்துக்கு அரசியல் இராணுவ ரீதியில் எல்லா ஒத்துழைப்பையும் வழங்கும் இந்தியரசு பற்றி ஒரு சிறு வார்த்தை சொல்ல தயாரில்லை. ராஜீவ் கொலையாலும், தமிழர்களின் இராஜதந்திரம் இன்மையாலும், ரால் அரசு மவுனம் சாதிப்பதாக வெட்கம் கெட்டு பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். தமிழீழத் தமிழர்களை கொன்றொழிக்கும் சந்திரிகா அரசின் இன அழிப்பு யுத்தத்தை பார்த்து இந்தியரசு மவுனம் சாதிக்கவில்லை. அப்பட்டமாக சிறீலங்கா அரசுக்கு உதவுகிறது என்பது தமிழ் நாட்டின் படிப்பறிவில்லா ஒரு பாமரனுக்கு கூட புரிகிறது. இந்தியரசின் காலடிகளை நக்கி பிழைக்கும், அரசியல் பிழைப்பு நடத்தும் இந்த தமிழ் தலைவர்களுக்கு? உண்மை தெரிய நியாயம் இல்லை.

தமிழ்நாட்டில் சந்திரிகா அரசின் யுத்தத்தை நிறுத்த கோரி தமிழீழ மக்களுக்கு ஆதரவு பலவகைப்பட்ட மக்கள் போராட்டங்கள் தொடர்ந்து நடக்கின்றன. இனவுணர்வுள்ள அமைப்புகள், தனித்தமிழ்நாடு கோரும் இயக்கங்கள், பாராளுமன்ற கட்சிகள் என எல்லாம் தமது போராட்டங்களை அறிவிக்கின்றன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மருந்துகளும், பணங்களும், இரத்ததான உதவிகளும் செஞ்சிலுவை சங்கம் வழியாக அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். உண்ணா விரத போராட்டங்கள் முதல் இலங்கை தூதரகத்தை முற்றுகை யிடும் போராட்டங்கள் வரை ஆயிரக்கணக்கான தமிழ்நாட்டு மக்கள் பங்கு கொள்கிறார்கள். 30-11-95-இல் தமிழ்நாடு தழுவிய பொது வேலை நிறுத்தமும் கடையடைப்பும் நடந்துள்ளது.

தமிழ் நாட்டின் பாராளுமன்ற அரசியல் கட்சிகள் கூட இந்தியாவின் நயவஞ்சக தனத்தை புட்டு காட்டுகிறார்கள். சில கட்சிகள் இந்தியரசு சிறீலங்காவுக்கு எப்படியான இராணுவ உதவிகள் செய்து கொண்டிருக்கிறது என்பதை கூறி வெளிப்படையாக கண்டிருக்கிறார்கள். மொத்தத்தில் எந்த போராட்டங்களிலும் இந்தியரசு சிறீலங்கா அரசுக்கு உதவுவதை நிறுத்து தமிழின அழிப்பு யுத்தத்தை நிறுத்த நிர்பந்தம் கொடு என அறை கூவுகிறார்களே ஒழிய "இந்தியரசும் படைகளும் தலையிட கோரவில்லை" (இந்திய ஆக்கிரமிப்பு படையின் 1987 அனுபவ பாடம் முக்கிய காரணம்) ஆனால் தமிழ்நாட்டிலுள்ள தமிழீழ தரகர்கள் இந்தியரசு தலையீட கோருவதுதான் வேடிக்கை. இவர்களை தமிழீழ, தமிழக மக்களிடம் இலகுவாக அம்பலப்படுத்த அன்னியப்படுத்த இவர்களுக்கு பின்னால் உள்ள மக்களை, அடிமட்ட போராளிகளை சிந்திக்க தூண்ட சரியா தருணம் இது.

அடுத்து இன்று தமிழ்நாட்டிலும், புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழும் அய்ரோப்பிய நாடுகளில், கனடாவில் நடக்கும் மக்கள் போராட்டங்கள், "சந்திரிகா அரசு யுத்தத்தை நிறுத்த வேண்டும். புலிகளுடன் பேசவேண்டும்" "அய்க்கிய நாடுகள் சபை தலையிட வேண்டும்" என்ற கோரிக்கையை புலிகளால் ஒழுங்கு செய்யப்படும். ஊர்வலம், ஆர்பாட்டம் உட்பட, தமிழ்

www.tamilarangam.net



நாட்டு கட்சிகளாலும் முன் வைக்கப்படுகின்றது. 1987-க்கு முன் "இந்தியரசு தலையிட வேண்டும்" என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டு வந்தது. இந்திய அமைதிப்படை எவ்வாறு இவர்களுக்கு ஆக்கிரமிப்பு படையாக மாறியது என்பது தெரியும். தெற்காசியாவில் முதன் முதலாக இந்திய விரிவாதிக்கமும் இந்திய ஆக்கிரமிப்பு படையும் தமிழீழ மக்களின் ஆக்கிரமிப்பு எதிர்ப்பு போரில் அம்பலப்பட்டது. தோற்கடிக்கப்பட்டது. 'அய்க்கிய நாடுகள் சபையும் அய்நா படையும் அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்களின் உலக சுரண்டலுக்கும், புதிய உலக ஒழுங்கமைப்புக்கும் ஒடுக்கு முறைக்கும் அப்பட்டமாக சேவை செய்து வருவது உலக அரசியல் பற்றி அரிச்சுவடி தெரிந்தவர்களுக்கு கூட தெரியும். சோமாலியாவிலும், போஸ்னியாவிலும் "அய்.நா. அமைதிப்படை" எப்படி ஏகாதிபத்திய நலன்களுக்காக "அய்.நா. ஆக்கிரமிப்பு படையாக" உள்நாட்டு யுத்தங்களில் தலையிட்டு அட்டூழியம் செய்கின்றது. அய்நாவிலுள்ள மூன்றாம் உலக நாடுகளின் படைகளை கொண்டு அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்தியங்கள் மூன்றாம் உலக நாடுகளின் உள்நாட்டு யுத்தத்தில் மோத வைக்கும் அய்க்கிய நாடுகள் சபையின் ஏகாதிபத்திய அரசியல் - இராணுவ இராஜ தந்திரத்தை உலகநாட்டு மக்கள் கண் முன்னே பார்க்கிறார்கள். மூன்றாம் உலக நாட்டில் போராடும் மக்களும், போராளிகளும் தேசபக்த புரட்சிகர இயக்கங்களும், அய்.நா படைகளை எதிர்த்து குரல் எழுப்புகிறார்கள். அய்.நா. ஆக்கிரமிப்பு படையை எதிர்த்து போரிடுகிறார்கள். சோமாலியாவில் அய்.நா படையிலுள்ள இந்தியா, பாகிஸ்தானிய இராணுவங்களுக்கு நடந்த கதை தமிழீழ மக்களுக்கும் போராளிகளுக்கும், ஏன் தமிழ்நாட்டு மக்களுக்கும் தெரியும். இன்றைய உலக நிலைமையை புரிந்த தமிழீழ, தமிழ்நாட்டு தலைவர்கள், இயக்கங்கள் கட்சிகள் ஏன் இலங்கைப் பிரச்சனையில் அய்க்கிய நாடுகள் சபை தலையிடக் கோருகிறார்கள்? உலக அரசியல் - இராணுவ நடப்புகள், ஏகாதிபத்திய இராணுவ கூட்டுக்கள் பற்றித் தெரியாதா? இல்லை கையைச் சுட்டுக் கொண்ட பின்தான் கூக்குரல் இடுவார்களா? இந்தியரசு இந்தியப் படைகள் மட்டும்தான் சந்திரிகாவுக்கு உதவும், அய்க்கிய நாடுகள் சபை அய்நா படை தமிழர்களுக்கு உதவும் என நம்புகிறார்களா? இந்திய அமைதிப் படையின் "மெட்ராஸ் ரெஜிமெண்ட்", "கூர்கா ரெஜிமெண்ட்", "சீக்கிய ரெஜிமெண்ட்" தமிழீழ மக்களையும் பெண்களையும் என்ன செய்தார்கள்? அய்நா அமைதிப்படையின் வெள்ளை தோல் "ரெஜிமெண்ட்", கறுப்பு தோல் "ரெஜி மெண்ட்" மட்டும் தமிழீழ மக்களை பெண்களை பூப்போட்டு கும்பிடுவார்களா?

தேசிய இன விடுதலைக்கான சுதந்திர போராட்டங்கள், மக்களின் சமூக பொருளாதார அரசியல் விடுதலைக்கான புரட்சி போராட்டங்களை வளர்ப்பது, வெற்றி கொள்வது அதற்கான அரசியல் - இராணுவ திட்டங்களில், வழிகளில் மேற்கூறிய முதலாளித்துவ சிறு முதலாளித்துவ தலைமைகள் அடிப்படையில் உள்நாட்டு மக்களை, உலகநாட்டு மக்களை உணர்வு பூர்வமாக நம்புவதில்லை; சிறீலங்கா அரசுக்கும் வேற்று நாட்டு அரசுகளுக்கு இடையில் நடக்கும் முரண்பாடுகளை தற்காலிக மோதல்களை பயன்படுத்தி உதவி பெறுவதிலும் அவ்வரசுகளின் ஊக்கிகளாக செயல்படுவதிலும், நவீன மிக நவீன ஆயுதங்களை மட்டும் போராட்ட வெற்றிக்கு அடிப்படையாக நம்புவதிலும் முக்கிய கவனம் செலுத்துவார்கள். (இந்தியரசை பயன்படுத்த நினைத்த, தமிழீழ போராளி இயக்க தலைமைகள் எவ்வாறு சின்னாபின்னப்பட்டு போனார்கள், போராட்டத்தை காட்டிக் கொடுத்தார்கள். போராட்டம் இன்று எப்படியான இடியப்பச் சிக்கலாக மாறியுள்ளது)

தமிழீழ தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகளின் கடமையும், தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அறிவுபூர்வமாக உணர்வு பூர்வமாக ஆதரிக்கின்ற உலக மக்களின் இயக்கங்கள், கட்சிகளின் கடமையும்

★ சந்திரிகா தலைமையிலான சிறீலங்கா அரசு நடத்தும் இன அழிப்பு யுத்தத்தை நிறுத்த கோர வேண்டும் - தமிழீழ மக்களுக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

★ சிறீலங்கா அரசு யுத்தத்தை நிறுத்த, இந்தியரசு நிர்ப்பந்தம் கொடுக்க கோர வேண்டும். தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கரிக்க கோர வேண்டும்.

★ சிறிலங்கா அரசு யுத்தத்தை நிறுத்த அய்க்கிய நாடுகள் சபை நிர்ப்பந்தம் கொடுக்க கோர வேண்டும். தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அய்நா அங்கிகரிக்க வேண்டும்.

★ இந்தியரசோ, வேறு நாட்டு அரசுகளோ அய்க்கிய நாடுகள் சபையோ சிறீ ங்கா அரசுக்கு இராணுவ உதவிகள் வழங்குவதையும், அமைதி, சமாதானத்தின் பெயரில் படைகள் தலையிடுவதையும் உறுதியாக எதிர்க்க வேண்டும்.

★ இலங்கை இனப் பிரச்சனைக்கு தீர்வு காண, முதலில் யுத்த நிறுத்தவும். அமைதியும் சமாதானமும் ஏற்பட "திம்பு கோரிக்கைகளை" ஏற்க்கும் வகையில் சந்திரிகா அரசு அரசியல் தீர்வு திட்டத்தை முன் வைக்க கோர வேண்டும். நிர்பந்திக்க வேண்டும்.

— திலீபன்

www.tamilarangam.net



# "சமாதானம் - ஆம் ஜனநாயகத்துடன்" என்ற மகஜர் மக்களை மந்தைகளாக மாற்றுவதே!

அண்மையில் பிரான்ஸ் உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் இலங்கையைச் சேர்ந்த 35 அமைப்புக்களின் சார்பில் மனோரஞ்சன் ஒரு கருத்தரங்கை நடத்தியிருந்தார். இவர் இலங்கையிலிருந்து வந்து இக் கருத்தரங்கை நிகழ்த்தியதுடன் ஜனநாயகத்தில் ஆர்வமுள்ள பலரும் (முரண்பாடுகள் உடன்) இதில் பங்கு கொண்டனர். மனோரஞ்சன் முன்னாள் NLFT உறுப்பினராம் பின் PLFT மத்திய குழு உறுப்பினரும் ஆவர்.

சந்திரிகா அரசு பதவி ஏற்றதன் பின்பு இவ் 35 அமைப்புகளின் சார்பாக அமைப்புக்குழு ஒரு சில நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் மட்டும் இன்றி, இவர்களின் தூதுக் குழுவானது யாழ் சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித்தும் வந்தது.

நாம் இச் செயற்பாடுகள் மீதான ஒரு விமர்சனத்தைச் செய்ய முன்பு எமது தெளிவான சில கருத்துக்களை இவ்விடத்தில் முன் வைக்க வேண்டியது அவசியமானதாகக் கருதுகிறோம்.

இன்று இலங்கையிலும் சரி, புலம் பெயர்ந்த நாடுகளிலும் சரி ஜனநாயகத்தைப் பெற்றுக் கொள்ள எடுக்கப்படும் நேர்மையான அனைத்து முயற்சிக்கும் சமர் தன்னால் முடிந்தளவு பங்களிப்பை நல்கும். அதன் வரலாற்றுத் தேவையை, தன் இன்றைய முக்கியத்துவத்தை சமரானது ஏற்றுக் கொண்டதுடன், அதற்காக நேர்மையாக உழைக்கும்.

ஜனநாயகத்தை மீள அமைக்கும் முயற்சி என்பது எப்போதும் ஒரே ஒரு போக்கின் ஊடாக மட்டுமே சாத்தியமானது. அது சொந்த மக்களை, அதன் அணிகளைச் சார்ந்ததாக மட்டுமே இருக்க வேண்டும். இதற்கு ஆதரவாக உலக மக்களின் புரட்சிகர பிரிவின் ஆதரவையும் பெற முடியும். இதை விடுத்து அந்நிய ஏகாதிபத்தியங்கள் பிற நாட்டு அரசுகள், குறிப்பாக இந்திய அரசு, மற்றும் இலங்கை அரசு மற்றும் துரோகக் குழுக்கள், கூலிப் படைகள் என்ற இதில் ஏதாவது ஒரு வகையினருக்கு உதவுவதன் மூலம் ஜனநாயகத்தை மீள அமைத்தல் என்ற போர்வையில் ஜனநாயகத்தை மீறும் எக் கோரிக்கையையும். சமர் மிகக் கடுமையாக எதிர்த்து நிற்கும். இதை அணுகும் அனைத்து மறைமுக செயல்களையும் சமர் எதிர்த்துப் போராடும்.

குறிப்பாக 'புலி எதிர்ப்பு' என்ற கோஷத்தின் பின்னுள்ள எதிர் புரட்சியை சமர் கடுமையாக எதிர்க்கும். புலிகளின் ஜனநாயக விரோதச் செயல்களை விமர்சிக்க மற்றும் அதை எதிர்த்துச் செயற்படக் கோரும் சமர், புலி எதிர்ப்பின் ஊடாக தேசிய விடுதலைப் போராட்டத்தை எதிர்க்கும், அதை நாசம் செய்யும் எச் செயலையும் சமர் எதிர்த்து நிற்கும்.

இன்றைய தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய ஆயுதக் குழுக்கள் அனைத்துமே மக்கள் விரோத நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தன. பின்னைய நாட்களில் கொழும்பிலும் இந்தியாவிலும் வளர்ப்புப் பிள்ளைகளாக துரோகம் இழைந்து இயங்கியதுடன் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்தும் வருகின்றன. தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு பச்சையாகவே துரோகம் இழைத்து வரும் இவர்கள் இலங்கை அரசு, இந்திய அரசு, மற்றும் ஏகாதிபத்தியங்கள் என மக்களை விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அரசுகளுடனும் ஜனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைக்கும் அவைகளின் ஈவிரக்கமற்ற செயல்களுக்கும் தலையால் சேவகம் செய்தும் வருகின்றன.

சிறுபான்மை தேசிய இனங்களின் விடுதலை சுயநிர்ணய அடிப்படையில் மட்டுமே தீர்க்க முடியும் என்பதை நாம் தெளிவாக ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் ஜனநாயகத்தை மீள அமைக்கும் எந்த வழிவகைகளிலும் இது எப்பொழுதும் துலைந்து போய் விடக் கூடாது. குறிப்பாக இதை ஏற்றுக் கொள்ளும் அனைத்துத் தரப்பினரும் ஒரு பொதுவான ஜனநாயகத்திற்கான முன்னணியைக் கோரும் பட்சத்தில் அது ஜனநாயகத்திற்காக உண்மையில் இயங்கும். அது மகஜர் கொடுப்பதற்குப் பதில் சொந்த மக்களை, அதன் புரட்சிகர அணிகளை செயலில் இறங்கும் வகையில் புரட்சிகர அறை கூவலுடன் செயற்பட வேண்டும்.

இவைகள் அல்லாத ஜனநாயகம்! ஆம். சமாதானத்துடன் என்ற கோரிக்கை இன்றைய இனவாத அரசை, பெரும் தேசிய இனவாதத்தை, ஜனநாயக மீறலைத் தொடர மக்கள் இதை எதிர்க்காத வகையில் திசை திருப்பும் ஒரு கபடம் நிறைந்த முன் மொழிவேயாகும். குறிப்பாக இதன் செயற்பாடுகள் அரசு சார்பான சிங்களப் பகுதிகளில் இருப்பதால் இதை வளர்த்தும் எடுக்கும் என்பதையும் மறந்து விடக் கூடாது. மக்கள் செயலில் இறங்காத வண்ணம் பார்த்துக் கொள்ளும் வகையில், மக்கள் புரட்சிகர வழிவகைகளைத் தேடாத வகையில் கூட்டணியின் சத்தியாக்கிரகம், தொண்டமானின் பிராத்தனை போன்றவற்றுக்கும் இவர்களின் மகஜர் அனுப்பும் செயற்பாட்டுக்கும் அடிப்படையில் எந்த வித வித்தியாசமும் கிடையாது.

சிங்களப் பிரதேசத்தில் கொஞ்சமாவது சிந்தித்து முன் வர முயலும் ஒரு சிலரைக் கூட ஜனநாயகமற்ற இவ் உலகத்தில் மகஜர். மற்றும் புரட்சிகர வழியற்ற வெற்றுக் கூட்டங்களினூடாக செக்குமாடாகச் சுற்றிவரச் செய்வதுடன், மக்களைத் திசை திருப்பி மக்களை மந்தைகளாகவும் ஆக்கி வருகின்றனர். இதன் மூலம் சந்திரிகா இனவாத அரசை பலப்படுத்த முனைகின்றனர்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் இனவாத அரசின் சமாதானம் பற்றிய போலிப் பிரச்சாரமும் தேசிய விடுதலையின் பால் புலிகளின் ராஜ தந்திரம் அற்ற வழமையான செயல் முறைகள் என்பனவும் இணைந்து இயல்பில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு 'சமாதானம்! ஆம். ஜனநாயகத்துடன்..' என்ற கோஷமானது நடைமுறையில் எதிரானதாகவே செயற்படுகின்றது.

இதை இவர்கள் எப்படிச் செயற்படுத்த முனைகின்றனர் எனின்: புலிகள், அரசு என இருவரிடத்தில் சமர்ப்பித்த மகஜரில் புலிகளை நோக்கி பொருத்தமான சமாதானத் திட்டம் ஒன்றை முன் வைக்க கோருகின்றனர். இக் கோரிக்கை அடிப்படையில் பெரும் தேசிய இனவாதத்திற்கு துணை போவதுடன், தனிச் சலுகையை இழக்க விரும்பாத, தனிச்சலுகையை கட்டோடு வைத்திருக்க உதவுகின்ற ஏகாதிபத்திய நாட்டின் எல்லைக்சோட்டை தாங்

www.tamilarangam.net



கிக் கொள்ளும் காலனித் துவக்கத்திற்குத் துணை போகும் செயற்பாடுளுமாகும். பெரும் தேசிய இனத்தின் இனவாத இயல்புக்கு ஏற்ப, அதன் இருப்பைத் தக்க வைக்கும் வகையில், அதன் நலன்களைப் பாதிக்காத வகையில், புலிகளை நோக்கி பொருத்தமான தீர்வை முன் வைக்கக் கோருகின்றனர்.

இப்படிக் கேட்க இந்தப் பெரும் தேசிய வாதிகளுக்கோ சமாதானம்! ஆம். ஜனநாயகத்துடன்... என்ற அமைப்புக் குழுவுக்கோ, எந்தத் தனிநபருக்கோ எந்த வித உரிமையும், அதிகாரமும் கிடையாது. தமிழ் தேசிய இனமானது இதன் கபடத்தனத்தை பல நீண்ட கால வரலாற்று அனுபவங்களினூடாக நன்றாகவே அறிவர்.

புலிகளின் ஜனநாயக மீறலைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் ஜனநாயக் கோரிக்கையான சுய நிர்ணயக் கோரிக்கையை 'சமாதானம்' ஆம். ஜனநாயகத்துடன் என்ற கோரிக்கையுடன் பெரும் தேசிய இனத்திற்கு தாரை வார்க்க மறை முகமாகக் கோரும் இவர்களையிட்டு எப்பொழுதும் விழிப்பாகவே இருத்தல் வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள், சிங்கள மக்கள், என அனைத்து இலங்கை வாழ் மக்களும் அரசு, மற்றும் பல் வேறு அமைப்புக்களால் (புலிகள் உள்ளிட்டு) ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டு, உரிமைகளை இழந்துள்ளனர் என்பது உண்மையே. இம் மக்களின் ஜனநாயகம் மீதான விருப்பு எப்பொழுதும் உண்மையான விடுதலையின் மீதானதாகவே இருந்து வந்துள்ளது. இதனை தமக்குச் சாதகமாக பயன்படுத்த முனைந்த சந்திரிகா அரசு. மற்றும் இக் குழுவினர் செய்ய நினைப்பது மக்களை ஏமாற்றவே.

மக்கள் உண்மையான சமாதானத்தை அடைந்து விடுவதைத் தடுக்க மகஜர் அனுப்புவதுடன், "பொருத்தமான தீர்வு" என்று ஒன்றைக் கூறி இலங்கையின் சிறுபான்மை மக்களின் சமாதானக் கோரிக்கையை கேலிக்கூத்தாக்கி கொச்சைப் படுத்துகின்றனர். இது பெரும்பான்மை இனவெறி தேசியவாதத்திற்கு பசையாக ஒத்துப் போவதே யாகும்.

"பொருத்தமான தீர்வை" தமிழ் மக்கள் சார்பாக புலிகள் கூட சமர்ப்பிக்க முடியாது. ஏனெனில் தமிழ் தேசிய இனத்தின் உண்மையான சமாதானம். ஜனநாயகம் என்பது சுயநிர்ணய உரிமையில் தான் தங்கியுள்ளது. சேர்ந்து வாழ்வதா, அல்லது பிரிந்து போவதா என்பது சிறுபான்மை இனத்தின் உரிமை. இது மட்டுமே உண்மையான சமாதானம்! ஆம் ஜனநாயகத்துடன்.

சமாதானம்! ஆம். ஜனநாயகத்துடன்... என்பது தமிழ் தேசிய விடுதலைக்கு அப்பால் உருவாகிவிடாது. இது சுய நிர்ணயம் என்ற அச்சாணியில் மட்டுமே சாத்தியம். அதாவது இதற்காகப் போராடுவதன் மூலம் மட்டுமே, அதன் வழிகளில் மக்கள் அணிதிரள்வதன் ஊடாக மட்டுமே அதன் வழிமுறைகளில் புரட்சியை நடத்துவதன் மூலம் மட்டுமே சமாதானம்! ஆம். ஜனநாயகத்துடன்... என்பதைப் பெற முடியும்.

இதை நிராகரித்த சமாதானம் ஆம். ஜனநாயகத்துடன் என்பது எந்த குறுக்கு வழிகளிலும் சாத்தியமில்லை. இது இருப்பிலுள்ள ஜனநாயக விரோதச் செயல்களைத் தக்க வைப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும், தேச விடுதலையை கிடப்பில் போட்டு விடுவதற்கும் செய்யும் கைங்கரியமேயாகும்.

சமாதானம்! ஆம். ஜனநாயகத்துடன் என்ற குழுவின் பிரதிநிதியானவர் இக்கைங்கரியங்களை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கு சில வாதங்களை சுற்றிச் சுழன்று மீண்டும் மீண்டும் முன் தள்ளினார்.

- இனக்கலவரம் என்ற ஒன்று இனி மேல் வராது. அதாவது நாம் வர விடமாட்டோம்.
- யாழ் சென்று புலிகளைச் சந்தித்த இக் குழு தம்முடன் எடுத்துச் சென்ற 500 மகஜர் பிரதிகளை திடீரென விநியோகித்த போது புலிகள் விரும்பாத நிலையிலும் மக்கள் முண்டியடித்து பெற்றுக் கொண்டனர். எனவே தமிழ் மக்கள் சாமாதனம் மீது மாற்றுக் கருத்துக்கள் மீது ஆர்வம் உள்ளவர்களாக உள்ளனர்.
- வவுனியாவுக்கு பாத யாத்திரை வந்த 5000 மக்கள் உணர்வு பூர்வமாக சொந்தச் செலவில் வந்தனர்.
- பல நூறு சிங்களக் கிராமங்களில் பிரச்சாரம் செய்துள்ளோம்.

என இவைகளை முன் நிறுத்தி, வேறு சில விடயங்களையும் முன் வைத்தனர்.

இனக்கலவரம் இப்போதைக்கு வரமாட்டாது என்பது 99 சதவிகிதம் உண்மையானதே. இது இவர்கள் குறிப்பிடும், இவர்களின் அமைப்பினால் தடுக்கப்படும் என்ற எடுகோளில் இருந்து நாம் குறிப்பிடவில்லை. மாறாக ஓர் இனக்கலவரம் வருவதை இப்போதைக்கு அரசு விரும்பாது என்பது தெளிவான உண்மை. அன்று 13 இராணுவவீரர்கள் கொல்லப்பட்டவுடன் உருவான கலரவம் இன்று பல நூற்றுக் கணக்காக கொல்லப்பட்டதும் உருவாகவில்லை. ஏனெனில் இனி ஓர் இனக்கலவரம் வரின் இயல்பில் தமிழீழம் என்பது அங்கீகரிப்புக்கு நகர்ந்து விடும் என்பதை அரசு தெளிவாகவே உணர்ந்துள்ளது. 1983 முதல் 95-க்கு இடைப்பட்ட 12 வருட காலங்களில் இனக்கலவரம் நடக்கவில்லை. அப்பொழுது இந்த 35 அமைப்புக்கள் இருந்தும் இருக்கவில்லை. இனியும் இனக்கலவரம் நடக்க அரசு இலேசில் அனுமதிக்காது.

இதையும் மீறி நடக்குமாயின் அரசு பலவீனம் அடைந்த நிலையில் மட்டுமே சாத்தியம். குறிப்பாக காலி இனக்கலவரத் தூண்டுதலை வெறும் தனிப்பட்ட பிரச்சனையாகக் காட்டத் தலைப்பட்டனர். உண்மையில் அது ஓர் இனக்கலவரத் தூண்டுதலின் பேரில் உருவான நிகழ்வே. அதன் பூரனத்துவத்தை இன்று சாதாரண பத்திரிகைகளில் கூட கானமுடியும்.

இனக்கலவரம் நடக்கமாட்டாது என்ற எடுகோளை எடுக்கும் இவர்கள், உண்மையில் இனக்கலவரத்தைத் தூண்டிவிடும் சம்பவங்களைக் கூட மறுதலித்து, திரித்து அதைத் தனிப்பட்ட பிரச்சனையாக மாற்றிவிட படாத பாடுபடுகின்றனர். இது ஒரு தேசிய விடுதலையின் பால், அதன் போராட்டத்தின் பால் எதிர்நிலைக்கு இலேசாக இவர்களை இழுத்துச் செல்கின்றது.

அடுத்து யாழ் மக்கள் துண்டுப் பிரசுரத்தை வாங்க ஆவல் கொண்டனர் என்பதை திடீரென 'கண்டுபிடிப்பாக' காட்ட முயல்கின்றனர். மக்களிடம் கானப்படும் முரன்பாடுகள், அவர்கள் மாற்றுக் கருத்துக்காக போராட நினைக்கும் இயல்புகளை அந்தச் சம்பவத்திற்கு முன்புவரை கண்டுகொள்ள முடியாதவர்கள் எப்படி சமாதானம்! ஆம். ஜனநாயகத்துடன்.. என்று வெளிக்கிட்டவர்கள்? எப்படி அதை நோக்கிச் சென்றடைவார்கள்? எந்த மக்களும் தமது கருத்துக்களுக்காக போராட முயல்வது ஒரு சாதாரண இயங்கியல் நிலை. இதைத் திடீரென ஞானம் கலைந்து எழுந்த

www.tamilarangam.net



வன் போல் கூறுவது மக்களை ஏமாற்றும் ஒரு நடிப்பு. கபடம் நிறைந்த ஏமாற்று முன்முயற்சி.

அடுத்து வவுனியா வந்த மக்கள் தொடர்பாக கூறுவதாயின்:

கூட்டணியினரின் வாய்வீச்சை நம்பி 90 சத வீதமான மக்கள் அவர்களின் பின்னால் இழுபட்டனர். தொண்டமான் மலையக மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவார் என நம்பி ஆறு லட்சம் தொழிலாளர்கள் 15 ரூபாய் வீதம் மாதச்சந்தா கட்டுகின்றனர். சந்திரிகா அரசு சமாதானத்தைப் பெற்றுத் தரும் என நம்பி 62 வீத மக்கள் வாக்குக்களை அள்ளிப் போட்டனர். இது போன்று சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன் என்ற நம்பிக்கையின் பேரில் 5000 பேர் வருவது ஒரு பெரிய விசயமல்ல. இந்தக் கோரிக்கையை சந்திரிகா வைத்துக் கொண்டு வவுனியா வந்திருப்பின் இதைவிடக் கூடப்பேர் வந்திருப்பர் என ஒருவர் சொன்னால், அதில் பொய்யிருக்காது.

அடுத்து சில நூறு கிராமங்களில் இதற்காகப் பிரச்சாரம் செய்துள்ளோம் என்பது மக்களை அணிதிரட்டி விடாது. அது வெறும் பிரசங்கம். சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்... என்பதற்கு எந்த அரசியல் வேலைத் திட்டமும் (மூதலாளித்துவ வழிகளில் கூட) கிடையாது. இல்லாத வரை இது எதையுமே சாதிக்காது.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் புலிகள் அம்பலப்படும் போது ஒரு பெரும் தாக்குதலும், அரசு அம்பலப்படும் போது புலிகள் மீது ஒரு பெரும் தாக்குதலும், கொழும்பில் ஒரு குண்டு வெடிப்பும். எல்லாவற்றையும் பழையபடி கொண்டு வந்து விடும். இன்று தேவைப்படுவது சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன் என்பதை ஒரு அரசியல் வழியில் மக்களிடம் புரிந்து கொள்ள வைப்பதேயாகும்.

மேலும் இவ் 35 அமைப்புகளில் நாம் அறிய சில அமைப்புகள் ஜனநாயகம் ஆம், சமாதானத்துடன் .. என்று முதலாளித்துவ கோரிக்கையை மாற்று அமைப்புகளுக்கு வழங்கியதே கிடையாது. வாசுதேவாவின் நவ சமசமாயக் கட்சி, கம்யூனிஸ்ட்டு கட்சி என்பன குறிப்பாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்க உறுப்பினர்களை பலமுறை தாக்கியுள்ளனர். (பார்க்க. தொழிலாளர் பாதை) மற்றும் துரோகம் இழைத்து நிற்கும் ஆயுதம் ஏந்திய தமிழ் குழுக்கள் எப்படி சமாதானம் ஆம், ஜன்நாயகத்துடன்.. என்பதை வழங்குமாம்?

குறிப்பிடத்தக்கதாக நடந்த வவுனியா பாத யாத்திரையில் துரோக PLOTE மக்களுக்கு உணவு வழங்க ஏற்பாடாம். ஆனால் ஏமாற்றி விட்டனர். அது வேறுகதை. ஆனால் தலைவர்களோ விழுந்து விழுந்து சாப்பிட்டனர். சாப்பாடு கொடுக்கும் சமாதான விரும்பிகள் PLOTE சமாதானம் ஆம், ஜனநாயகத்துடன்.. வழங்கிக் கொடுத்த விருந்தும், அதை உண்ட தலைவர்களின் சமாதானம் ஆம், ஜன்நாயகத்துடன்.. என்பதுவும் என்ன என்பதை நாம் கூறத்தான் வேண்டுமா? தேவையே இல்லை. ஏனெனில் PLOTE சமாதானம் ஆம், ஜனநாயகத்துடன்.. என்று சொல்லுவது படுகொலைகள். தேச விடுதலைத்துரோகம் என்பனவற்றைத் தாண்டியது அல்ல. இவர்களின் கொலைகள், மற்றும் தேசத்துரோகத்தில் வேர்வை சிந்தி கிடைத்த உழைப்பில் விருந்து உண்ட தலைவர்கள். அதன் வழியில் தொண்டர்களை அழைத்துச் செல்ல முனைவது அபாயகரமான சகதிக்கே.. இதற்கு ஐரோப்பாவில் குறைந்த பட்சம் ஜனநாயகத்திற்காக போராடத் துடிப்பவர்களை பங்கு கொள்ள அழைப்பது இன்னுமொரு ஏமாற்று அவல நாடகமே.

புலிகளின் ஜனநாயக மீறலை எதிர்க்க என்ன செய்யலாம்? இவர்களின் அதாவது, சமாதானம் ஆம். ஜனநாயகத்துடன்.. என்ற வாதிகளின் வழி முறையில் புலிகளுக்கு எதிராக இவ் ஏகாதிபத்திய அரசுகளுக்கு 'பெட்டிசன்' போடுவது. மகஜர் கொடுப்பது போன்றவைதானாம் வழிகள். (புலம் பெயர் நாடுகளிலுள்ள சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட பிரச்சனைகளுக்கு. இங்கு நிதியைக் கோருவது என்பது இவற்றிலிருந்து முற்றிலும் வேறானது.) இந்த வழியைக் கைக்கொள்ளும் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆங்கில மொழியில் (கவனிக்கவும் ஆங்கில மொழியில்) புலிகளின், அரசின் ஜனநாயக விரோதச் செயல்களை இவ் ஏகாதிபத்தியங்களிடம் சமர்ப்பிக்கின்றனர். (தமிழ் மக்களிடம் அல்ல என்பதை வாசகர்கள் நன்றாக ஞாபகத்தில் கொள்ள வேண்டும்). இதன் மூலம் மொத்த ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு மூல காரணமான இவ் அரசுகளை எம் நாட்டில் தாழ்மையுடன் தலையிட வைப்பதன் மூலம், தேசிய விடுதலைப் போராட்டத்தை சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்.. என்று கோரிக்கையுடன் காட்டிக் கொடுத்து அழிக்க முனைகின்றனர்.

இதற்குள் தெரியாமல் அப்பாவித்தனமாக தான் செய்வது தேசிய விடுதலைக்கு உதவும் என நம்பிய சபாலிங்கம் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க அறிக்கையை பிரஞ்சில் மொழி பெயர்த்து அதை ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி.. இவர்களின் வழியில் சென்ற ஓர் அப்பாவித் தொண்டன்தான் சபாலிங்கம். இந்தச் சபாலிங்கத்தைப் பலிக்கடா ஆக்கியவர்கள் யாழ்பல்கலைக்கழக ஆசிரியர் குழுவே. (ஆனால் இக் கொலைகளில் ஈடுபடுபவர்கள் ஓர் அரசியல் வரையறையில் நின்றுதான் கொலைகளைச் செய்பவர்கள் அல்ல என்பதை நாம் மறந்து விடக் கூடாது) இதையொட்டி நாம் மறைமுகமான விமர்சனம் ஒன்றை சமர்-12ல் ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானமும் மாற்று மொழிக் கட்டுரைகளும்' என்ற தலைப்பில் செய்திருந்தோம்.

இருந்தபோதும் தமது கருத்துக்களைத் திருத்திக் கொள்ளாது அதன் வழிகளில் செல்வதுடன், அவர்களுக்கு சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன் என்ற குழிவில் ஊக்குவித்து நிற்கின்றனர்.

தேச விடுதலைக்கு எதிராக மாறிவிடும் சமாதானக் குழுவின் செயற்பாடு, எதிர்கால செய்பாடுகள் என்பன மிகவும் ஆபத்தானது. அவர்கள் உண்மையான விடுதலையின் பால் ஆர்வம் இருப்பின் புரட்சிகர வழிமுறைகளில் மக்களை அணி திரட்டவும், தம்மை சுயவிமர்சனம் செய்து கொள்ளவும் தயங்காது முன்வரல் வேண்டும்.

பல்கல்லக்கழக ஆசிரியர் சங்க அறிக்கையை அப்பாவித்தனமான மொழி பெயர்த்து சபாலிங்கம் படுகொலை செய்யப்பட வாய்ப்பளித்ததைப் போல் மேலும் சிலரை ஐரோப்பாவில் மோட்டுத்தனமாக பலியிட 'சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்'.. என்ற கோரிக்கையின் பின்னுள்ள கோரிக்கைகள், மற்றும் அதன் பிழையான செயல்வடிவம் என்பன நியாயப்படுத்த முடியாத அரசியற் படுகொலைகளுக்கு பரிதாபமாக வழி வகுக்கும் என்பதை சமரானது கட்டிக் காட்ட விரும்புகின்றது.

நன்றி! சமர் பிரான்ஸ்

www.tamilarangam.net



# பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு அஞ்சலி

தமிழே முழுமூச்சாய், தமிழன உணர்வே சிந்தனையாய் வாழ்ந்த, தமிழக மீட்சிக்கும், தமிழீழ தேசிய விடுதலைக்கும் அயராது உழைத்த அய்யா பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் மறைவு எம்மை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இந்தி - சமஸ்கிருதம் - ஆங்கில மொழிகளின் ஆதிக்கத்தில் இருந்து தமிழ் மொழியையும் தமிழ் மக்களையும் மீட்பதற்கும், 1965-இல் எழுச்சி கண்ட இந்தி எதிர்ப்பு போருக்கும் "தென்மொழி" ஊடாக அறை கூவல் விடுத்தார். செந்தமிழ் காக்க சிறை சென்ற செம்மல் அய்யா, பார்ப்பணியத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட, சாதிபேதமற்ற, சுரண்டலற்ற தமிழ்நாட்டின் விடுதலையை நேசித்தார். தனித்தமிழ், கலப்படமற்ற தூய தமிழ் மொழிக்காக போராடினார். தமிழ் மொழி வளர்ச்சிக்காக பல்வேறு ஆய்வுகளை செய்து தென்மொழி, தமிழ் சிட்டு, தமிழ் நிலம் மூலம் தமிழகம் எங்கும் பரப்பினார். மேடையிலே தமிழ் முழங்கும் 'தமிழினக் காவலர்கள்', 'தளபதிகள்', புத்தகப் புரட்சியாளர்களான 'தமிழறிஞர்கள்' மத்தியில் பெருஞ்சித்திரனார் தான் கொண்ட கொள்கையின் மேல் உறுதியோடு இருந்தார். பேச்சு அளவிலோ எழுத்திலோ அவர் நிறுத்திக் கொண்டது கிடையாது. போராட்டங்களிலும் முன்னின்று பல தடவை சிறை சென்றார். இந்தியாவின் மிக கொடிய சட்டங்கள் எல்லாம் அவர் மேல் கட்டவிழ்த்து விடப்பட்டது.

தமிழ் மொழி உணர்வாளன் என்ற அடிப்படையில் இருந்து மட்டுமல்லாமல் தமிழ் பேசும் மக்களின் பண்பாடு, சுய பொருளாதாரம், தனித்துவமான பாரம்பரிய பிரதேசம் என்பவற்றையும் உள்ளடக்கிய சுதந்திரமான தமிழகத்தை வென்றிடவே அய்யா விரும்பினார். இந்த அடிப்படையிலேயே தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தையும் ஆதரித்து அதற்காகவும் பல போராட்டங்களையும் தமிழகத்தில் நடத்தினார். 1980-களின் பின்பு இலங்கையில் தமிழ் மக்கள் மேல் சிறிலங்கா பேரினவாத அரசு நடத்திய இனப்படு கொலைகளை கண்டு அய்யா கண்ணீர் வடித்தார். இன ஒடுக்கு முறைகளைக் கண்டித்து பல போராட்டங்களை நடாத்தி, தமிழீழ மக்களுக்கு ஆதரவாக தமிழக மக்களின் ஆதரவைத் திரட்டினார். சிறீலங்கா இனவாத அரசினால் தேடப்பட்டு தலைமறைவாக தமிழ் நாட்டிற்கு தப்பி வந்த தமிழீழ விடுதலைப் போராட்ட இயக்கங்களின் தலைவர்களைப் பாதுகாத்து பல உதவிகளைச் செய்தார். தமிழீழ விடுதலைப் போராளிகள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து தமக்கள் சண்டையிட்டுக் கொண்டிருப்பது தமிழீழ விடுதலைக்குப் பாதகமானது என்பதை பெருஞ்சித்திரனார் அவர்கள் உணரத் தொடங்கினார். அதனால் 1983-இன் இறுதிப் பகுதியில் எல்லாத் தலைவர்களையும் அழைத்துப் பேச்சு வார்த்தை நடத்த தனது தலைமையிலேயே ஏற்பாடு செய்தார். ஆனால் நமது தலைவர்கள் யாரும் அவரின் முயற்சிக்கு ஆதரவாகச் செயற்படவில்லை. காரணம் இத் தலைவர்களிடையே அரசியல் ரீதியான கருத்து வேறுபாடுகளைத் விட தனிப்பட்ட முறையில் ஒருவர் மேல் இன்னொருவர் கொண்டிருந்த விரோதமும் காழ்ப்புணர்ச்சியும் இவர்களை ஒன்று சேரவிடவில்லை. இந்த முயற்சிகளின் தோல்வியால் பெருஞ்சித்திரனார் அவர்கள் பெரிதும் மனம் கலங்கினார். ஆனாலும் அய்யா அவர்கள் தமிழீழ போராட்டத்தின் மீதும் தமிழ் மக்களின் விடுதலையின் மீதும் கொண்டிருந்த நம்பிக்கையினால் தொடர்ந்தும் அயராது உழைத்தார். தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த எந்த அமைப்பாக இருந்தாலும் அதற்கு தன்னுடைய முழு ஆதரவை வழங்கி வந்தார். 1987-இல் இந்திய இராணுவம் தமிழீழத்தில் நடத்திய படுகொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் கண்டித்து தென்மொழியில் எழுதினார். பொதுக் கூட்டங்களிலும் போராட்டங்களிலும் கலந்து தமிழீழத்திற்கு ஆதரவாக குரல் கொடுத்தார். இதனால் இந்திய உளவு நிறுவனங்களால் தொல்லைகளுக்குள்ளானார். 1994-ல் "தமிழீழம் மலரும்" என போராட்டத்திற்கு ஆதரவாக எழுதினார் எனக் கூறி தமிழ்நாடு அரசு இந்தியாவின் மிகக் கொடிய பயங்கரவாத சட்டமான (TADA) தடாவில் கைது செய்து எந்த வழக்கு விசாரணையும் இன்றி ஓராண்டுகள் சிறையில் அடைத்தது. பல்வேறு தமிழர் அமைப்புகள் நடத்திய போராட்டங்களின் பின்பே விடுதலை செய்யப்பட்டார். எந்த ஆளும் அரசுடனோ தலைவர்களுடனோ அவர் சமரசம் செய்து தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் துரோகம் இழைத்தது இல்லை.

தமிழீழ போராட்டத்தின் எல்லா காலகட்டங்களிலும் அவரால் படைக்கப்பட்ட பல கட்டுரைகள், கவிதைகள், (வரலாற்று நிகழ்வுகள் அடங்கிய) எல்லாவற்றையும் தொகுத்து 1990-இல் "தமிழீழம்" என்னும் நூலை வெளியிட்டார். இது தமிழீழ மக்களுக்கு அவர் செய்த அளப்பெரிய கொடையாகும். தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் அவர் செய்து வேண்டியது இன்னும் பல உண்டு. அவர் இன்று நம்மிடையே இல்லை. இன்று மீண்டும் தமிழீழத்தில் மிக உக்கிரமான போர் நடைபெறுகின்றது. யுத்தத்தின் மோசமான நிலைமை தமிழகத்திலும் எதிரொலிக்கின்றது. 1983-க்குப் பின் மீண்டும் தமிழகத்தில் ஆதரவு அலை வீசுகிறது. பெருஞ்சித்திரனார் போன்றவர்களால் விதைக்கப்பட்ட விதைகள் மீண்டும் முளை விடுகின்றன. அவரது மரணத்தால் நொந்து போய் இருக்கும் அவர் தம் துணைவியார், பிள்ளைகள், உறவினர்க்கும், உலகத் தமிழின முன்னேற்றக் கழக சிந்தனையாளர்களுக்கும் தமிழீழ மக்களின் சார்பாக நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். அய்யாவின் பணிகளை அவர்கள் இடைவிடாது தொடர்வார்கள் என நம்புகிறோம்.

## தமிழீழ தமிழக மக்கள் நல்லுறவு மேலும் பலம் பெறட்டும்

"கொலை முயற்சி ஓர் உள்ளழிப்பு முயற்சியே ஆகும் என்பதைத் தெளிவாக உணர வேண்டும். புறப்பகையும் பொதுவான எதிரியும் வலிவாக வளர்ந்து இருக்கும் இக்கால கட்டத்தில், நம் ஈடிணையற்ற கொள்கைக்கென நம்முடன் துணையாக நின்று இயங்கும் ஒரு சிறு அணுவும் துணுக்கும் - துரும்பும் கூட நம்மால் அழிக்கப்பட்டு விடக் கூடாது. போராளிகளின் போர்த் தந்திர முறைகள், உத்திகள், படை வகுப்புக்கள் (வியூகங்கள்) போன்ற அணுகுமுறைகள் யாவையாயினும் அவை ஒருமுகமான உணர்வுடன் பகையின் மீதுதான் கொண்டு செலுத்தப்பட வேண்டுமே தவிர, நம் இனத்தின் பக்கம், இன்னும் சிறப்பாகச் சொன்னால் நம் முனைப்பின் பக்கம் அதாவது நம்மோடு தோளோடு தோளாக நின்று இயங்கும் நம்மவர் பக்கம் திரும்பவே கூடாது என்பதைத் தமிழீழத்திற்காக தங்கள் உயிர்களைத் தூசாக எண்ணிப் போராடும் போராளிகளுக்கு, குறிப்பாக தம்பி பிரபாகரனுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். நம் ஆற்றல் முழுவதும் எதிரியின் அடித்தளத்தையே தகர்க்கின்ற வகையில் செலவிடப்பட வேண்டுமே தவிர, நம்மை நோக்கிய தற்கொலை முயற்சிகளில் அது செலுத்தப்படக் கூடவே கூடாது".

*தமிழீழம் - பக்கம் 214*

www.tamilarangam.net



# சிறீலங்கா அரசின் தேசிய ஒடுக்கு முறை யுத்தமும் தமிழீழப் பெண்களின் போராட்டமும்

தமிழீழத்தில் இன ரீதியான அடக்குமுறை மட்டுமின்றி காலம் காலமாக பெண்கள் மீதான சமூக, பொருளாதார, பண்பாட்டு அடக்குமுறைகளும் பெண்களைத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அதிக அளவில் பங்கு கொள்ள வைத்தது. 1983-ம் ஆண்டுக்குப் பின்பு ஆயுதப் போராட்டம் ஆரம்பமான கால கட்டத்தில் எல்லா இயக்கங்களிலும் பெண்கள் தம்மை இணைத்துக் கொண்டு ஆயுதப் போராட்டத்திற்குத் தயாரானார்கள். அதுவரை காலமும் ஆதரவாளர்களாகவும் செய்தித் தொடர்பாளர்களாகவும் ஏனைய சிறு சிறு வேலைகளுடனும் பங்கு பற்றி வந்த பெண்கள் 1983-க்குப் பின் அரசியல் ரீதியாக தம்மை வளர்த்துக் கொண்டு இயக்கங்களின் அமைப்பாளர்களாகவும், இராணுவத்திலும் தம்மை இணைத்துக் கொண்டார்கள். நிலப்பிரபுத்துவத்தின் எச்ச சொச்ச வடிவங்களான சாதி, மதப், பண்பாட்டுக் கூறுகள் ஆழமாகப் புரையோடிப் போய் இருக்கும் தமிழீழ சமூகத்துள் பெண்கள் மேலான ஒடுக்குமுறையும் ஆழமாகவே காணப்படுகின்றது. 85% வீதமான பெண்களுக்கு கல்வி கிட்டிய போதும் நிலப்பிரப்புத்துவ பண்பாட்டு ரீதியான ஒடுக்குமுறை அவர்களை சமூக நோக்கு சமூகப் பிடிமானம் உடையவர்களாக வெளிக் கொணர விடவில்லை.

அரசியல், குடும்ப பொருளாதாரம், சமூக நடவடிக்கைகள், தொடர்புகள், ஒத்துழைப்புக்கள் எதிலும் தன்னை இணைத்துக் கொள்ளாது, குடும்ப அமைப்பினுள் ஆணாதிக்க சமூகத்தால் அடக்கப்பட்டு அடுப்பங்கரையே தஞ்சம் என வாழ்ந்து கொண்டிருந்த தமிழீழப் பெண்கள் மேல் இனவெறி அரசின் யுத்தம் மேலும் பல சுமைகளைத் திணித்தது. போராட்டம் ஆரம்பமான காலத்தில் இருந்தே குடும்பத்தை நிர்வகித்த ஆண்கள் இயக்கங்களில் சேர்தல், அல்லது இராணுவத்தால் கைது செய்யப்படுவது, கொலை செய்யப்படுவது, காணமல் போவது போன்ற காரணங்களால் பெண்கள் தாங்கள் சமூகத்தில் இருந்து அந்நியப்பட்டவர்களாக கருதி உளவியல் ரீதியாக பாதிப்படைந்துள்ளார்கள். காலப் போக்கில் நிரந்தர மனநோயாளிகள்ாக மாறி விட்ட பெண்கள் பலர் உண்டு. தாய்மார்களைப் பொறுத்தவரை கணவனை மட்டுமல்ல, வயதுக்கு வந்த ஆண், பெண் பிள்ளைகளைக் கூட இனவெறி யுத்தத்திற்கு பலி கொடுத்துள்ளார்கள். அடுத்து யுத்தத்தினால் ஆண்கள் அதிக எண்ணிக்கையில் கொல்லப்பட்டுள்ளதால் தமிழ் மக்களின் மொத்த சனத் தொகையில் பெண்களின் விகிதாச்சாரமே அதிக அளவில் உள்ளது. 1986-க்குப் பிற்பட்ட காலத்தில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விபரக் கணக்கின் படி ஆண்கள் 40%மாகவும் பெண்கள் 60% எனவும் காணப்பட்டது. இது எல்லாப் பெண்களும் திருமணம் செய்து கொள்ளும் வாய்ப்பையும், ஆண், பெண் சமநிலையையும் தடுத்து விட்டுள்ளது. ஏற்கனவே சீதனப் பிரச்சனைகளால் திருமணம் என்பது பெரும்பான்மையான மத்திய தர வர்க்கப் பெண்களுக்கு கனவாகவே இருந்து வருகின்றது. ஒன்று யுத்தத்தால் ஏற்பட்ட இந்த ஏற்றத்தாழ்வான விகிதாசாரமும் ஆணாதிக்க சிந்தனையும் ஆண்களை முன்பை விட அதி உயர்ந்த வணிகர்களாக மாற்றியுள்ளது. சீதனம் என்ற பெயரில் மிகப் பெரிய கொள்ளையே உலக அளவில் நடை பெறுகின்றது. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தந்தையோ, சகோதரனோ இருக்கும் குடும்பத்து பெண்கள் சிலருக்கு மட்டுமே அதிகளவான சீதனம் கொடுத்துத் திருமணம் செய்யும் வாய்ப்புள்ளது. மொத்த தமிழ் பெண்களில் சீதனப் பணத்தின் அளவையும் திருமண சந்தையையும் தீர்மானிப்பவர்களாக இருக்கும் இந்த 25% வீதத்திற்கும் குறைவான பெண்களால், ஆணாதிக சமூகத்தால் ஏனைய 75% வீதமான பெண்களுக்கு திருமணம் என்பது கேள்விக்குறியாக மட்டுமே உள்ளது. சமூக பொருளாதார ஒடுக்கு முறையும் தொடரும் இனவெறி யுத்தமும் பெண்களை நிரந்தரமற்ற, பாதுகாப்பற்ற மனோ நிலைக்கு தள்ளி விட்டுள்ளது. நிலப்பிரபுத்துவத்தின் ஒடுக்குமுறைப் பண்பாடும் முதலாளித்துவத்தின் சுரண்டல் பண்பாடும் யுத்தமும் ஒன்று சேர்ந்து தமிழீழப் பெண்கள் மத்தியில் மிக மோசமான சீரழிவுப் பழக்க வழக்கங்களையும் உருவாகியுள்ளது.

சிறீலங்கா சிங்கள - பௌத்த - பேரினவாத - பாசிச அரசுகளின் இன அழிப்பு யுத்தங்களும் கொடுமைகளும் பெண்களையே அதிக அளவில் பாதித்துள்ளது. உலகில் எங்கும் சாதி, மத, இன, வர்க்கப் போராட்டங்களின் போது இராணுவத்தினாலோ பொலீசினாலோ பாதிக்கப்படுவது முதலில் பெண்களாகவே இருக்கும். தமிழீழத்தைப் பொறுத்தவரை 1983-களுக்கு முன்பே தேடுதல் என்ற பெயரில் பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளும் கைதுகளும் ஆரம்பமானது. ஆண்களைத் தேடி வரும் இராணுவம் அவர்கள் இல்லாதபட்சத்தில் இளம் பெண்களை கைது செய்து, சித்திரவதை செய்து, கொலை செய்வதும் சாதாரண விடயமாகி விட்டிருந்தது. 1983-க்குப் பின்பு யுத்தம் ஆரம்பமான பின்பு எந்தக் கேள்விகளோ விசாரணையோ இன்றி இளம் பெண்கள், வயதான பெண்கள் என்று வேறுபாடின்றி கைது செய்யப்பட்டு கொடுமைப்படுத்தப்படுகின்றனர். இன்று வரையும் பல நூற்றுக் கணக்கான பெண்கள் சிறீலங்காவின் சிறைகளில் அடைத்து வைக்கப்

www.tamilarangam.net



பட்டுள்ளனர். தொடரும் இனவெறி யுத்தமும் யாழ் குடா நாட்டின் மீது சிறீலங்கா இராணுவம் நடத்திவரும் தொடர்ச்சியான தாக்குதலும் மொத்த மக்களையும் குடா நாட்டை விட்டு பல தூர மைல்களுக்கு அப்பால் ஓட வைத்துள்ளது. கர்ப்பிணியான பெண்கள் குழந்தைகளுடன் தாய்மார்கள், முதிய பெண்கள் என எல்லோரும் கால் நடையாகவே 4,5 நாட்கள் நடந்து வேறு பகுதிகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது. குடிப்பதற்கு நீரோ, உணவோ எதுவும் இன்றி குடா நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். பருவகால மழை வேறு தொடர்ச்சியாகக் கொட்டுவதால் குளிரில் நனைந்து பல குழந்தைகள் இறந்தும் விட்டன. பல வயது முதிர்ந்த பெண்கள், கர்ப்பிணிகள் ஏற்கனவே உள்ள பொருளாதார தடையால் ஊட்டச் சத்து இன்மையாலும், தற்போதைய நிலையில் தொடர்ச்சியான 3,4 நாட்களாக உணவு இன்மையாலும் மயக்கமடைந்து, இறந்தும் விட்டார்கள். நிவாரணம் இன்மையாலும், தொடர்ச்சியான மழையினாலும், சுகாதாரமின்மை மாதவிலக்கு பிரச்சனைகள், கர்ப்பம், பிரசவம், குழந்தைகள் இறப்பு, குடும்பத்தில் உள்ள ஏனையவர்களின் இறப்பு, உணவு இன்மை போன்ற பிரச்சனைகள், உடமைகள் எல்லாவற்றையும் இழந்து விட்டு வேறு இடங்களுக்கு குடிபெயர்வது போன்ற எல்லாப் பிரச்சனைகளையும் பெண்களே சுமக்க வேண்டியுள்ளது. இது தமிழ் பெண்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. நிரந்தமற்ற வாழ்நிலையும் நிர்ப்பந்தங்களும் பல பெண்களை குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு கொண்டு சென்றுள்ளது. மேலும் சிறீலங்கா சிங்கள பாசிச இனவெறி இராணுவமானது, பெண்கள் மனித மறு உற்பத்திக்கான பிரதான காரணி' என்பதால் தமிழ்ப் பெண்களை திட்டமிட்டு அழிப்பதன் மூலம் தமிழினத்தையே அழித்து விடலாம் என கங்கணம் கட்டிக் கொண்டு, பெண்களை தனிமைப்படுத்தி அழிப்பதில் முன் நிற்கின்றது. 2 மாதங்களுக்கு முன்பு நவாலியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் மேல் நடந்த விமானத் தாக்குதல் இதற்கு ஒரு உதாரணமாகும். இராணுவம் தாக்குதலுக்கு முன்பு பெண்களையும், சிறுவர்களையும், பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுங்கள் என அறிவித்தல் கொடுத்து விட்டு பின்பு அந்த பாதுகாப்பான பகுதியின் மேலேயே தாக்குதல் நடத்தியது. இதற்கு முன்பும் பல தடவைகள் இது நடந்துள்ளது. இதை விட மோசமாக 1984-இன் இறுதிப் பகுதிகளில் நச்சுவாயுக் குண்டுகளை வடக்கு கிழக்கின் மேல் வீசியும் தொற்று நோய்கிருமிகளை காற்றிலும் குடிநீரிலும் பரப்பியது சிறீலங்கா பாசிச இராணுவம். இதனால் கர்ப்பிணிப் பெண்கள் பாதிப்படைந்து அடுத்த சில ஆண்டுகளில் பிறந்த குழந்தைகள் பல ஊனமுற்றவர்களாகவும் மனநோயாளிகளாகவும் பிறந்துள்ளன. அதனுடைய வெளிப்பாடுகளை இன்றும் கூட ஆயிரக்கணக்கான பெண்கள் அனுபவித்து வருகின்றனர்.

இந்த நிலைமைகள் எல்லாம் பெண்களையும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் அதிக அளவில் பங்கு கொள்ள வைத்தது. 1983-க்குப் பின்பு தேசிய விடுதலைப் போராட்டம் கூர்மையடைந்த பின் இயக்கங்கள் எல்லாம் ''பெண்களுடைய விடுதலை தேசிய விடுதலையுடன் இணைந்தது'' என்ற பிரச்சாரத்தினூடாக மிக அதிக அளவில் பெண்களை தமது இயக்கங்களில் இணைத்துக் கொண்டனர். ஆனால் இந்த இயக்கங்கள் எதுவுமே பெண்கள் விடுதலை பற்றி எந்த விதமான முற்போக்கான கொள்கைகளையுமோ திட்டங்களையுமோ நடைமுறையில் கொண்டிருக்கவில்லை. இந்த இயக்கங்கள் தேசிய விடுதலைப் போராட்டம் பற்றியே தெளிவான பார்வையற்று இருக்கும் போது பெண் விடுதலை பற்றி இவர்கள் ஒன்றும் பெரிதாக கூறி விடப் போவதில்லை. ''சமூக, பொருளாதார, பண்பாட்டு ஒடுக்கு முறையில் இருந்தும், இன அடக்கு முறையில் இருந்தும் விடுதலை பெற்றிடுவோம்'' எனக் குடும்பங்களை விட்டு வெளியே வந்த தமிழீழப் பெண்கள், ஆணாதிக்க சிந்தனை கொண்ட இயக்கத் தலைமைகளாலும் தலைமைப் பொறுப்புக்களில் இருந்த அதிகார சிந்தனை கொண்ட சில பெண்களாலும் மிக மோசமாக ஒடுக்கப்பட்டனர். கொச்சைப்படுத்தப்பட்டனர். பெண்கள் பல இயக்கங்களில் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். சிலர் கொலையும் செய்யப்பட்டனர். ஆனால் இவையெல்லாம் மூடி மறைக்கப்பட்டது. 1987-இல் இந்திய அமைதிப்படை (IPKF) தமிழீழப் பகுதிகளில் ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்திய காலத்தில் தமிழ்ப் பெண்கள் அதிக அளவில் பாலியல் கொடுமைகளுக்கு பலாத்காரத்துக்கு உள்ளானார்கள். தமது குடும்பத்தவர் முன்னிலையிலேயே இந்திய அமைதிப் படையின் பாலியல் வெறிக்குப் பெண்கள் பலியானார்கள் படுகொலையும் செய்யப்பட்டார்கள். இந்தக் கட்டத்தில் கூட, பெண்களை அதிக அளவில் முன்னர் உள்வாங்கியிருந்த் சில இயக்கங்கள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காமல், இந்திய அமைதிப் படையின் நடவடிக்கைகளுக்கு துணை போயின. இதுவே தமிழீழப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட துரோக இயக்க தலைமைகளின் மிகப் பெரிய துரோகமாகும். தேசிய இன விடுதலைக்காக விடுதலைப் போராட்டத்தில் ஆர்வமுடன் தம்மை இணைத்துக் கொண்ட பெண்கள் இயக்கங்களின் குருட்டுத் தனமான நடவடிக்கைகளாலும் பல இயக்கங்கள் உதிர்ந்து சீரழிந்து போனதாலும் அவ் இயக்கங்களில் இருந்த பெண்கள் மீண்டும் தமது குடும்பங்களுடன் சேர்ந்து வாழவோ, சமூகத்தின் தவறான பார்வைகளுக்கு பதில் கூறவோ முடியாத நிலையில் பலர் இன்றும் கூட தமது குடும்பங்களுடன் சேர முடியாது அனாதரவான நிலையில் வேறு வேறு பகுதிகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இயக்கத் தலைமைகளிடையேயான குரோத மனப்பான்மை, காரணமாக மற்றைய இயக்கங்களில் இருந்த பெண்கள், போராட்டத்தை தொடர முடியாதுள்ளனர். விடுதலைப் புலிகள் தமது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயக்கத்தில் இணைத்துக் கொள்ளாததுடன் அவர்களாலேயே அழிக்கப்படுவதும் சிறைப் பிடிக்கப்படுவதும் இன்றும் நடைபெறுகின்றது. 1986-க்குப் பின்பு விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் எல்லாம் உதிர்ந்தும் உடைந்தும் போனதால் இந்த இயக்கங்களில் இருந்த பெண்களில் பெரும்பான்மையோர் கல்வியைத் தொடர முடியாமையாலும் வேலை வாய்ப்பு இன்றியும் சமூகத் தொடர்பற்ற உதிரிகளாக்கப்பட்டுள்ளனர். இவர்களின் இந்த நிலைமைகள் 'தன்னார்வக் குழுக்களுக்கு (தொண்டு நிறுவனங்கள்) சாதகமாக அமைந்துள்ளது. இழப்புக்களில் இருந்து நிவாரணம், புனர்வாழ்வு, சமூக சேவை, பெண் விடுதலை, சமாதானம் சனநாயகம் மனித உரிமைகள் என்ற பெயர்களில் இப்பெண்களில் கணிசமானோர் 'தன்னார்கவக் குழுக்களின் பின்னால் இழுத்துச் செல்லப்படுகின்றனர்.

தொடர்ச்சியான இனவெறி யுத்தம், இயக்கங்களின் அராஜக நடவடிக்கைகள், ஆணாதிக்க ஒடுக்கு முறைகள் பெண்கள் மீது இரட்டிப்புச் சுமையை ஏற்படுத்தியுள்ளது. ஆண்கள் யுத்தங்களில் இறந்து விடுவதால் பெண்களே முழுக் குடும்பத்திற்கான பொருளாதாரப் பிரச்சனைகளை ஏற்க வேண்டியுள்ளதும், யுத்தத்தின் கொடூரம் இனரீதியாக பெண்களையும் பாதிப்பதால் அவர்களும் போராட்டத்தில் தொடர்ந்தும் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. 1983-இல் போராட்டம் யுத்தம் என்ற கட்டத்தை அடைந்த போது எல்லா இயக்கங்ளும் பெண்களுக்கான இராணுவப் பிரிவை உருவாக்கின. இராணுவப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, ஒரு பகுதியினர் நிரந்தர இராணுவ படையாகவும், மறுபகுதியினர் மருத்துவம், செய்தித் தொடர்பு, கிராம நகர மக்கள் அமைப்பு வேலைகள் போன்றவற்றிற்கு அனுப்பப்பட்டனர். இராணுவத்திற்கான தொலைத் தொடர்பு வேலைகளையும் பெண்கள் செய்கின்றனர். EPRLF, PLOT போன்ற இயக்கங்களின் இராணுவத்தில் பெண்கள் அதிக அளவில் இருந்தனர். உதிர்ந்தனர். விடுதலைப் புலிகளின் பெண்கள் பிரிவு இராணுவத்தினரே ஆயுதப் போராட்டத்தில் முக்கிய பங்காற்றுகின்றனர். கடந்த 4 வருடங்களாக யாழ் குடா நாட்டின் மொத்த பொது நிர்வாகத்திலும் புலிப்பெண்கள் பங்கு வகித்து வருகின்றனர். பெண்களும் இணைந்த இராணுவ தாக்குதல் படைப் பிரிவை EPRLF இயக்கமே முதலில் கட்டியமைத்தது. இப்பிரிவு 1984-இன் இறுதியில் காரை நகர் கடற்படை முகாம் மீது ஒரு தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலில் 'சோபனா' என்ற பெண் போராளி வீரமரணம் அடைந்தார். 1987-க்குப் பின் இந்திய அமைதிப் படையை எதிர்த்து ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தத்தில் பெண்களின் பங்கு மிக அதிகமானது. இந்தக் கால கட்டத்தில் தான் விடுதலைப் புலிகள் பெண்கள் இராணுவப் படைப்பிரிவு மிக வேகமான வளர்ச்சியைக் கண்டது. அதற்கு முன்பு ''இயக்கத்தினுள் பெண்கள் சேர்க்கப்பட்டால் குழப்பம் ஏற்படும்'' என்ற கருத்தினால் பெண்களை இராணுவத்திலோ அல்லது வேறு முக்கிய பொறுப்புக்களிலோ சேர்த்துக் கொள்ளாத விடுதலைப் புலிகள் இயக்கம் 1987-க்குப் பின்பு பெண்களுக்கான ஒரு தனியான இராணுவ படையையும் சுதந்திரப் பறவைகளையும் உருவாக்கியது. இந்திய ஆக்கிரமிப்பு படையை யாழ் நகருக்குள் நுழைய விடாமல் தடுத்ததில், ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போரில் பெண்களின் பங்கும் மிக முக்கியமானது. யாழ் கோட்டைப் பகுதியிலும் வசாவிளான் பகுதியிலும் இந்திய இராணுவத்தின் இரண்டு பீரங்கிகளை பெண்கள் படைப் பிரிவு கைப்பற்றியது. மறுபுறம் தாய்மார்களால் அமைக்கப்பட்ட ''அன்னையர் முன்னணி'' என்ற அமைப்பு இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக வடக்கு கிழக்கு எங்கும் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்தது. உண்ணாவிரதம், ஊர்வலம், ஆர்ப்பாட்டம், என பல வழிகளிலும் போராடியது. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேற வேண்டும் எனக் கோரி 'அன்னையர் முன்னணி' நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்திலேயே மட்டக் களப்பை சேர்ந்த அன்னை பூபதி மரணமடைந்தார். விடுதலைப் புலிகளின் பெண்கள் இராணுவப் பிரிவுக்கு கடந்த 5 வருடங்களாக 'அகிலா' எனற பெண்ணே முக்கிய பொறுப்பாக இருந்து வழி நடத்தினார். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை யாழ் நகருக்குள் வர்விடாது தடுத்ததில் அவரின் பங்கு முக்கியமானது. தற்போது சிறிலங்கா இராணுவம் யாழ்நகரைப் பிடிப்பதற்காக நடத்தும் யுத்தத்தில் கடந்த மாதம் நீர்வேலிப் பகுதியில் நடந்த ஒரு தாக்குதலில் அவர் வீர மரணமடைந்து விட்டார். 1991-இல் 'ஆனையிறவு' இராணுவ முகாம் தாக்குதலின் போதும் அண்மையில் நடந்த 'வெலிஓயா' தாக்குதலிலும் புலிப்படைப் பெண்களே அதிக அளவில் பங்கு கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சோபனா, அன்னை பூபதி, அகிலா போன்ற முகம் தெரிந்த சிலரும் முகம் தெரியாத நூற்றுக் கணக்கான பெண் போராளிகளும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்றி உயிர் தியாகம் முதல் பல பங்களிப்புக்களைச் செய்துள்ளனர். ஆண்களுக்கு நிகராக தமிழீழப் பெண்களின் போராட்டத் தியாகங்களும், பங்கு பற்றல்களும் போராட்ட வளர்ச்சியில் முக்கியத்துவம் பெற்று விளங்கி வந்துள்ளது. இன்றும் புலிகள் இயக்கத்தில் உள்ள ஆயிரக்கணக்கான பெண் போராளிகள் அரசாங்க படைகளை எதிர்த்த யுத்தத்தில் போர் புரிகின்றார்கள். மற்றைய இயக்கங்களில் இருந்து வெளியேறிய பெண் போராளிகள், போராட்ட சூழலில் எழுச்சியடைந்த பல பெண்கள், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் கடந்த கால - சம காலப் பங்களிப்புக்கள், அவற்றின் அனுபவங்களையும் அதில் தமது வெற்றி - தோல்விகளை சுய ஆய்வுக்கு உட்படுத்தியும் வருகின்றார்கள். குட்டி முதலாளித்துவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிந்தனை கொண்ட போராளி இயக்கத் தலைமைகளாலும் ஆணாதிக்க சமூக அடிப்படையைக் கொண்ட அவர்களின் தேசிய விடுதலை, பெண் விடுதலை குறித்த கண்ணோட்டங்களும் நடைமுறைகளும் பெண்களிடம் ஏற்படுத்திய தாக்கங்களை மீளாய்வு செய்து புரிந்து கொள்ள வேண்டும். சமூக, பொருளாதார, அரசியல் அறிவை, நாட்டில் நடந்து கொண்டிருக்கும் போராட்டப் போக்குகளையும் சர்வதேச மாற்றங்களையும் கிரகித்துக் கொள்வதில் பெண்கள் பலவீனமானவர்களாகவே இருக்கின்றார்கள். அத்துடன் அத்தகைய அறிவை, புரிதலை ஆண்களின் சிந்தனையிலிருந்தே பெற வேண்டியுள்ளார்கள். இந்த பலவீனங்களை பெண்கள் தமது சொந்த அறிவைக் கொண்டு பலப்படுத்த வேண்டியிருக்கின்றது. தமிழீழ தேசிய விடுதலைப் போர்ராட்டத்திற்கும், பெண்களின் விடுதலைக்கும், தமிழ் மக்களின் சமூக மாற்றத்திற்கும் இடையேயான உறவை பெண்கள் தமது பார்வையில் புரிந்து கொள்ளவும் செயற்படவும் வேண்டியுள்ளது. பெண்கள் தமது விடுதலைக்கான தடைகளை உடைத்தெறியவும் தேசிய சுதந்திரப் போராட்டம் மேலும் முன்னேறிச் செல்லவும் அப்போது தான் வழி பிறக்கும். தமிழ் மக்களின் சமூக விடுதலையை நேசிப்போர், பெண்ணியச் சிந்தனையாளர்கள், பெண்கள் பத்திரிகைள், சிந்திக்கும் போராளிப் பெண்கள் எல்லோரும் இத்தகைய சிந்தனைகளை செயல்பாடுகளை பரந்துபட்ட தமிழீழப் பெண்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும்.

— கலாவதி

## THE LTTE POWER STRUCTURE

**Vellupillai Prabhakaran**

Chief Theoretician & Advisor
**Anton Balasingham**

### MILITARY

**Balraj**
Deputy Military Commander-Tamil Eelam

**Special Commanders**

Sea Tigers - **Soosai**
Ordance - **Shanker**
Women's Wing - **Jothi**
Intelligence/Immigration - **Kapil Amman**
Internal Intelligence - **Bosco**
Military Surveillance - **Gaddaff**
Air Intelligence - **Pottu Amman**
Antony Brigade - **Sornum**
Black Tigers - **Not Known**

**Regional Military Commanders in the rank of Special Commanders**

Batticola/Ampara - **Karuna**
Trincomalie - **Sudharan**
Jaffna - **Selvaraj**
Vavuniya - **Sooti**
Mannar - **Lakshmanan**
Kilnochchi - **Ellakayan**
Manaluru - **Robert**

### CIVIL ADMINISTRATION

**Baby Subramaniam**
Education & Tamil Language Affairs

International Secretariat
**Lawrence Thilakar**
(Based in Paris)

Ideological Affairs
**V. Balakumar**

Finance
**Tamizhenthi**

Economic Affairs
**Ravi**

Political Affairs
**Tamilchelvan**

Justice
**Pararasingham**

Police
**Natesan**

Cultural Affairs
**Puthuvai Ratnathurai**

Communications
**Castro**

Eastern Province
**Karikalan**

www.tamilarangam.net



# விடுதலைப்புலிகளின் தலைமைக்கு! பிரபாகரனுக்கு!

★ யுத்தத்தை நிறுத்த போராடும், திம்புக்கோரிக்கைகளை முன்னிறுத்தும் போராளி அமைப்புக்களை செயல்பட விடுங்கள்! ஆயுதம் தாங்கி போராடும் அடிப்படை உரிமையை அங்கீகரியுங்கள்!

★ வடக்கை விட்டு துரத்திய இஸ்லாமிய தமிழ் மக்களை மீண்டும் உடன் குடியமர்த்துங்கள்!

★ சிங்கள மக்களை, இஸ்லாமிய தமிழர்களை போராட்டத்தின் எதிரிகளாக்கும் இனவாத அரசின் தந்திரங்களுக்கு துணைபோகாதீர்கள்!

★ NLFT, தீப்பொறி, பேரவை, PLFT, பாசறை, அமைப்புக்கள் மீதான தடையை உடன் நீக்குங்கள்!

★ சிறை வைத்துள்ள தேசபக்த புரட்சிகர சனநாய சக்திகளை உடனே விடுதலை செய்யுங்கள்!

★ வெளிநாடுகளில் இயங்கும் தேசபக்த சனநாயக அமைப்புக்களை, பத்திரிகைகளை, நூலகங்களை கொளுத்தாதீர்கள்! அழிக்காதீர்கள்! தடை செய்யாதீர்கள்!

★ புலிப்போராளிகளே! தமிழீழ - தமிழக மக்களே! ஆதரவாளர்களே! புலிகளின் தலைமையை நிர்ப்பந்தியுங்கள்!



குழந்தைகள், பெண்கள், பெரியவர்கள் என எவ்வித பாராபட்சமும் இல்லாமல் இலங்கை அரசினால் கண்மூடித்தனமாக தமிழர்களை கொன்று குவிக்கும் செயலுக்கு தங்களது கண்டனத்தை தெரிவிக்கும் வகையில் மதுரையில் இலங்கை அகதிகள் வாயில் கறுப்பு துணியை கட்டிக் கொண்டு ஊர்வலமாக சென்றனர்.

www.tamilarangam.net



# 'திம்புக் கோரிக்கைகளை' உயர்த்திப் பிடிப்போம்!

இலங்கையில் நடத்து வரும் யுத்தத்தின் விளைவாக இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் தமிழீழத்திலும், சிறீலங்காவிலும் இடம் பெயர்ந்தும் அகதிகளாகவும் வாழ்கின்றனர். ஆயிரக்கணக்கான இஸ்லாமிய மக்களும் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். தமிழகத்திலும், அய்ரோப்பிய நாடுகளிலும் கனடாவிலும் புலம் பெயர்ந்தவர்கள் இலட்சக் கணக்கிலுள்ளனர். இன்று நடக்கும் யுத்தத்தில் வெளியேறும் அகதிகளையும் சேர்ந்து கிட்டத்தட்ட 10 இலட்சம் (தமிழீழத்தில் 30% மக்கள்) அகதிகளும், மற்றும் வடக்கு கிழக்கு மண்ணிலுள்ள தமிழ் மக்களின் கேள்வி? அச்சம்! நமது எதிர்காலம் என்ன? சமகாலத்தில் நமது வாழ்க்கைக்கு உலகில் எங்கும் உத்தரவாதம் இல்லையே! என்பதுதான் வாழ்க்கையை விரக்தியும் வெறுப்பும் தான் ஆட்டிப் படைக்கிறது. சிறீலங்கா அரசபடைகளின், அரசுடன் நிற்கும் 'காக்கை வன்னியர்'களாக மாறிவிட்ட போராளிக் குழுக்களின் எல்லை மீறிய தமிழின விரோத அராஜக நடவடிக்கைகள் மக்களால் சகித்து கொள்ள முடியவில்லை. அடுத்த பக்கம் புலித் தலைமையின் சர்வாதிகார போக்குகள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உணர்வு பூர்வாக முழுமையாக அய்க்கியப்படுவதை, ஆதரவு கொடுப்பதை தடுக்கின்றது. தமிழீழ மண்ணின் சுதந்திரத்தை காக்க, மக்களின் சமூக விடுதலையை வெல்ல நடத்தப்படும் தேசிய விடுதலைப் போராட்டம் அடுத்து எப்படி இருக்கும்? புலிகளின் தலைமை அடுத்து என்ன செய்வார்கள்? இது உயிரை கையில் பிடித்துள்ள தமிழீழ மக்களின், போராடும், போராளிகளின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. நம் போராட்டத்துக்கு ஆதரவும் அனுதாபமும் வழங்கி வரும் தமிழக, சர்வதேச மக்கள் ஆதங்கம், ஆவலுடன் விழித்து நிற்கிறார்கள்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் அடுத்த காலடி எப்படி இருக்கும்? இதை தீர்மானிக்கின்ற முக்கிய பொறுப்பு இன்று போராட்டத்தின் தீர்மானகர சக்தியாக விளங்கும் புலிகளின் தலைமையிடமும், போராட்டத்தை தொடர்ந்த புரட்சிகர வழியில் முன்னெடுத்து செல்லத் துடிக்கும் தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகளின் கைகளிலும் தங்கியுள்ளது. சந்திரிகா அரசு நடத்தும் இன ஒடுக்கு முறை யுத்தத்தை எவ்வாறு முகம் கொண்டு முறியடிப்பது என்ற 'கொரில்லா' இராணுவ போராட்ட வழிமுறையுடனும், முக்கியமாக அரசின் ''ஏமாற்று அரசியல் தீர்வு திட்டத்தை அம்பலப்படுத்தி மக்கள் போராட்டங்கள் மூலம் நமது அரசியல் தீர்வு திட்டத்தை போராட்டத்தின் முதுகெலும்பாக மாற்ற வேண்டும். இனப்பிரச்சனையின் அடிப்படையை இல்லாதொழிக்காத தமிழ் தேசிய இன மக்களின் இதுவரை கால போராட்டத்துக்கு மதிப்பளிக்காத 'அரசின் அரசியல் தீர்வு திட்டம்' போராட்டத்தின் வளர்ச்சியை திசை திருப்பும் மோசடித் திட்டம், வல்லரசுகளின் உள்நாட்டு இனவாத, மதவாத, ஆளும் வர்க்கங்களின் சுரண்டலுக்கும் ஒடுக்கு முறைக்கும் அரசு கட்டமைப்புக்கும் நேரடியாக - வேகமாக சேவை செய்யக் கூடிய நாடு தழுவிய அதிகார பரவலாக்க எலும்புத் துண்டு திட்டம். இதற்கு பதிலாக தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும், அன்னிய தலையீடுகளை கட்டுப்படுத்தும், அதிகாரம் நிறைந்த அரசியல் தீர்வு திட்டத்தை ''திம்புக் கோரிக்கைகளை'' வெளிப்படையாக தமிழீழ பரந்துபட்ட மக்கள் மத்தியில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நமது அரசியல் தீர்வு திட்டம் கோரிக்கைகளின் கீழ் தமிழ் மக்கள் அணி திரட்டப்பட வேண்டும். யுத்தம் நடக்கின்ற பகுதிகள் தவிர வடக்கிலும், கிழக்கிலும், சிறீலங்காவிலும் தமிழீழ அகதிகள் வாழும் உலகின் ஒவ்வோர் நாடுகளிலும் இவற்றை செய்ய வேண்டும். இதன் மூலம் தமிழீழ மக்கள் தமது எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்பதை புரிந்து கொண்டு உணர்வு பூர்வமாக தமது அரசியல் கோரிக்கைகளுடன் போராட்டத்தில் அய்க்கியப்படுவார்கள். ஆதரவு தெரிவிப்பார். தமிழீழ மக்கள் தமது அரசியல் தீர்வு திட்டத்தை நிறைவேற்ற கோரி மக்கள் திரள் போராட்டங்களை அரசுக்கு எதிராக நடத்துவார்கள். தாங்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளின் மக்களும், அந்நாட்டு அரசுகளும் தமது அரசியல தீர்வு திட்டத்தை சந்திரிகா அரசு ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்குமாறு வெளிப்படையாக மக்கள் போராட்டங்கள் மூலம் நேரடியாக கோரச் செய்ய முடியும். சிறீலங்கா அரசு யுத்தத்தை நிறுத்த நிர்ப்பந்திக்க கோர வேண்டும்.

ஆனால் நமது கடந்த கால போராட்டங்கள் வேறாக உள்ளது. ''சிறீலங்கா அரசு அரசியல் தீர்வு திட்டத்தை முன் வைக்க வேண்டும்.'' ''நாங்கள் பேச தயார் சமாதான கதவுகள் திறந்திருக்கின்றன'' என்ற வார்த்தை ஜால பேச்சுக்கள் பேசியளவுக்கு புலிகள் உட்பட எல்லா போராட்ட தலைமைகளும் பேச்சு வார்த்தைக்கான ஒரு அரசியல் தீர்வுத் திட்டத்தை வெளிப்படையாக மக்கள் முன் வைத்து பிரச்சாரப்படுத்தி மக்கள் போராட்டங்களை நடத்தி அத்திட்டத்தை அரசு அங்கீகரிக்க வேண்டும், போராளி இயக்கங்களுடன் அரசு பேச வேண்டும் என்ற முறையில் மக்கள் போராட்டங்களை உந்தி தள்ளிப் போராடுவதில் அக்கறை காட்டியதில்லை. பரந்து பட்ட

www.tamilarangam.net



மக்கிளின் அரசியல் உணர்வில், போராட்டங்களில் இவர்களுக்கு நம்பிக்கை இல்லை. ஆயுதம் தரிக்க தயாரன இளைஞர்கள், யுவதிகள் நவீன ஆயுதங்கள் மட்டும் எல்லாவற்றையும் சாதித்து விட முடியும் என நம்புகின்றனர். தலைமையிலுள்ள ஒரு சிலருக்கு அரசியல் அறிவும், சில அரசியல் ஆலோசகர்கள் மட்டும் போராட்டத்துக்கு போதும் என்கிறார்கள். ''தங்கள் தங்கள் இயக்கங்களை அங்கீகரிக்க வேண்டும் 'சுயநிர்ணய உரிமை வேண்டும். தமிழீழம் வேண்டும்'' என்ற கோரிக்கைகள். அதன் உள்ளடக்க புரிதலை விட்டு விட்டு கோஷங்களுடன் மட்டப்படுத்தப்பட்டுள்ளது. அல்லது மேம்போக்காக ''அரசு தீர்வை முன் வைத்தால் நாங்கள் பரிசிலிக்க தயார்'' என்பார்கள். 'சூரிய ஒளி' இராணுவ நடவடிக்கை தொடங்க முன் நடத்த பத்திரிகைப் பேட்டியில் பேபி சுப்பிரமணியம், பாலசிங்கம் அளித்த பதில்களை பாருங்கள். பேச்சு வார்த்தை மூலம் தீர்வு ஏற்பட வாய்ப்புள்ளதா? பதில். ''இந்த கேள்வியை இலங்கை அரசிடம் நீங்கள் கேட்க வேண்டும். அரசு யுத்தத்தை நிறுத்தி வடக்கிலும் கிழக்கிலும் சுமூக நிலைமையை ஏற்படுத்துமானால் நாங்கள் சமாதானத்துக்கு தயார்'' சரி. அரசு யுத்தத்தை நிறுத்தினால் சுமூக நிலைமையை ஏற்படுத்தினால் என்ன விதமான சுமூக நிலைமை?, சமாதானத்துக்குத் தயார். எதனடிப்படையில் சமாதானம்? இது புலிகளின் தலைமைக்கு மட்டுமே தெரிய வேண்டியது. உள்நாட்டு உலக நாட்டு மக்களுக்கு தெரிய வேண்டாமா?

இதுவரை இன ஒடுக்கு முறை யுத்தத்தை தலைமையேற்று வந்த U.N.P. அரசு ஒரு அரசியல் தீர்வு திட்டத்தை முன் வைக்காது. கொடூரமான இராணுவ தீர்வு திட்டத்துக்கு முன்னுரிமை கொடுத்தது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் கூட இரண்டு அரசுகளுக்கு இடையில் ஏற்பட்டது. சிறிலங்கா அரசுக்கும் - போராளி இயக்கங்களுக்கும் இடையில் ஏற்படவில்லை. 1987- ஒப்பந்தத்தின் தீர்வு திட்டத்துக்கும் அதை நிராகரித்து போரிட்ட புலிகளும் மற்றும் புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகளும் முன் வைத்த அரசியல் தீர்வு திட்டத்துக்கும் அடிப்டையில் என்ன வேறுபாடு? இதை எந்த அளவுக்கு மக்கள் முன் வைத்தோம். பரந்து பட்ட தமிழீழ மக்கள் எந்த அளவுக்கு புரிந்து கொண்டு போராடினார். நிராகரித்தார்கள். புலிகள் ஒரு தீர்மானகரமான கரந்தடிப்படையினர். புலிகள் தலைமை எதற்காக? நிராகரித்தாலும் - ஏற்றாலும், போராடினாலும் சமரசம் அடைந்தாலும் அவை தமிழீழ போராட்டத்தின் எல்லாக் கால கட்டங்களிலும் எதிர்கால வரலாறு பூராவும் தமிழீழ மக்களின் நிராகரிப்பாகவும், ஏற்பதாகவும் இருந்து விட மாட்டாது. கடந்த கால தவறுகளை - பலவீனங்களை களைந்து முன்னேற வேண்டியுள்ளது.

U.N.P. யைப் போல் அன்றி, சந்திரிகா அரசு ஓர் அரசியல் தீர்வு திட்டத்தை முன் வைத்துள்ளனர். அதை காட்டியபடியும், புலிகளின் யுத்த நிறுத்த மீறலை காட்டியும் புலிகளுக்கு இராணுவ தீர்வு, மக்களுக்கு சமாதான தீர்வு என கோர வெறியுடன் தமிழ் இன ஒழிப்பு யுத்தத்தை நடத்துகிறது. PLOT, EPRLF, TELO, TULF, EPDP, CTC., போன்ற தமிழீழ துரோக தலைமைகளும், நடுநிலை பேர்வழிகள் 'சாமதானம்' ஆம் சனநாயகம் பேசும் வேடதாரிகள். அத்தீர்வு திட்டத்தை தூக்கி பிடிக்கிறார்கள். இலங்கை வரலாற்றில் சந்திரிகாவின் திட்டம் தமிழர்களுக்கு விமோசன திட்டம் என்கின்றனர், இந்த விபீஷணர்கள் கூட்டம். திட்டம் அடிப்படையில் சரியானது. சிலமாற்றம், சீர்திருத்தம் கோருவதுடன் நடைமுறைப்படுத்தும் சிக்கல்களைத் தான் முன் வைக்கிறார்கள். கொள்கையளவில் அத்திட்டத்தை ஏற்று விட்டார்களாம். இந்த தலைமைகளே முன்னாளில் முன் வைக்க போராடிய கொள்கைகள் கோரிக்கைள், ''திம்புக் கோரிக்கை திட்டம்'' உட்பட அனைத்தையும் கைவிட்டு விட்டு இவர்களை நம்பிய போராளிகளுக்கு, தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்து நிற்கின்றனர். அரசியல் பிழைப்புக்கும் பதவி அதிகார ஆசையிலும் சந்திரிகா அரசை - அரசின் தீர்வு திட்டத்தை ஆதரிக்கின்றனர். தமிழ் மக்களை ஏற்க வைக்க தவியாய் தவிக்கிறது இந்த எட்டப்பர் கூட்டம்.

புலிகள் அரசு படைகளை எதிர்த்து போரிடுகின்றனர். வெற்றிகளும் தோல்விகளும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தின் கட்டுப்பாட்டை புலிகள் இழந்து கொண்டிருக்கிறார்கள். புலித் தலைமை பின் வாங்கியிருக்கிறது. யாழ்ப்பான இழப்பு புலிகளை இராணுவ ரீதியில் - அரசியல் ரீதியில் பெரியளவில் பலவீனப்படுத்தியுள்ளது. அரசு யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேச முன் வந்தால் புலிகளும் பேசுவார்கள் என்பது தெளிவு. பேச்சு வார்த்தையில் சந்திரிகாவின் அரசியல் தீர்வு திட்டத்தை புலிகளின் தலைமை எப்படி எதிர் கொள்வார்கள்?

- ★ சந்திரிகாவின் இன்றுள்ள திட்டத்தை அப்படியே ஏற்று மற்ற தமிழ தலைமைகள் போல துரோகமிழைக்க மாட்டார்கள்.
- ★ திட்டதின் படி அரசு அதிகார கட்டமைப்பு கொள்கையில் சில மாற்றங்கள், புலிகளுக்கு முன்னுரிமை, அங்கீகரிப்பு கொடுப்பதில் மட்டும் அரசு மாற்றம் செய்தால் புலித்தலைமை என்ன செய்யும்? புலிப் பேராளிகளின் உட்பட எல்லோர்க்கும் கேள்விக்குறி தான்?
- ★ அரசின் திட்டத்தை புலி ஒப்புக் கொள்ளவில்லை என்றால் புலியின் அரசியல் தீர்வு திட்டம் என்ன?

www.tamilarangam.net



மிக அன்மிய பாலசிங்கத்தின் கூற்றுபபடி '' கூட்டாச்சியில் தமிழ் மக்களுக்கு சுயாட்சி'' இதற்கும் புலிகள் தாகம் தமிழீழ தாகம் இலட்சியத்துக்கும், புலிகள் கூட 85-இல் முன் வைத்த திம்பு கோரிக்கைகளுக்கும் என்ன சம்பந்தம், 'திம்புக் கோரிக்கைகள்' 4-இல் எதை இந்த ''கூட்டாச்சிக்குள் சுயாட்சி தீர்க்கின்றது? எப்படி தீர்க்கின்றது? உண்மையில் புலிகளும் தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வை கொடுக்க கூடிய அரசியல் தீர்வு திட்டத்தில் தடம் புரண்டு கொண்டிருப்பதையே காண முடிகிறது.

இராணுவ முறையில் சுதந்திரத்தை வெல்ல முடியும் என கருதுகிறீர்களா? பாலசிங்கத்தின் பதில் ''சுதந்திரம் என்பது தவறான வார்த்தை, எங்கள் அரசியல் இலக்கை நாங்கள் தீர்மானிக்க உரிமையுண்டு 'சுயநிர்ணய உரிமை' என்பதன் பொருள் அதுதான்'' புலிகள் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை எப்படி உள்வாங்கி விளக்கம் கொடுப்பார்கள் என்பது ஒரு புறம் இருக்கட்டும்? தமிழீழ தேசிய சுதந்திரம் - 'தமிழீழ தாகம்' - 'சோசலிச தமிழீழம்' என்ற புலிகளின் இலட்சிய கொள்கை அறிவிப்புக்கும் பால சிங்கத்தின் சுதந்திரம் என்பது தவறான வார்த்தை என்பதற்கும் மொழியியல் ரீதியான முரண்பாடா? இல்லை புலிகளின் இலட்சிய கொள்கைக்கு பின்னாலுள்ள உண்மையான சமூக பொருளாதார அரசியல் இலக்கிலேயே முரண்பாடா? தமிழீழ மண்ணின் தேசிய சுதந்திரம், மக்களின் சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டுச் சுதந்திரம் பற்றிய தமிழீழ மக்களின் இலட்சிய கனவுகள் வெறும் கனவுகள் மட்டுமே! புலிப்போராளிகள் உட்பட எல்லாப் போராளிகளின் தியகாங்கள் வீர மரணங்கள் வெறும் கல்லறைகளில் பார்வைக்கு வைக்கப்பட மட்டுமே! தமிழீழ மண்ணுக்குப் சுதந்திரம் மக்களின் சமூக பொருளாதார அரசியல் வாழ்வுக்கு சுதந்திரம் இந்த சுதந்திரம் தவறான வார்த்தை. தமிழ் மண்ணை மக்களை சுரண்டி அடக்கி ஒடுக்கி தமிழ் ஆளும் வர்க்கங்களுக்கு, சிங்கள ஆளும் வர்க்கமும், பன்னாட்டு கொம்பனிகளும் வல்லரசுகளும் தடையாக போட்டியாக இருந்த தால், தேசத்தின் முழு தமிழ் மக்களையும் அணி திரட்ட மண்ணுக்கும் மக்களுக்கும் சுதந்திரம் வேண்டும் என்றார்கள். அரசும், வல்லரசுகளும் ''தமிழ் ஆளும் வர்க்கத்தை'' தங்களுடன் சேர்த்து தமிழ் மண்ணை அடிமைப்படுத்தவும் தமிழ் மக்களைச் சுரண்டிக் கொழுக்கவும், ஒடுக்கவும் கீழே இறங்கி வரத் தயாராக இருப்பதால் தேசத்தின் மக்களின் சுதந்திரம் என்ற வார்த்தை தவறாகி விட்டது. தேவையற்றதாக, பொருளற்றதாக மாறி விட்டது. ''எங்கள் அரசியல் இலக்குகளை தீர்மானிக்க எங்களுக்கு உரிமையுண்டு என்பது தமிழ் ஆளும் வர்க்க நலன்களை மட்டுமே அர்த்தப்படுத்துகிறது.

இந்தியாவில் கூர்க்கா தேசிய இன மக்களின் போராட்டத்துக்கு தலைமை தாங்கிய ''லால்டெங்கா'' கூர்க்காலந்து தனிநாட்டுக் கோரிக்கைக்காக போராடியவர். ரபின் இந்தியரசின் கூர்கா தேசிய கவுன்சில் (அதிகார பரவல்) சமரச திட்டத்துக்காக தனி நாட்டு கோரிக்கையை கைவிடும் காலத்திலும் கைவிட்டு துரோகம் புரிந்த பின்னும் சொன்னார். ''நாங்கள் உண்மையாக தனி நாட்டு கோரிக்கைக்காக போராடவில்லை. அது சாத்தியமும் இல்லை. எங்களுக்கு வேண்டியதும் இல்லை. ஆனால் எங்களுக்கு வேண்டிய அதிகாரத்தை பெற இந்தியரசை பயமுறுத்த, மக்களை எங்கள் பின்னே அணி திரட்ட 'தனிநாட்டு கோரிக்கை'' தேவைப்பட்டது' தமிழீழ துரோக தலைமைகள் அப்பட்டமாக சொல்லா விட்டாலும் ''லால்டெங்காவின்'' கூற்றுக்கள் அப்படியே எமது போராட்டத்திலும் பிரதிபலிக்கின்றது.

சந்திரிகா அரசுடன் புலிகள் ஆரம்பத்தில் ஆறுமாதம் நடத்திய பேச்சுக்களில் அரசியல் தீர்வுக்கான யோசனைகளை முன் வைக்க தவறியதும் பொருளாதார தடை நீக்கம் மற்றும் இயக்க நலன் சார்ந்த சில இராணுவ கோரிக்கைகளை முன் வைத்து பேசினர். அரசின் சூழ்ச்சியை, நடவடிக்கைகளைத் தாங்க முடியாமல் யுத்த நிறுத்தத்தை முறித்த போது தமிழீழ மக்கள் சர்வதேச மக்கள் மத்தியில் புலிகளின் போக்கு குறித்து கேள்வியும் கண்டனமும் எழுந்தது. சிறீலங்கா அரசும், வல்லரசுகளும் தகவல் தொடர்பு சாதனங்களும் பத்திரிகைகளும் இந்திய அரசும் புலிகளையும் தமிழீழ தேசபக்தி புரட்சிகர சக்திகளையும் ''யுத்த வெறியர்களாக'' பிரச்சாரப்படுத்தியது. ஓரளவுக்கு எதிரிகள் இலாபம் சம்பாதித்தனர். சந்திரிகா அரசு ''சார்க்கிலும்'' அணிசேரா இயக்கத்திலும், பொது நல வாயு நாடுகள் கூட்டத்திலும், அய்க்கிய நாடுகள் சபையிலும் தனது பிரச்சாரத்துக்கு ஆதரவு தேடிக் கொண்டார். ஆனாலும் சிறீலங்கா அரசின் தற்போதைய மூன்று கடும் இராணுவ நடவடிக்கைள் தமிழ் மக்களுக்கு பேரிழப்பை ஏற்படுத்தியுள்ளதால் தமிழ் மக்களின் மேலும் அவர்களுக்காக போராடுபவர்கள் மீதும் மீண்டும் ஆதரவும் அனுதாபமும் சர்வதேசளவில் கருக் கொண்டுள்ளது.

அரசு யுத்தத்தை நிறுத்தி புலிகளுடன் பேச முன் வந்தால் புலிகள் தமிழீழ மக்களின் சார்பாக பேச்சு வார்த்தையில் முன் வைக்கும் அரசியல் தீர்வு திட்டம் என்னவாக இருக்க வேண்டும்? 'திம்புக் கோரிக்கை தீர்வு திட்டமாக இருக்க வேண்டும் என தமிழீழ மக்களின் போராட்டத்தில் அக்கறையுள்ள அனைவரும் எதிர் பார்க்கின்றனர்.

www.tamilarangam.net



தமிழீழ மக்கள் மத்தியிலும், உலக மக்கள் மத்தியிலும், உண்மையான புரட்சிகர சனநாயக சக்திகளும், சமாதான மனித உரிமை இயக்கங்கள் அங்கீகரித்த பிரபல்யமான ''திம்புக் கோரிக்கைகளை'' இந்தியரசின் நடுவத்துடன் 1985 பூட்டான் தலைநகரில் சிறிலங்கா அரசுக்கும் - தமிழ் தலைமைகளுக்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தையில் போராளி இயக்கங்களால் கூட்டாக தமிழீழ மக்களின் சார்பாக முன் வைக்கப்பட்ட அரசியல் தீர்வு கோரிக்கையாகும். போராளிகள் இக்கோரிக்கையில் உறுதியாக நின்றாதல் J.R. அரசு பேச்சை குழப்பியது. இந்தியரசு, பாலசிங்கம், சந்திரகாசன் சத்தியேந்திரா போன்றவர்களை நாடு கடத்தியது. போராளி தலைவர்களை வீட்டுக் காவலில் வைத்தது. தமிழீழ தமிழக உலக மக்களின் எதிர்ப்புக்கு அடி பணிந்து இந்தியரசு கூட பின் வாங்கியது. சிறிலங்கா அரசு உலகளவில் அம்பலப்பட்டது.

1985-க்குப் பின் சிறிலங்கா அரசை, இந்திய ஆக்கிரமிப்பு படையை எதிர்த்து புலிப் போராளிகளும், தமிழீழ மக்களும் செய்த வீரம் செறிந்த போராட்டங்கள் எவ்வளவு மகத்தானது. அப்படி இருக்கையில் புலிகளின் தலைமை ஏன் அரசுடனான பேச்சுவார்த்தைக்கு ''திம்புக் கோரிக்கையை'' அரசியல் தீர்வு திட்டமாக முன்னிறுத்த பின்னிற்கின்றது? தமிழீழ போராட்ட வரலாற்றில் புலிகளின் வளர்ச்சியென்பது, போராட்ட வளர்ச்சியென்பது 85-ல் முன் வைத்த அரசியல தீர்வு கோரிக்கைகளை கூட கைவிட்டு கீழ் இறங்குவதுதானா? போராளிகள் மக்களது தியாகங்கள், இழப்புக்கள், துன்பங்கள் அந்தளவுக்கு மலினப்படுத்தக் கூடியதா? ''இல்லை இல்லவே இல்லை'' என்பதில் புலிப் போராளிகளும் தலைமையும் உறுதியாக இருந்தால் சந்திரிகா அரசுடனானா பேச்சுவார்த்தைக்கு தமிழீழ மக்களின் அரசியல் தீர்வு திட்டமாக 'திம்புக் கோரிக்கைகளை' வெளிப்படையாக புலித்தலைமை அறிவிக்க வேண்டும். தமிழீழ, உலக மக்கள் மத்தியி இவ் அரசியல் தீர்வுக்கு ஆதரவான மக்கள் போராட்டங்களை நடத்த வேண்டும். ஊக்குவிக்க வேண்டும். சந்திரிகா அரசு இத்திட்டத்தை அங்கீகரிக்க உலக நாடுகள் நிர்ப்பந்தம் கொடுக்க கோர வேண்டும்.

அப்போது, அப்படிச் செய்யும் போது மட்டும் தான் சந்திரிகாவின் மோசடிச் சமாதான அரசியல் தீர்வு திட்டத்தை அம்பலப்படுத்த முடியும்? அந்த துரோக திட்டத்தை, தமிழ் துரோக தலைமைகளை தமிழீழ மக்கள் நிராகரிப்பார்கள். தமிழீழ மக்களின் தேசிய இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வை கொடுக்கும். அரசியல் தீர்வு திட்டத்தை சிறிலங்கா அரசு நிராகரிக்கும் போது (J.R. அரசை விட சமாதான நாட்டம் கொண்ட சந்திரிகா அரசு கூட இதை நிராகரித்தால்) உலக மக்களின் நிர்பந்தத்தை அங்கீகரிக்க மறுத்தால் தமிழக - உலக மக்கள் தமது அரசியல் தீர்வு திட்டத்தையும் தமிழீழ மக்களையும் போராளிகளையும் ஆதரிப்பார்கள். சந்திரிகா அரசு சர்வ தேச அளவில் அன்னியப் படுத்தப்படும்.

சந்திரிகா தலைமையிலான அரசை, அரசுப்படைகளை எதிர்த்து தமிழீழ மக்கள் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தை நடத்தலாம். உணர்வு பூர்வமாக தமிழீழ மக்கள் போராட்டத்தில் பங்கு கொள்வர். தமிழக உலக மக்கள் தொடர்ந்தும் நமது போராட்டங்களை ஆதரிப்பார்கள். தமிழீழ, தேசபக்த, புரட்சிகர, சனநாய சக்திகளின் இன்றைய உடனடிப்பிரதான கடமை இதுவாக இருக்கிறது. புலிகளின் தலைமையும் இதைச் செய்ய முன் வருவார்கள். முன் வர வேண்டும் என விரும்புகிறோம்.

சந்திரிகா அரசின் ஆளும் வர்க்கங்களின், இந்தியரசின், வல்லரசுகளின் நோக்கம் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை திட்டமிட்ட முறையில் போராளித் தலைமைகளை துரோகத் தனமான அரசியல் தீர்வு திட்டத்துக்குள் அமுக்கி போராட்டத்தை காட்டிக் கொடுத்து, தேக்கமடையச் செய்ய வேண்டும். அதை மீறி நிற்கும் போராளி இயக்கங்கள் மேல் இன ஒடுக்கு முறை யுத்தத்தை கூர்மைப்படுத்தி போராளி தலைமைகளின் பலவீனங்களை மேலும் பலப்படுத்த உதவி செய்து சொந்த நாட்டு மக்களிடம் இருந்து வெறுப்பையும் விரக்தியையும் மேலும் ஏற்படுத்தி போராளி தலைமைகளை அன்னியப்படுத்தி மீண்டும் அதே துரோகத் தனமான அரசியல் தீர்வு திட்டத்துள் மூழ்கடிப்பதாகும். இதை எவ்வாறு தமிழீழ போராளி இயக்க தலைமைகள் உடைக்கப் போகிறார்கள்? அல்லது மூழ்கப் போகிறார்களா?

யாழ் நகரை கைப்பற்றும் இராணுவ நடவடிக்கை - யுத்தத்தை அரசு முடித்துக் கொண்டதும், சந்திரிகா அரசு தனது அரசியல் தீர்வு திட்டத்தை பலத்த சத்தத்துடன் பிரச்சார யுத்தமாக மாற்றுவார். இதை ஏற்றுள்ள தமிழ் துரோக தலைமைகளும் தமிழீழ மக்கள் காது செவிடாகும்படி சங்கை ஊதுவார்கள். யுத்தத்தால் துவண்டு போயுள்ள மக்கள், அகதிகள் எப்படியாவது அமைதி வரட்டும் என ஏறங்குவார்கள்.

புலிகள் தமது இழப்புக்களை நிவர்த்திக்கவும், தோல்விகளை சரிப்படுத்தவும் கடுமையாக கஷ்டப்பட வேண்டியிருக்கும். அதே வேளை அரசு படைகளுக்கு எதிராக தாக்குதல் நடவடிக்கைகளை தொடரலாம். போராட்டத்தில் தொடர்ந்து நிலைத்து நிற்க விரும்பினால் தலைமை தனது அரசியல் - இராணுவ

www.tamilarangam.net



வழி அடிப்டைத் தவறுகளை ஓரளவு மாற்றிக் கொள்ளவும் அல்லது சில யுக்திகளை மட்டும் மாற்றவும் முயல்வார்கள். தமிழீழ தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகளின் கோரிக்கை, புலித்தலைமையே! சிறீலங்கா அரசை எதிர்த்து போராட முனையும், பேச்ச வார்த்தைக்கு திம்பு கோரிக்கையை வலியுறுத்தும் மற்றய அமைப்புக்கள், இயக்கங்களை போராட அங்கீகரியுங்கள். அவற்றின் மீதான தடையை நீக்குங்கள். அவ் அமைப்பு போராளிகளை முன்னணித் தலைவர்களை விடுதலை செய்யுங்கள். அரசை எதிர்த்து பிரச்சாரம் மட்டுமல்ல. ஆயுதம் ஏந்தி போராட அவர்களுக்குள்ள உரிமையை அங்கீகரித்து நடைமுறையில் அமுல் படுத்த வேண்டும். புலிகளால் விரட்டப்பட்ட இஸ்லாமிய அகதி மக்கள் தமது சொந்த இடங்களில் மீண்டும் குடியேற முழுமையாக புலிகள் உதவ வேண்டும்.

திம்புக் கோரிக்கைகள்

1. இலங்கைத் தமிழர்களை ஒரு தேசிய இனம் என அங்கீகரித்தல்.
2. இலங்கையில் தமிழருக்கு இன்னதெனக் கூறக் கூடிய தாயகம் உண்டு என்பதை அங்கீகரித்தல்.
3. தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.
4. இலங்கையைத் தம் நாடாக கொண்ட எல்லா தமிழர்களது பிரஜாவுரிமையையும் அடிப்படை உரிமைகளையும் அங்கீகரித்தல்.

இன்றைய நெருக்கடியான கால கட்டத்தில் இதைச் செய்ய புலிகளின் கீழ்மணிப் போராளிகளும், புலிகளின் கட்டுப்பாட்டு பகுதி மக்களும், புலிகளின் உள்நாட்டு, உலக நாட்டு ஆதரவாளர்களும், புலித் தலைமையை நிர்ப்பந்திக்க வேண்டும். இவற்றை புலித்தலைமை செய்வதற்கு பதிலாக அரசுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகளில் அரசின் அரசியல் தீர்வு திட்டத்தை கூட்டிக் குறைப்பதிலும், சந்திரிகா தீர்வு திட்டத்தில் வீழ்ந்தாலும் கூட்டாச்சி சுயாட்சி, அதிகாரத்தில் அமர்ந்தாலும் கூட்டாட்சி சுயாட்சி பற்றிய பேச்சு வார்த்தையில் ஈடுபட்டு திம்பு கோரிக்கைளை நிராகரித்ததால் திம்பு கோரிக்கையின் நியாயத்தை புரிந்துள்ள புலிப் போராளிகளும் திம்புக் கோரிக்கைளுக்கு ஆக போராடும் தமிழீழ மக்களும், தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகளும் புலித்தலைமைக்கு எதிர்ப்பை தெரிவிப்பார்கள். எல்லா வழிகளிலும் இதற்கு ஆதரவாகவுள்ள தமிழக உலக மக்களிடம் அன்னியப் பட வேண்டி வரும். திம்புக் கோரிக்கையைக் கூட முன்னிறுத்தாது விட்டால் தமிழ் மக்களின் இலட்சியத்துக்கும் புலிப் போராளிகளின் தியாகங்களுக்கும் துரோகம் இழைத்ததாக வரலாற்றில் எழுதப்படும்.

தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரத்தின் மக்களின் சமூக பொருளாதார விடுதலையின் மீது அக்கறை கொண்ட அனைத்து தமிழீழ போராட்ட முன்னணி அமைப்புகளும் தமிழீழ மக்களின் சார்பாக பேச்சு வார்த்தைக்கு ''திம்புக் கோரிக்கைகளை'' அரசியல் தீர்வுத் திட்டமாக அங்கீகரிக்கவும் முன்னிறுத்தவும் வேண்டும். தமது வெளியீடுகள், போராட்டங்களில் திட்டமிட்டு விரிவாக தமிழீழ மக்கள் முன்னும் உலக மக்கள் மத்தியிலும் பிரச்சாரப்படுத்த வேண்டும். மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கவும், பங்கு கொள்ளவும் வேண்டும். இந்தக் கடமையை, தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கும் ஆதரவளிக்கும் சிறீலங்காவிலும், உலகளவிலும் உள்ள மக்கள் அமைப்புக்கள், கட்சிகள், சிறீலங்கா அரசு நடத்தும் யுத்தத்தை நிறுத்த கோரியும், அரசியல் தீர்வுக்கு திம்பு கோரிக்கையை அங்கீகரிக்கக் கோரியும் மக்கள் போராட்டங்களை நடத்த வேண்டும். தங்கள் தங்கள் நாட்டு அரசுகளை நிர்ப்பந்திக்க கோரவேண்டும்.

ஒருங்கிணைப்புக் குழு
தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம்
*PATRIOTIC VANGUARD'S ORGANIZATION OF THAMILEELAM*

''எந்த ஒரு கடமையிலும் ஒரு பொதுவான, பரந்து விரிந்த ஒரு அறை கூவல் கொடுக்கப்படாவிட்டால் பரந்து பட்ட பொது மக்களைச் செயலுக்குத் தட்டியெழுப்ப முடியாது. ஆனால் தலைமைப் பதவிகளில் உள்ளவர்கள் ஒரு பொது அறை கூவலுடன் மட்டும் தம்மை கட்டுப்படுத்திக் கொண்டுவிட்டால் அமைப்புக்கள் சிலவற்றில் அறை கூவல் விடுக்கப்பட்ட வேலையில் ஆழமாகவும் பருண்மையாகவும் நேரடியாகவும் சென்று ஒரு தனி முனையில் உடைத்து புகுந்து அனுபவத்தைப் பெற்று இதர பகுதிகளுக்கு வழிகாட்ட இந்த அனுபவத்தைப் பயன்படுத்தா விட்டால் தமது பொது அறை கூவல் சரியானதா என்பதை சோதிக்கவோ அல்லது அதன் உள்ளடக்கத்தைச் செழுமைப்படுத்தவோ முடியாது. எனவே இதனால் எவ்வித பலனும் கிட்டாமற் போகின்ற அபாயம் இருக்கவே செய்கிறது.

மா. சே. துங்

www.tamilarangam.net

*பின் பக்க அட்டையின் தொடர்ச்சி*

விசுவை, அவர் வாழ்வும் சாவும் தியாகங்களும், இலட்சிய சிந்தனைகளும் நமக்கு தந்திருக்கும் விலை மதிப்பு இல்லா அனுபவங்களை கிரகிக்க வேண்டியுள்ளன. அவரை நினைவு கூறும் நிகழ்ச்சிகளில் அவற்றை செய்ய வேண்டும். அதன் மூலம் அவரது இலட்சிய கனவை நனவாக்க முடியும்.

தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல ஆயிரக்கணக்கான போராளிகள் - தலைவர்கள் தமது உயிரைத் துச்சமாக மதித்து சிறைகளிலும், போர்க்களத்திலும் போருக்கான தயாரிப்பு நிலைகளிலும், பயிற்சி முகாம்களில், கடல் பயணங்களிலும் தமது விலை மதிப்பில்லா உயிரை தமிழீழ மண்ணுக்கு உரமாக்கி சென்றிருக்கிறார்கள். அரசை எதிர்த்த போரில் மட்டுமல்ல, சிறுமுதலாளித்துவ இயக்க தலைமைகளின் அதிகார போட்டி, பொறாமை, வஞ்சகம், சூதுகளால் இயக்கங்களுக்கு இடையே நடந்த மோதலில், படுகொலைகளில் அரசுக்கு காட்டிக் கொடுத்தலில், ஊடுருவல்பற்றிய கண்மூடித்தனமான நடவடிக்கைகள், உள்ளமைப்பு அராஜகம் இவற்றால் தமது பேராளிகளையே போர்முனையில் பின்னிருந்து அழித்தல், புதை குழிக்குள் மூடுதல், சிறைக் கொட்டடிகளில் சாகடித்தல், கடலில் கட்டி போடுதல் மூலம் இந்த சுத்த ராணுவ தலைமைகள் சில நூறு போராளிகளின் உயிரைக் குடித்தனர் என்பதும் இரகசியமல்லவே.

இத்தனை ஆயிரம் போராளிகளின் வீரமரணங்களும், தியாகங்களும் தொடர்ந்து போராடும் மக்களுக்கும் நமக்கும் அவர்கள் கொண்ட கொள்கைகள் இலட்சியங்கள் வெல்லப்பட வேண்டும் என உரமூட்டிக் கொண்டிருக்கிறது. அவர்களது எண்ணங்களும், வீரங்களும் தியாகங்களும் மண்ணோடு மண்ணாக போய் விடக் கூடாது. போராளிகளும் மக்களும் தமது உயிரை ஈய்ந்து வளர்த்த தேசிய சுதந்திர இலட்சியம் சமத்துவ சமூகம் பற்றிய கனவு வெல்லப்பட வேண்டும். அவர்கள் தமக்கல்லாவிட்டாலும் தமது சந்ததியினர்க்கு கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கையில் மண்ணின் மடியில் உயிர் மூச்சை விட்டார்கள்.

எத்தனை தோல்விகள் வந்தாலும், வகைவகையான சமரச எலும்புகள் காட்டப்பட்டாலும் எக்காரணம் கொண்டும் பேராட்டத்தை கைவிட்டு அந்த தியாகிகளுக்கும் மக்களுக்கும் துரோகம் செய்யக் கூடாது. எங்கள் முன்னோர்களின் போராட்ட வரலாற்றிலும் நமது 12 வருட யுத்த அனுபவத்திலிருந்தும் நல்ல பாடங்களை கற்று மேலும் செழுமைப்படுத்தியும், தீயபாடங்களை துணிவாக நீக்கியும், தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை - போரை சிறீலங்கா இனவாத அரசுக்கும், தமிழ் துரோக தலைமைகளுக்கும் எதிராக தொடர வேண்டும். எமது போராட்டத்தை வல்லரசு எதிர்ப்ப போராட்டமாக நடைமுறையில் முன்னெடுக்க வேண்டும். இப்போராட்டங்களை அங்கிகரிக்கும் சிறீலங்கா மக்களின் அரசு எதிர்ப்பு, வல்லரசு எதிர்ப்பு போராட்டங்களுடன் பரஸ்பரம் ஒன்று பட வேண்டும்.

இத்தகைய தூரநோக்குள்ள கொள்கைகளை இன்று முன்னிறுத்தும் தமிமீழ தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகள் மிகச் சிறியளவிலுள்ளன என்றாலும் அவர்கள் ஒன்றுபட்டு திட்டமிட்ட அரசியல் அமைப்பு வழிகளில் போராட்டத்தை நடைமுறையில் கட்டவிழ்த்து விட வேண்டும். அப்போதுதான் கடந்த கால, சமகால சுத்த ராணுவ போராட்டத் தலைமைகளின் தவறுகளால், உள் மோதல்களால், அழிப்புக்களால் துவண்டு போயிருக்கும் பழைய புதிய விடுதலைச் சக்திகள் மீண்டும் வீறுகொண்டெழுவர். உலக மக்களின் உணர்வு பூர்வமான ஆதரவுக் குரல்கள் மீண்டும் ஓங்கி ஒலிக்கும். மக்களிடம் இருந்து கற்றுக் கொள்ளவும் மக்களுக்கு கற்றுக் கொடுக்கவும், தங்களது தவறுகளை மக்கள் முன் வைக்கவும் மாற்றிக் கொள்ளவும் கூடிய மக்கள் போராட்டத்தின் மூலம் கட்டி வளர்க்கப்படும் தேச பக்த புரட்சிகர சனநாயக இயக்மானது தமிழீழ தேசிய சுதந்திரத்தை வெல்லும். மக்களின் சமத்துவ சமூக வாழ்வை படைக்கும். உலகளவில் ஒடுக்கப்படும் போராடும் மக்களின் உறுதியான நண்பனாக விளங்கும்.

தமிழீழ மக்களின் இதுவரை போராட்ட வரலாற்றில் தமது வாழ்வை சிந்திய சிவப்பு உதிரத்தின் மூலம் கொண்ட கொள்கைக்கும் இலட்சியத்துக்கும் உறுதியேற்று தியாகிகளான போராளிகளுக்கும் - தோழர்களுக்கும் நாம் செய்கின்ற உண்மையான அஞ்சலி, புரட்சிகர தொழிலாளி வர்க்க சிந்தனையில் வார்த்தெடுக்கப்படும் தேசபக்த புரட்சிகர கொள்கைக்கும் இலட்சியத்திற்கும் உண்மையாகவிருந்து இறுதிவரை போராடி இலட்சியங்களை வெல்வதேயாகும்.

*தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம் - PVOT*
*PATRIOTIC VANGUARD'S ORGANIZATION OF THAMILEELAM*

"எல்லோரும் இறக்க வேண்டியவர்கள் தான். ஆனால் இறப்பு என்பது அதன் முக்கியத்துவத்தில் வேறுபட்டது. "ஒரே மாதிரி எல்லோருக்கும் மரணம் ஏற்பட்டாலும் அது தை மலையை விட கனமானதாக இருக்கலாம் அல்லது இறகை விட லேசானதாக இருக்கலாம்" என்று 'ஸ்மா சியென்' என்ற புராதன சீன எழுத்தாளர் கூறினார். மக்களின் நலன்களுக்காக மரணமடைவது தை மலையை விடக் கனமானது. ஆனால் பாசிஸ்டுக்களுக்காக உழைத்துச் சுரண்டுவோருக்கும் ஒடுக்குமுறையாளருக்குமாக இறப்பது இறகை விட இலேசானதாகும்."

மா.சே.துங்

# ஒரு அடிமையின் கல்லறையில்...!

— செழியன்

உன் நண்பர்களெல்லாம்
புத்தரின் புத்திரர்களால்
படுகொலை
செய்யப்படுகின்றனர்!

உன் அயலவர்கள்
வதை முகாம்களில் எதிரிகளால்
வதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்!

உன் சகோதரன்
எங்கே என்றே தெரியாமல்
மனித வேட்டையாடும்
மிருகங்களால்
இரவோடு இரவாய்
புதைக்கப்பட்டு விட்டான்!

உன் தங்கையை
ஆட்டுக் குட்டியை தூக்குவது போல்
தூக்கி சென்று
அவள்
கதறக் கதறச் சிதைத்து
விசியெறிந்து விட்டனர்

ஓ! என் நண்ப....!
நீ என்ன செய்து கொண்டிருக்கின்றாய்!
இப்போதும் —
இப்போதும்
நீ
போராடாவிட்டால்?

நான்
ஒரு கல்லை எடுத்து வைக்கிறேன்
உன் சமாதியில் வைப்பதற்காக!

நான்
கவிதையொன்று
எழுதி வைக்கிறேன்
ஒரு அடிமையின்
கல்லறையில்
பொறிப்பதற்காக!
ஒரு அடிமையின்
கல்லறையில்
பொறிப்பதற்காக!

— நன்றி: ஈழமுழக்கம்

www.tamilarangam.net

# தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம் (த.தே.மு.க.)

## தோழர் விசுவை நினைவு கூர்வோம்



சிறீலங்கா சிங்கள பேரினவாத அரசின், தமிழ் இன அழிப்புக்கு இன ஒடுக்குமுறை யுத்தத்துக்கு எதிராக தமிழ் தேசிய இன மக்களின் தேசிய சுயநிர்ணய விடுதலைப் போராட்டம், யுத்தமாக வெடித்ததிலிருந்து 12 ஆண்டுகள் உருண்டோடிவிட்டது. இன்று ''சூரிய ஒளி'' என்ற இராணுவ நடவடிக்கை மூலம் சந்திரிகா அரசு யாழ்பாணத்தை கைப்பற்ற, புலிகள் - மக்கள் மேல் மூர்க்கத்தனமான இன ஒடுக்கு முறை - இன அழிப்பு யுத்தத்தை ஏவியுள்ளது. இனவாத இராணுவத்தின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த நூற்றுக்கணக்கான புலிப்பேராளிகள் தமது இன்னுயிரை தமிழீழ மண்ணுக்கு - போரில் அர்ப்பணிக்கிறார்கள். பல நூற்றுக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள்.

போர்க்களத்தில் உயிர் நீத்த போராளிகளுக்கு புலிகள் தம் நினைவு அஞ்சலிகளை பல இடங்களில் நடத்துகிறார்கள். நினைவுச் சமாதிகளை நிறுவியிருக்கிறார்கள். தமிழ் துரோக குழுக்கள் கூட தமது மரணம் அடைந்தவர்களை சடங்காகவேனும் நினைவு கூர்கிறார்கள். தமிழீழ ஏதிலியர் மறுவாழ்வு கழகம் கூட இத்தகைய சம்பிரதாயங்களைச் செய்கிறது. தேசபக்த புரட்சிகர சனநாயக சக்திகளும் அமைப்பும் அவ்வாறு சடங்காக சம்பிரதாயமாக போராட்டத்தில் தியாகிகளான போராளிகளுக்கும் - தோழர்களுக்கும் சடங்கு வடிவ அஞ்சலி செலுத்த வேண்டியதில்லை. ஆனால் அந்த தியாகிகள், வீரப்புதல்வர்கள் தமது உயிரிலும் மேலான இலட்சிய யுத்தத்துக்காக உயிரைக் கொடுத்து ஊற்றி வளர்த்த விடுதலைத் தீயை போராட்ட பாதையை நாம் நமது தோல்விகள், இன்றைய வீழ்ச்சிகள், பலவீனங்களினால் மறந்து விடக் கூடாது. அந்த விடுதலைத் தீயை - போர்ப்பாதையை மேலும் சமூக வளர்ச்சிக்கு உகந்த முறையில் சமூக அறிவியில் வழியில் வளர்த்தெடுக்க, சீரமைக்க பாடுபடும் நாம், அதற்காக தம் வாழ்வை தியாகம் செய்த போராளிகளை தோழர்களை நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழீழ போராட்டத்தில் சிறு முதலாளித்துவ - சுத்த ராணுவ கண்ணோட்ட வழியை முன்னிறுத்திய பல இயக்கங்களும், புரட்சிகர தொழிலாளி வர்க்க - மக்கள் இராணுவ கண்ணோட்ட வழியை முன்வைத்த சில அமைப்புகளும் இருந்தது தெளிவு. தோழர் விசுவானந்த தேவன் புரட்சிகர வழியை முன்நிறுத்திய சிந்தனையாளர், செயல் வீரர்களில் ஒருவர், முக்கியமானவரும் ஆகும். புரட்சிகர தேசிய விடுதலை இயக்கத்தை கட்ட வேண்டும். மற்றய முற்போக்கு இயக்கங்களுடன் அய்க்கிய முன்னணி ஏற்படுத்தி பொது எதிரியை எதிர்த்துப் போராட வேண்டும். இந்த வல்லரசிய சகாப்தத்தில் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் தேச விடுதலைப் போராட்டம் வல்லராசிகிய எதிர்ப்புப் போராட்டமாக இருந்தால் மட்டும் அது தமிழீழ தேசிய சுதந்திரத்தை, மக்கள் விடுதலையை உத்தரவாதப்படுத்தும். எந்த அன்னிய அரசுகள் துணையுடனும், தலையீட்டுடனும் நமது போராட்டம் முன்னேற முடியாது. சொந்த மக்களில் தங்கி நின்று, உலக மக்களின் ஆதரவுடன் நடத்தப்படும் மக்கள் போராட்டம் தான் சரியான வழி என முன்வைத்துச் செயற்பட்டார். தமிழ் மக்கள் சனநாயக முன்னணி, தமிழீழ தேசிய விடுதலை முன்னணி, தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி, போன்ற அமைப்புக்களை உருவாக்கி வளர்ப்பதிலும் முக்கிய தோழராக விளங்கினார். போராட்டத்தில் பல அக - புற காரணிகளால், எல்லைப்படுத்தல்களால் அவ் அமைப்புக்கள் தீர்மானகரமான போராட்ட தலைமையாக மாறவில்லை. இவை புலிகளால் தடை செய்யப்பட்டும், தோழர்கள் பலர் கைது செய்யப்பட்டும் சிறையில் உள்ளனர். சிலர் மாற்று இயக்கங்களால் கொலை செய்யப்பட்டனர். தோழர் விசு 1986-இன் இறுதியில் தமிழீழத்திலிருந்து தமிழகம் செல்லும் போது கடலில் காட்டிக் கொடுக்கப்பட்டு அரசின் கடற்படை குண்டு வீச்சில் வீரமரணம் அடைந்தார்.

இன்று தமிழீழ போராட்டம் பின் தள்ளப்படுமா? தோற்கடிக்கப்படுமா? என்ற கேள்வி எங்கும் தலைதூக்கி நிற்கிறது. புலிகளே இதற்கான பதிலை சமகாலத்தில் தீர்மானிக்கும் சக்தியாகவுள்ளனர். இத்தனை வருடகால போராட்டத்தின், போரின் அனுபவம் நமக்கு தெளிவாக ஒன்றை சுட்டிக் காட்டுகிறது. தோழர் விசுவின் கண்ணோட்டங்கள் அடிப்படையில் சரியானவை ஆனால் குறிப்பாக ஒவ்வொரு அரசியல் அமைப்பு விவகாரத்திலும் ஆழமான பார்வையும் குறிப்பான அணுகுமுறைகளும் வளர்த்து எடுக்கப்பட வேண்டும் என்பதேயாகும். இன்று ''தேசபக்த புரட்சிகர சனநாயக அமைப்பை'' அதன் தேவையை உணரும். அதற்காக பாடுபடும் புரட்சிகர சனநாயக சக்திகளும், N.L.F.T., P.L.F.T., தோழர்களும் மற்றும் சுத்தமுதலாளிய சிறு ராணுவ அமைப்பை, வழியை நிராகரித்து சிந்திப்பவர்களும் தோழர்

தொடர்ச்சி பின்பக்க அட்டையில்

''அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும் தேசங்களும் தமது விடுதலைக்கான நம்பிக்கையை ஏகாதிபத்தியத்தினதும் அதன் அடிவருடிகளினதும் ''விவேக''த்தின் மீது வைக்கக் கூடாது. தமது அய்க்கியத்தைப் பலப்படுத்தி போராட்டத்தில் அழுந்தி நிற்பதன் மூலம் தான் அவர்கள் வெற்றி பெற முடியும்''.

மா.சே.துங்

**PATRIOTIC VANGUARD'S ORGANIZATION OF THAMILEELAM (PVOT)**